நிமிர்வோம்
தடைகளைத் தகர்த்து...

திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்
அக்டோபர் 2018 / ரூ.20
www.dvkperiyar.com
nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு
கொளத்தூர் மணி
விடுதலை இராசேந்திரன்

வினியோகப் பொறுப்பு
சூலூர் பன்னீர்செல்வம்

இதழ் வடிவமைப்பு
வெல்கின் கணினி
மா. தேன்ராஜ்

அலுவலக முகவரி
95, டாக்டர் நடேசன் சாலை
அம்பேத்கர் பாலம்
மயிலாப்பூர், சென்னை 600 004
தொலைபேசி எண்:
044-24980745

அனைத்துத் தொடர்புகளுக்கும்
இரா. உமாபதி
72992 30363

# “கோயில் பக்கம் திரும்பாதே!”

உலகில் எந்த ஒரு மதமும் தங்கள் மதத்தினர் வழிபாட்டுக்கு வரும்போது ‘உள்ளே வராதே’ என்று தடுப்பது இல்லை. ஆனால் இந்த நாடே இந்துக்களுக்கானது; நாம் அனைவருமே இந்துக்கள்; பிற மதத்தவர் – அன்னியர்” என்று பேசுகிறவர்கள்தான். ‘இந்து’ வழிபாட்டுக்கு உரிய கோயில்களில் சமூகத்தின் சரி பகுதியாக இருக்கும் பெண்களைப் பார்த்து, “கோயிலுக்கு வராதே” என்று தடுக்கிறார்கள். “தீண்டாமை அனைத்து வடிவங்களிலும் தடை செய்யப்படுகிறது” என்று சட்டம் அமுலில் உள்ள ஒரு நாட்டில் அந்த சட்டத்தின் உணர்வுகளை மதித்து உச்சநீதிமன்றம், பெண்களையும் கோயிலுக்குள் அனுமதிக்கலாம் என்று தீர்ப்பளித்த பிறகும், பா.ஜ.க.வும் சங்பரிவாரங்களும் கேரள மாநில காங்கிரசும் கைகோர்த்துக் கொண்டு, பெண்கள் சபரிமலை அய்யப்பன் கோயிலுக்குள் வழிபட வருவதைத் தடுத்து நிறுத்துகிறார்கள்.

‘தீண்டப்படாத மக்கள்’ கோயில் நுழைவுக்குக்கூட சம்பிரதாயங்களைக் காட்டியே பார்ப்பனர்கள் தடுத்தனர். 1947ஆம் ஆண்டு அனைத்து ஜாதியினருக்கும் ‘ஆலயப் பிரவேசம்’ வழங்கும் சட்டம் தமிழ்நாட்டில் கொண்டுவரப்பட்டபோது சம்பிரதாயங்களான ‘ஆகமவிதிகளும்’ மாற்றப்பட்டன என்பது வரலாறு. இந்த மாற்றங்களை உச்சநீதிமன்றமும் அப்போது ஏற்றுக் கொண்டது. ‘தீண்டாமை’ என்பது ஆண்களுக்கு மட்டுமானது அல்ல; பெண்களையும் உள்ளடக்கியதும்தான்.

சபரிமலை கோயிலுக்குள் 1991ஆம் ஆண்டுதான் கேரள உயர்நீதிமன்றம் ஒரு வழக்கு வழியாக அனைத்து வயதுப் பெண்களையும் ‘தரிசனம்’ செய்யும் உரிமையை மறுத்தது. அதற்கு முன்பு அத்தகைய தடைகள் ஏதுமில்லை; ‘நிஷ்காமிய பிரம்மச்சாரி’ அய்யப்பனும் அனைத்து வயதுப் பெண்களும் தரிசிக்க வந்தபோது வெகுண்டு எழுந்து தடுக்கவும் இல்லை. இப்போதும் சபரிமலை தவிர ஏனைய ஊர்களில் உள்ள அய்யப்பன்களும் பெண்கள் நுழைவதைத் தடுக்கவில்லை. 1991இல் வந்த வழக்கில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் ஆட்சி, தேவசம் போர்டு, வாதியாக சேர்க்கப்பட்டு ஆணையர் தாக்கல் செய்த மனுவில் – “மண்டல பூஜை. மகர விளக்கு தவிர்த்து ஏனைய காலங்களில் அனைத்து வயதுப் பெண்களும் அய்யப்பனை தரிசித்தே வருகிறார்கள். அந்த உரிமையைத் தடை செய்யத் தேவையில்லை” என்றே அப்போது நீதிமன்றத்தில் தெரிவித்தனர். நீதிபதிகள் பரிபூரணன், மாரார் ஆகியோரடங்கிய அமர்வு அரசின் நிலைப்பாட்டை ஏற்க மறுத்து பெண்களுக்கு எதிரான தீர்ப்பை வழங்கியது. இந்த வழக்கில் கேரளாவில் ஆட்சி மாற்றங்கள் நடந்தபோதெல்லாம் வெவ்வேறு நிலைப்பாடுகளை ஆட்சிகள் எடுத்தன.

1991இல் பெண்களுக்கு ஆதரவாக நிலை எடுத்த காங்கிரஸ் ஆட்சி, 2016இல் தேர்தலுக்கு முன்பு தனது குரலை மாற்றிக் கொண்டது. 2007இல் ஆட்சிக்கு வந்த இடதுசாரி முன்னணி பெண்கள் நுழைவுக்கு ஆதரவாக நிலைப்பாடு எடுத்தது. மீண்டும் 2017இல் ஆட்சிக்கு வந்தபோதும் பெண்கள் நுழைவுக்கு ஆதரவான நிலைப்பாட்டையே எடுத்தது. காங்கிரஸ் ஆட்சி இரட்டை நிலைப்பாடுகளை எடுத்ததுபோலவே 2006இல் கேரள ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் பெண்களை அனுமதிக்கலாம் என்ற நிலைப்பாட்டையே நீதிமன்றத்தில் மனுவாக தாக்கல் செய்துள்ளனர். இப்போதும்கூட கேரளாவிலிருந்து வெளிவரும் பா.ஜ.க. நாளேடான ‘ஜன்ம பூமி’ இப்போது உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பை வரவேற்றிருக்கிறது.

பெண்களின் வழிபாட்டு உரிமைகளில் இந்த ‘மதவெறி ஆண்கள்’ நடத்தும் விளையாட்டு பெண்களின் சுயமரியாதையை சவாலுக்கு இழுப்பதேயாகும். ஆனால் பெண்கள் இயக்கங்களிடமிருந்து இதற்கு உறுதியான எதிர்வினைகள் ஏன் உருவாகவில்லை? இதுதான் கவலை தரும் கேள்வி.

எந்த ஒரு சமுதாய மாற்றமும் சட்டத்தினால் மட்டும் வந்துவிடாது. அதற்கான மக்கள் இயக்கங்களின் தேவையும் அவசியமும் இருக்கிறது என்பதே இப்பிரச்சினை உணர்த்தும் பாடம். கேரள இடதுசாரிகள் இதில் தவறிவிட்டனர். இனியாவது இடதுசாரி கட்சிகள் இதைத் தீவிரமாக சிந்தித்து தங்கள் அணுகுமுறைகளில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும் என்பது நமது வேண்டுகோள். சமுதாய மாற்றங்களுக்கான தொடர்ச்சியான இயக்கங்களே – அரசியல் செயல்பாடுகளை நிலைநிறுத்தச் செய்யும் என்பதே வரலாறு தரும் படிப்பினை.

# ஒரு பெரியார் தொண்டரின் வாய்மொழி வரலாறு



மா.கோபாலன்

*1940-50களில் சென்னையில் பெரியார் இயக்கச் செயல்பாடுகள் எப்படி இருந்தன?*

14 வயதில் பெரியாரிடம் அறிமுகமாகி பெரியார் இயக்கத்தில் இணைத்துக் கொண்டு 23ஆவது வயதில் பெரியார் ஆணையை ஏற்று தமிழக அரசுப் பணியில் சேர்ந்தவர் மா.கோபாலன். திருத்தணி வட்டம் சிறுமணவூரைச் சேர்ந்தவர். அரசு துணைச் செயலாளராகவும், கடைசியில் புதிய பல்கலைக் கழகங்களுக்குத் தனி அலுவலராகவும் பணியாற்றி, ஓய்வுக்குப் பிறகு சைவப் பற்றாளராக மாறியவர். குடந்தை அருகே திருப்பனந்தாள் சைவ மடத்தில் மடத்தின் சைவ மடாதிபதியிடம் நெருக்கமாகி, சைவச் சொற்பொழிவுகளை நடத்தத் தொடங்கினார். பெரியாரியலிலிருந்து சைவப் பற்றாளராக மாறிய நிலையிலும், பணி ஓய்வுக்குப் பிறகு வாழ்வின் இறுதி காலத்தில் தனது மரணத்துக்கு முன் ‘ஆடும் பருவத்தில் என்னை ஆட்கொண்ட பெரியார்’ என்று பெரியார் இயக்கத்திடம் தனக்கிருந்த ஈடுபாட்டை நெகிழ்ச்சியோடு பதிவு செய்துள்ளார். வாய்மொழி வரலாறாக வெளி வந்துள்ள இந்த நூலில், அக்காலத்தில் சென்னையில் திராவிடர் கழகத்தின் செயல்பாடுகளையும் களப்பணியாற்றிய பெரியார் தொண்டர்கள், அவர்கள் நடத்திய பரப்புரைகளையும், சந்தித்த எதிர்ப்புகளையும் பதிவு செய்கிறது இந்த ஆவணம்.

நூலுக்கு முன்னுரை வழங்கிய சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர் அரசு, “திராவிடர் கழகம் எனும் அமைப்பு சமூகத்தின் அடிமட்டத்தில் செயல்பட்ட அமைப்பு. காங்கிரஸ் போன்ற அமைப்புகள் சமூகத்தின் மேல் மட்டத்தில் பெரும் பகுதி ஆதிக்கச் சாதி அதிகாரங்களுடன் செயல்பட்ட அமைப்புகள். திராவிடர் கழகம் மேற்குறித்த தன்மைகள் எதனையும் உள்வாங்காத் தொண்டர்களின் இயக்கம்” என்று குறிப்பிடுவதோடு, “அடிமட்டச் சமூக இயக்கங்கள் குறித்த பதிவுகள் என்பவை வாய்மொழிப் பதிவுகளாக அமைவது தவிர்க்க முடியாதது. இவ்வகையில் தமிழகத்தின் பொது வெளியில் செயல்பட்ட பெரியாரோடு அணுக்கத் தொண்டனாகச் செயல்பட்ட இந்நூலாசிரியரின் நினைவுப் பதிவுகளாக இந்நூல் அமைகிறது” என்று குறிப்பிடுகிறார். மேலும், “சமகால வரலாற்றுப் பதிவுகளில் நிகழ்வுகளின் உள்மனச் செயல்பாடுகள் பதிவு செய்வது அரிது. தன் வரலாற்றுப் பதிவுகளில்தான் அத்தன்மை வெளிப்படும். அந்த வகையில், கோபாலன் எனும் சாதாரண தொண்டரிடம் பெரியார் எனும் ஆளுமையின் உள்மனச் செயல்பாடுகளின் அரிய பதிவாக இந்நூலைப் புரிந்து கொள்ள வேண்டும்” என்று சரியாக சுட்டிக் காட்டியுள்ளார். அந்நூலி லிருந்து சில பகுதிகள்:

“இரண்டாம் உலகப்போர் நடந்த

போது (1939-45) சுயமரியாதை இயக்கமோ, திராவிடர் கழகமோ தமிழ்நாட்டில் அதிகம் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை.

அப்போது சென்னை மாநகரம் நாற்பது வட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வட்டத்திலும் ஒவ்வொரு இணைக் கழகம் அமைக்கப் போதுமான ஆள் பலம் இல்லை. அதனால் சென்னையை மத்திய சென்னை, தென் சென்னை, கிழக்குச் சென்னை, வடசென்னை என நான்காகப் பிரித்து, ஒவ்வொன்றிலும் ஓர் இணைக் கழகம் அமைக்கப் பெற்றது.

மத்திய சென்னையில் சக்கரியா, அப்துல்காதர், ஆர்பர் சண்முகம் போன்றோரும் தென்சென்னையில் தங்கவேலு, தா. லோகநாதன், டி.எம்.சண்முகம், கபாலி போன்றோரும் கழகப் பணியாற்றினர்.

மேற்கு சென்னையில் என்.எஸ்.தங்கரூபன், ஆர்.கே. முனுசாமி, ஏ.அமிர்தலிங்கம், சி. தங்கராஜ், ‘கன்பட்’ சுப்பிரமணியம், பி.இ. பக்வத்சலம், வேணுகோபால் முதலானோரும் வடசென்னையில் எம்.கே.டி. சுப்பிரமணியம், சுந்தரமூர்த்தி, மு.போ. வீரன், டபிள்.யூ.பி. வேலாயுதம், என். சீவரத்தினம் முதலானோரும் கழகப் பணி செய்தனர்.

ஞாயிற்றுக்கிழமை தோறும் சென்னையில் ஒரு கூட்டம் தவறாமல் நடைபெறும். கழகக் கூட்டங்கள் பெரும்பாலும் பூங்காக்களில் நடைபெறும். இராபின்சன் பூங்கா, படேல் பூங்கா, எட்வர்டு பூங்கா, நேப்பியர் பூங்கா, வாடியா பூங்கா ஆகியவற்றில் நடைபெறும். மடிப்பு மேசை ஒன்றும் மடிப்பு நாற்காலி ஒன்றும் விளக்கு (பெட்ரோமாக்சு விளக்கு அல்லது அரிகேன் விளக்கு) ஒன்றும் கழகத் தோழர் ஒருவர் கொண்டு வருவார். குடிஅரசு வெளியீடுகளை ஒருவர் விற்பார்.

கழகம் சென்னையில் வளர ஆரம்பித்தது.

நாற்பது வட்டங்களாகப் பிரிக்கப் பெற்றிருந்த சென்னை மாநகரம், 120 வட்டங்களாகப் பின்னர்ப் பிரிக்கப் பெற்றது. கழகம் வளர்ச்சியுற்றிருந்ததால் ஒவ்வொரு வட்டத்திலும் இணைக் கழகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

பூங்காக்களில் மடிப்பு மேசை, மடிப்பு நாற்காலி, பெட்ரோமாக்சு அல்லது அரிக்கேன் விளக்கு வைத்துக் கழகக் கூட்டங்களை நடத்திய எங்களுக்குப் பெரிய மாற்றம் புலப்பட்டது.

வெளியூர்களிலிருந்து பேச்சாளர்களை அழைத்துப் பொதுக் கூட்டங்கள் போட ஆரம்பித்தோம். தென்னார்க்காடு மாவட்டத்தில் இருந்து எம்.கே. குப்தா என்பவர் வருவார். நல்ல பேச்சாளர். சமற்கிருதத்தில் சிரோன்மணி பட்டம் பெற்றவர். அரிய கருத்துகளை நகைச்சுவை மிளிரப் பேசுவார். பட்டுக்கோட்டையில் டேவிஸ் என்பவர் இருந்தார். ஒவ்வோர் ஆண்டும் மாளய அமாவாசையின்போது குடந்தையில் குளக்கரையில் உட்கார்ந் திருப்போரின் பூணூல் எல்லாம் வெட்டிக் குளத்தில் போட்டு விடுவார். கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப் படுவார். நல்ல பேச்சாளர்.

குடந்தையில் எஸ்.கே.சாமி என்பவர் இருந்தார். நல்ல சாரீரம் - சரீரமும்கூட. அம்மன் பாடல்களை இனிமையாகப் பாடுவார். இசையோடு நகைச்சுவையும் அவர் பேச்சில் மிளிரும்.

மதுரையில் பொன்னம்மாள் சேதுராமன் தம்பதியினர் இருந்தனர். சேதுராமன் கையில் டேப் வைத்துக் கொண்டு பாடுவார். பொன்னம்மாளும் பாடுவார். இசைக்கு ஏற்றவாறு சேதுராமன் டேப்பை அடித்து ஒலி எழுப்புவார். இவர்கள் இருவரையும் மதுரையில் இருந்து வரவழைத்து என் வீட்டில் தங்க வைத்திருந்தேன். அவர்களுக்குக் கைக் குழந்தை ஒன்று இருந்தது.

முதலில் எங்கள் இணைக்கழகம் சார்பில் குயப்பேட்டையில் ஒரு கூட்டம் போட்டோம். பின்னர் சென்னையின் பல பகுதிகளில் அவர்களை வைத்துப் பொதுக்

கூட்டங்கள் நடத்தப் பெற்றன.

இப்பெரும் வளர்ச்சிக்குக் காரண மானவர்கள் புளியந்தோப்பு திராவிடர் கழகத்தைச் சேர்ந்த அச்சுதன், கசேந்திரன், மதுரமணி ஆகியோரும் என்னைப் பெரியாரிடம் கொண்டு போய்ச் சேர்த்த ஏகாம்பரத்தின் மூத்த மகன் அமிர்த லிங்கமும், கேசவன், நடராசன், வேணுகோபால் ஆகியோரும் ஆவர்.

சென்னையில் மட்டும் அன்று தமிழகத்தில் எல்லாப் பகுதிகளிலும் இப்பெரும் வளர்ச்சியைக் காண முடிந்தது. சேலத்தில் குகை என்ற பகுதியில் வசித்த செகதீசன், ரோசு அருணாசலம், சித்தையன் ஆகியோர் கழக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டனர்.

சேலம் அரசினர் கலைக் கல்லூரியில் முதல்வராக இருந்த பேராசிரியர் அ.இராமசாமி (கவுண்டர்) திராவிடர் கழகத்தில் மிகுந்த பற்றுக் கொண்டவர். அடிக்கடி பெரியாரைத் தம் கல்லூரிக்கு வந்து சொற்பொழிவாற்றுமாறு அழைப்பார். ஒருமுறை அக்கல்லூரியில் பெரியார் ஆற்றிய சொற்பொழிவு 'தத்துவ விளக்கம்' என்னும் பெயரில் நூலாக வெளி வந்துள்ளது. அதனைப் பல அறிஞர் பெருமக்கள் பாராட்டியுள்ளனர்.

கோவையில் பழம்பெரும் சுயமரி யாதை வீரர் அ.அய்யாமுத்து, தென்னார்க் காடு மாவட்டத்தில் கிருட்டிணசாமி, வடஆர்க்கடு மாவட்டத்தில் திருநாவுக்கரசு, தஞ்சாவூர் மாவட்டத்தில் இராசகோபால், நல்லதம்பி, நீடாமங்கலம் ஆறுமுகம், மதுரை மாவட்டத்தில் எஸ். முத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் முஸ்தபா போன்றோர் பெருந் தியாகங்கள் செய்து திராவிடர் கழகத்தை வளர்த்தனர்.

திருச்சியில் 'வக்கீல் ஐயா', டி.பி. வேதாசலம் திராவிடர் கழகத்தில் செயல் தலைவராக இருந்து இறுதி நாள் வரை பாடுபட்டார். அங்கே டி.டி.வீரப்பா என்பவர் மூவண்ணத்தில் பெரியார் படத்தை அச்சிட்டுக் குறைந்த விலையில் கழகத் தோழர்களுக்குக் கொடுத்தார்.

திராவிடர் கழகம் வளர்வதற்கு இந்தி எதிர்ப்புப் போராட்டம் பெரும் காரணமாக இருந்தது. 1937-39ஆம் ஆண்டுகளில் சென்னை மாநிலத்தில் முதல்வராக இருந்த இராசகோபலாச்சாரி இந்தி மொழியைத் தமிழ் மக்கள் மீது திணித்தார்.

திராவிடர் கழகம் இந்தித் திணிப்பினை மிக வன்மையாகக் கண்டித்தது. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அப்போராட்டத்துக்குத் தலைமை தாங்கினார். அப்போராட்டத்தில் பங்கு கொண்டு பல தோழர்கள் சிறைக்குச் சென்றனர். தாளமுத்து, நடராசன் என்னும் இருவர் சிறைக் கொடுமை தாளாமல் உயிர் விட்டனர்.


மறைமலை அடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார், புலவர் அருணகிரியார் முதலான தமிழறிஞர்கள் பலர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியாருக்குப் பெருந்துணையாக இருந்தனர்.

'இந்தியாவில் பலரால் பேசப்படும் மொழி இந்தி. எனவே அதுவே இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டும்' என்று இந்தி வெறியர்கள் கூறி வந்தனர். இந்த வாதத்தைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. "இந்தி பொது மொழியா?" என்ற அரியதோர் ஆய்வு நூலை மறைமலையடிகள் எழுதி அவ்வாதத்தைத் தூளாக்கினார்.

மீண்டும் 1948-49ஆம் ஆண்டு, அப்போது சென்னை மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரஸ் கட்சி இந்தி மொழியைத் தமிழ் மக்கள் மீது திணித்தது. அப்போதும் திராவிடர் கழகம் இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட்டம் நடத்தியது. சென்னை சௌகார்பேட்டையில் உள்ள தொண்டை மண்டல துளுவ வேளாளர் பள்ளியின் முன் நாள்தோறும் மறியல் நடைபெற்றது.

மறியல் செய்த கழகத் தோழர்களைக் கைது செய்யவில்லை அன்றைய அரசு. அவர்களை வண்டிகளில் ஏற்றி சென்னைக்கு வெளியே 100-150 மைல்களுக்கு அப்பால் தண்ணீர் இல்லாத காட்டில் வெட்டவெளியில் கொண்டு போய்விட்டுவிட்டனர்.

பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரை யாரின் துணைவியாரான அலமேலு அம்மையாரை அவ்வாறே வண்டியில் ஏற்றிக் கொண்டு போய்த் திண்டி வனத்துக்கு அப்பால் விட்டுவிட்டனர். அப்போது அவர் நிறைமாதக் கர்ப்பிணி.




சென்னை மவுண்டு சாலையில் (இப்போது அண்ணா சாலை) இருக்கும் காயிதே மில்லத் கல்லூரியில் (அப்போது அது முசுலீம் கல்லூரி - ஆண்களும் பெண்களும் படித்தனர்) நான் படித்துக் கொண்டிருந்தேன். நானும் கழகத்தைச் சேர்ந்த வேறு சில மாணாக்கர்களும் இரண்டு வண்டிகளில் ஏறிக் கொண்டு போலீசு வண்டியின் பின்னால் சென்றோம். அலமேலு அம்மையாரைச் சென்னைக்குக் கொண்டு வந்தோம். அவருடைய வீடு சேப்பாக்கம் பாரகன் தியேட்டர் பக்கத்தில் இருக்கும் தெருவில் இருந்தது. அங்குக் கொண்டு வந்து அவருடைய வீட்டில் விட்டோம்.

புரட்சிக் கவிஞர் பாதிதாசன் இந்தியை எதிர்த்து மறியல் செய்யும் கழகத் தோழர்களை ஊக்குவிக்கும் முத்தான பல பாடல்களை இயற்றித் தந்தார்.

*"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை – எமை*
*மாட்ட நினைக்கும் சிறைச்சாலை*
*தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம்–உயிர்த்*
*தித்திப்பை எண்ணிடப் போவதில்லை.*

என்பன போன்ற பாடல்கள்

*எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி*
*எத்தனை பட்டாளம் கூட்டி வரும்"*

என்று திராவிடர் கழகத் தோழர்களும் தமிழ்நாட்டு மக்களும் கேட்டனர்.

போராட்டம் தீவிரம் அடைந்தது. மாநில அரசினால் போராட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை."

..............................................

பெரியார் நீதிமன்றத்துக்குப் போவார். தம் பெட்டி, படுக்கையுடன் போவார்.

நீதிபதியைப் பார்த்துச் சொல்வார், "எனக்கு உங்கள் மீது நம்பிக்கை இல்லை. உங்கள் சட்டங்களின் மீது நம்பிக்கை இல்லை; நீங்கள் என்ன தண்டனை கொடுக்க முடியுமோ அந்தத் தண்டனையைக் கொடுங்கள். அந்தத் தண்டனையை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்று.

அடிக்கடி வெளியூர்களுக்குப் பயணம் செய்யும் பெரியாருக்கு வசதியான வேன் ஒன்று தேவைப்பட்டது. தூங்குவதற்கும் இளைப்பாறுவதற்கும் படிப்பதற்கும் வசதி வேண்டும். சென்னை அண்ணாசாலையில் உள்ள சிம்சன் நிறுவன உரிமையாளர் அனந்தராம கிருட்டிணனிடம் வேனைத் தயார் செய்யச் சொன்னார். வேன் தயாரானதும் மீரான் சாகிப் தெருவில் உள்ள பெரியாரிடம் காட்டி ஒப்புதல் பெற அதனைக் கொண்டு வந்தார். வேனைப் பார்த்ததும் பெரியாருக்கு மிகுந்த திருப்தி. அனந்தராமகிருட்டிணனிடம் தங்களுக்குப் பணம் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று கேட்டார்.

பெரியாரிடம் பணம் வாங்க அவர் மறுத்துவிட்டார். "ஐயா, நீங்கள் வகுப்புவாரித் திட்டத்தை வலியுறுத்தி வருகிறீர்கள். பிராமணர்களாகிய எங்களுக்கு கல்வித் துறையிலும்

உத்தியோகத்திலும் 3 விழுக்காடுதான் தரவேண்டும் என்று கூறி வருகிறீர்கள். அதனால் என் சமூகப் பிள்ளைகளுக்குப் படிக்கவோ வேலைக்குப் போகவோ தமிழ்நாட்டில் வாய்ப்பு இல்லை. எனவே, அவர்கள் எல்லாம் பிற மாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்று மிகவும் வசதியாக உள்ளனர். இதற்கு நானும் என் சமூகமும் உங்களுக்கு என்ன கைம்மாறு செய்வதென்றே தெரியவில்லை. இந்த வேனுக்காக நான் செலவு செய்தது மிகவும் சொற்பம்'' என்றார். கடைசி வரை பெரியார் எவ்வளவு வற்புறுத்தியும் அவர் பணம் ஒன்றும் வாங்கவே இல்லை. பெரியாருடைய பிரச்சாரம் எவ்வாறெல் லாம் வேலை செய்கிறது என்பதனை இந்நிகழ்ச்சி எங்களுக்கு உணர்த்திற்று.

பார்ப்பனர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க வெளி மாநிலங்களுக்கு அனுப்புகின்றனர். வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர். நியூசிலாந்து நாட்டுக்குப் பல பார்ப்பனர்கள் குடியேறி அங்குத் தங்கள் பிள்ளைகளை மருத்துவக் கல்லூரிகளில் படிக்க வைப்பதை அங்குச் சென்றபோது நான் நேரில் பார்த்தேன்.

தமிழ்நாட்டு மக்கள் தொகையில் மூன்றே விழுக்காடு உள்ள பிராமணர்கள் 90-95 விழுக்காடு கல்லூரிகளிலும் அரசு அலுவலகங்களிலும் சேர்ந்து ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இவ்வாதிக்கம் 1916ஆம் ஆண்டு நீதிக்கட்சி தோன்றுவதற்குக் காரணம். அவர்கள் 1937ஆம் ஆண்டு வரை ஆட்சிப் பொறுப்பில் இருந்தனர். பார்ப் பனரல்லாதாருக்கு அவர்கள் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது. அதனைப் பெரியார் தொடர்ந்து மேற்கொண்டார். அதனால்தான் சிம்சன் கம்பெனி உரிமையாளர் அனந்தராமகிருட்டிணன் தம் கம்பெனியில் உருவாக்கிய வேனுக்கான பணத்தைப் பெரியாரிடம் வாங்க மறுத்து விட்டார். பல பார்ப்பனப் பெரியவர்கள் இதனை மனப்பூர்வமாக உணர்கின்றனர்.

..........................

"1946, 1947, 1948ஆம் ஆண்டுகளில் திராவிடர் கழகத்துக்கு அசுர வளர்ச்சி. பூங்காக்களில் சிறிய அளவில் நடத்தப் பெற்று வந்த கூட்டங்கள் பொது இடங்களிலும், சாலைச் சந்திப்புகளிலும், விளையாட்டு இடங்களிலும் நடத்தப் பெற்றன. ஒலிபெருக்கிகள் அமைத்து மின் விளக்குகளால் அலங்கரிக்கப் பெற்ற மேடைகளில் மாலை 5-6 மணிக்குத் தொடங்கி இரவு 10-11 மணி வரை கூட்டங்கள் நடந்தன. பெரியார் சென்னை யில் இருக்கும் போது அவரை வைத்தே பொதுக் கூட்டங்கள் நடத்தப் பெற்றன.

பள்ளி மாணாக்கர்கள், கல்லூரி மாணாக்கர்கள் ஆகியோர் திராவிடர் கழகத்தில் பங்கு கொண்டனர். அறிஞர் அண்ணா, எம்.ஏ., இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., க. அன்பழகன், எம்.ஏ., டார்பிடோ ஏ.பி. சனார்த்தனம், எம்.ஏ., மா. இளஞ்செழியன், எம்.ஏ., (இவர் காஞ்சி மணிமொழியாருக்கு மகன்; பின்னர், சென்னையில் உள்ள பச்சையப்பன் கல்லூரியில் பொருளாதாரத் துறையில் விரிவுரையாளராகச் சேர்ந்து விட்டார்) மதியழகன், பி.ஏ., எனப் பல பட்டதாரிகள். இவர்கள் அனைவரும் சிறந்த மேடைப் பேச்சாளர்கள், சிறந்த எழுத்தாளர்கள்.

மாத இதழ்களும் வார இதழ்களும் பல்கிப் பெருகின. அறிஞர் அணணாவின் 'திராவிட நாடு', இரா. நெடுஞ்செழியனின் 'மன்றம், மா.இளஞ்செழியனின் "போர் வாள்", சுப்பிரமணியனின் "முருகு", சி.பி. சிற்றரசுவின் "தீப்பொறி", என்.வி. நடராசனின், "திராவிடன்" எனப் பல இதழ்கள் வெளி வந்தன.

ஒரேபெயரில் இரண்டு இதழ்களும் வெளி வந்தன. 'தீப்பொறி' என்ற பெயரில் வேலூரில் இருந்து ஓர் இதழும் சென்னை யில் இருந்து ஓர் இதழும் வெளி வந்தன.

சென்னை சூளையில் பாலசுப்பிர மணியம் 'குஞ்சு' என்ற பெயரில் வார இதழ் ஒன்றினை நடத்தி வந்தார். இவர் வங்கி ஒன்றில் காசாளராகப் பணியாற்றி வந்தார். தூத்துக்குடியில் இருந்து

ஆர்.எஸ்.தங்கப்பழம் என்பவர் 'கிளர்ச்சி' என்ற பெயரில் வார இதழ் ஒன்றினை நடத்தி வந்தார். அந்த இதழ் ஓரளவுக்கு மஞ்சள் பத்திரிகைபோல் நடத்தப் பெற்று வந்தது. தூத்துக்குடியில் சாமி என்னும் கழகத் தோழர் கொலை செய்யப் பட்டதைத் தொடர்ந்து ஆர்.எஸ். தங்கப்பழம் வழக்கில் சிக்கிக் கொண்டார். அதனால் அவர் நடத்தி வந்த 'கிளர்ச்சி' இதழும் நிறுத்தப்பட்டது.

திருச்சி, தூத்துக்குடி, மதுரை போன்ற நகரங்களில் திராவிடர் கழக மாநாடுகள் நடத்தப் பெற்றன. மதுரையில் தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற மாநாட்டுப் பந்தலைக் காலிகள் கொளுத்திவிட்டனர். மதுரை எஸ்.முத்து தம் தோழர்களுடன் தீ கொழுந்துவிட்டெரியும் மாநாட்டுப் பந்தலைப் பிரித்துப் போட்டு உயிர்ச் சேதத்தையும், பொருட் சேதத்தையும் பெரும் அளவில் தவிர்த்தார்.

தூத்துக்குடியில் மாநாடு நடக்கும் போது கம்யூனிஸ்டு கட்சியினர் இரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடங்கினர். மாநாட்டுக்குத் தமிழகத்திலிருந்து சென்ற பல்லாயிரம் கழகத் தோழர்களும் அவர்கள் குடும்பத்தினரும் தங்கள் ஊர்களுக்குச் செல்ல முடியாமல் பெரிதும் தவித்தனர்.

..........................

**'முரளி கேப்' மறியல்**

*சென்னை திருவல்லிக்கேணியில் 'முரளி கபே' என்ற ஓட்டல் 'பிராமணாள் கபே' என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது. 'பிராமணர்' என்ற பெயரில் 'சூத்திரர்' இழிவுபடுத்தப்படும் இந்தச் சொல்லை நீக்க வேண்டும் என்று திராவிடர் கழகம் சார்பில் 210 நாள் தொடர் மறியல் போராட்டம் நடந்தது. 837 பேர் கைது செய்யப்பட்டனர். இந்தத் தொடர் மறியல் குறித்து பெரியார் தொண்டர் கோபால் பதிவு செய்துள்ள கருத்துகள்:*

"மறியல் செய்யும் தொண்டர்களுக்கு ஐந்து வாரம் சாதாரண சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. மறியல் எந்தவித மாற்றமும் இன்றித் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

ஒரு நாள் தொண்டர்கள் முரளி கேப் உணவுக் கடை முன் சென்றதும் மாடியில் இருந்து வெந்நீரையும் கொதிக்கும் எண்ணெய்யையும் கடை ஊழியர்கள் ஊற்றினர். பதிலுக்குக் கீழே நடைபாதையில் போடப்பட்டிருந்த சிமெண்டுப் பாறைகளைத் துண்டு துண்டாக உடைத்துக் கடைக்கு உள்ளேயும் மேலே மாடியிலேயும் அடிக்க ஆரம்பித்தார்கள் கழகத் தோழர்கள்.

அமைதியாக நடந்து வந்த மறியலில் வன்முறை தலைதூக்க ஆரம்பித்தது. சென்னைக் கடற்கரைக்குச் சென்று விட்டு மாலையில் வீட்டுக்குத் திரும்புவோர் மாநிலக் கல்லூரி அருகில் வந்ததும் சிலர் கால்களில் இருந்து இரத்தம் கொட்டும். ஏன் வருகிறது என்று அவர்களுக்குத் தெரியாது. அதனால் கடற்கரையில் இருந்து அந்த வழியாக வருவோர் எண்ணிக்கை பெருமளவில் குறையத் தொடங்கியது.

..................................

இவ்வளவு களேபரங்களுக்குப் பின்னர் ஒரு நாள் முரளி கேப் உரிமையாளர் பெரியார் வீட்டுக்கு வந்தார்.

உங்களைப் போன்ற பெரியவர்கள் மறியல் செய்தால் என் கடைக்கு நல்ல விளம்பரம் ஆகும். வியாபாரமும் பெருகும் என்று சொன்ன அதே முரளி கேப் உரிமையாளர் தான் பெரியார் வீட்டுக்கு வந்தார். காரிலிருந்து பல தட்டுகளை எடுத்தார்கள் பணியாளர்கள். ஒரு தட்டில் பெரிய பூமாலை, ஒரு தட்டில் இனிப்பு வகைகள், ஒரு தட்டில் வெற்றிலை - பாக்கு எனப் பல தட்டுகள். மாடியில் கொண்டு போய்ப் பெரியார் முன் வைத்தார் அவர். "ஐயா, நான் உங்களிடம் மாரியாதைக் குறைவாக நடந்து கொண்டேன்; உங்களுக்கும் உங்கள் கட்சிக்காரர்களுக்கும் நான் நிறையக் கஷ்டம் கொடுத்து விட்டேன். என்னைத் தாங்கள் மன்னிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

முரளி கேப் உரிமையாளருக்கு இந்தத் திடீர் மனமாற்றம் ஏற்பட்டதற்கு இரண்டு காரணங்கள் கூறப்பட்டன. ஒன்று முரளிகேப் முன் திராவிடர் கழகத் தொண்டர்கள் மறியல்

செய்யத் தொடங்கிய நாளிலிருந்து அவ்வுணவுக் கடையில் பணியாற்றி யோர் செய்த கலவரங்கள், காவல் துறை யினர் பாதுகாப்புக் கெடுபிடி ஆகிய வற்றால் அப்பகுதி வாழ் மக்கள் அச்ச மின்றி நடமாட முடியாத சூழ்நிலை, பல கடிதங்கள், தந்திகள் அனுப்பியும் மைய அரசு நடவடிக்கை ஒன்றும் உருப் படியாக எடுக்காதது ஆகியவற்றால் முரளிகேப் உரிமையாளர் நிர்ப்பந்தப் படுத்தப்பட்டார் என்பது.

**மற்றொன்று காஞ்சி மடம் பீடாதிபதி சந்திரசேகர் பரமாச்சாரியர் சுவாமிகள் முரளிகேப் உரிமையாளரைப் பெரியாரிடம் சென்று மன்னிப்புக் கேட்குமாறு கட்டளையிட்டார் என்பது.**

காரணம் எதுவாக இருந்தாலும் முதல் நாள் பெரியார் கேட்டுக் கொண் டவாறே 'பிராமணர்கள் சாப்பிடு மிடம்' என்னும் வார்த்தைகள் பெயர்ப் பலகையிலிருந்து நீக்கப் பட்டுச் 'சைவ உணவகம்' என்ற வார்த்தைகள் எழுதப்பட்டன. இதனை முதலிலேயே செய்திருந்தால் நாளொன்றுக்கு ஆறு பேர் வீதம் பல மாதங்கள் அங்கு மறியல் செய்து சிறைக்குச் சென்றிருக்கும் அவசியமே இருந்திருக்காது.

சர். சி.பி. இராமசாமி அய்யர் திவானாக இருந்தபோது திருவாங்கூர் கோயில்களில் தாழ்த்தப்பட்ட மக்களும் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று வைக்கத்தில் பெரியாரும் அவரின் துணைவியாரான நாகம்மையும் செய்த மறியல் போராட்டம் போன்றே இப்போராட் டமும் பெரியாருக்கு மாபெரும் வெற்றியைத் தேடித் தந்தது."

ஆடும் பருவத்திலேயே எனை ஆட்கொண்ட
பெரியார் நூலிலிருந்து.

பதிப்பகம் : ஞானசம்பந்தம் பதிப்பகம்
110, 5ஆம் தெரு, தலைமைச் செயலகக்
குடியிருப்பு, கிள்ளியூர், சென்னை-600 010.
அலைபேசி : 94425 54807
பேசி : 044 - 26423669

## நீர் நிலைகளை மாசுபடுத்தும் 'கடவுள்' கரைப்புகள்

*பல்வேறு வகையில் வெளியேறும் கழிவுநீரும் நீர்நிலைகளை மாசுபடுத்துகிறது. ஆனால், கடவுள் சிலைகளைக் கரைப்பதால் ஏற்படும் ஆபத்தைவிடக் குறைவான பாதிப்பையே கழிவுநீர் ஏற்படுத்துகிறது என்று மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்திருக்கிறது.*

*களிமண்ணால் செய்யப்பட்ட சிலைகள், நீர்நிலைகளுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. ஆனால், செயற்கைக் களிமண் (பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ்), சுட்ட களிமண், காகிதக்கூழ் போன்றவற்றால் செய்யப்படும் சிலைகள், நீர்நிலைகளுக்குப் பெரும் ஆபத்தை விளைவிக்கும். தவிர, இந்தச் சிலைகளைச் செய்யவும் அலங்கரிக்கவும் பயன்படுத்தப்படும் ரசாயனப் பூச்சுகள், வண்ணத் திரவங்கள், இரும்புக் கம்பிகள், பல வகையான துணி ரகங்கள், செயற்கை மணிகள் - மாலைகள் போன்றவையும் நீர்நிலைகளைப் பெரிய அளவில் மாசுபடுத்து கின்றன.*

*ரசாயன வண்ணங்களில் பாதரசம், காட்மியம், குரோமியம், துத்தநாகம், ஆர்சனிக், காரீயம் போன்ற கன உலோகங்கள் நிறைந்திருக்கும். இவற்றில் பல புற்றுநோயை ஏற்படுத்தக் கூடியவை. இவை நீரில் கரையும்போது அங்கு வாழும் உயிரினங்களும் அந்தப் பகுதியைச் சுற்றி வாழும் பறவை யினங்களும் தாவரங்களும் பாதிக்கப்படும். அந்த நீரில் வளர்ந்த மீனைச் சாப்பிடுவதன் மூலம் நமக்கும் அந்த வேதிப் பொருட்கள் கடத்தப்படும்.*

*ஒவ்வோர் ஆண்டும் ஹுக்ளி நதியில் மட்டும் கிட்டத்தட்ட 15 ஆயிரம் துர்கைச் சிலைகள் கரைக்கப்படுவதாக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்திருக்கிறது. இதன்மூலம் 16.8 டன் வார்னிஷ், 32 டன் பெயிண்ட் போன்றவை நீரில் கலக்கின்றன. தசரா முடிந்த பிறகு எண்ணெய், கிரீஸ் போன்றவற்றின் அளவு ஒரு லிட்டருக்கு 0.99 மி.கி. அளவுக்கு உயர்வதாகவும் கன உலோகங்களின் அளவு 0.104 மி.கி. அளவுக்கு உயர்வதாகவும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்திருக்கிறது. பெரிய நதியான ஹுக்ளியில் கலக்கும் மத்திய மாசுப் பொருட்களின் அளவே அதிர்ச்சி தருகிறது என்றால், நமக்கு அருகில் இருக்கும் கிணறு, குளம், ஏரி போன்ற சிறு சிறு நீர்நிலைகளில் சிலைகளைக் கரைப்பதால் ஏற்படும் ஆபத்தின் அளவைப் புரிந்துகொள்ளலாம்.*

*தவிர செயற்கைப் பொருட்களால் செய்யப்படும் கடவுள் சிலைகள், முழுவதுமாக நீரில் கரைவதில்லை. அது நீர்நிலையின் ஆழத்தைக் குறைத்து, நீரோட்டத்தைப் பாதிக்கும். சிலைகளைச் செய்யப் பயன்படுத்தப்படும் பொருட்களால் சில நேரம் நீரில் கரையும் நுண்ணூட்டச் சத்துகளின் அளவு அதிகரித்து, 'யூட்ரோஃபிகேஷன்' ஏற்படலாம்.*

*அதாவது அளவுக்கு அதிகமான நுண்ணூட்டச் சத்துகளால் நீர்நிலைகளில் திடீரென ஆல்கே, ஆகாயத் தாமரை போன்றவை வளர்ந்து நீரின் மேற்பரப்பு முழுவதும் படர்ந்துவிடும். இதனால் நீரில் இருக்கும் ஆக்ஸிஜனின் அளவு குறையும். நீரினுள் சூரிய ஒளி புகுவதும் தடுக்கப்படும். இதனால் நீர்வாழ் உயிரினங்கள் இறக்க நேரிடும்.*

பள்ளிக்குச் செல்லும் வழியில் கல்லூரி மாணவன் ஒருவன் தன்னைச் சில நாட்களாகப் பின்தொடர்ந்து வருவதை ரேவதி கவனித்தாள். அவனைத் திரும்பிப் பார்க்க வேண்டும்போல் தோன்றியது. ஆனால், அவன் அதைக் கவனித்துவிடுவானோ என்று பதற்றமாகவும் இருந்தது.

தில்லை. மனரீதியாகவும் பலவிதமான உணர்வுகளைத் தூண்டுகின்றன. அதிலும் குறிப்பாகப் பாலியல்ரீதியான உணர்வுகள். டி.வி.யில் ஒளிபரப்பாகும் படங்களும் பாலியல் உணர்வைத் தூண்டுகின்றன. நண்பர்களும் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் பார்ப்பது பற்றி, காதல் வயப்படுவது பற்றி எல்லாம் கதை

# ‘அவர்களின் கைப்பிடித்து நடப்போம்’

## ‘டீன்ஏஜ்‘ குழந்தைகளின் பாலின ஈர்ப்பை பெற்றோர்கள் எப்படி எதிர்கொள்வது?

பிப்ரவரி 14 காதலர் தினத்தன்று அவன் ஒரு வாழ்த்து அட்டையை அவளிடம் கொடுத்தான். கைகள் தீண்டியபொழுது கிடைத்த ஸ்பரிசம் அவளுக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது. கூடவே யாராவது பார்த்து விடுவார்களோ என்று பயமாகவும் இருந்தது.

பிறந்த நாளன்று புது டிரெஸ் அணிந்து அத்தை வீட்டுக்கு இனிப்பு கொடுக்கப் போனாள் ஸ்வேதா. அத்தை, மாமாவிடம் கொடுத்துவிட்டு சந்துருவைத் தேடினாள். அவன் அறைக்குள் இருப்பதாக அத்தை சொன்னார். கதவுக்குப் பின்னால் மறைந்து இருந்தவன் அவள் உள்ளே நுழைந்தவுடன் ‘பே’ என்று பயமுறுத்தினான். அவள் பயந்துவிட்டாள் என்று தெரிந்தவுடன், ‘சும்மா’ என்று சொல்லி விட்டு, இனிப்பை எடுத்துச் சாப்பிட்டான். இன்னொரு இனிப்பை எடுத்து அவளுக்கு ஊட்டிவிடப் போனான். அவள் பின்னால் போவதைப் பார்த்து சட்டென்று அருகே வந்து கன்னத்தில் முத்தமிட்டு, “அம்மா டிபன் ரெடியா?” என்று கேட்டபடியே போனான். ஸ்வேதாவுக்கு அதிர்ச்சியோடு மகிழ்ச்சியாகவும் இருந்தது.

நம் கலாச்சார மதிப்பீடு, பெண்களின் பாலியல் துன்புறுத்தல்களைப் பேசுவதுபோல், அவர்களுக்குள் எழக்கூடிய பாலியல் இச்சைகளைப் பற்றிப் பேசுவதில்லை.

வளரிளம் பருவத்தில் ஹார்மோன்கள் உடல்ரீதியான வளர்ச்சியை மட்டும் தூண்டுவ

கதையாகப் பேசி ஆவலைத் தூண்டிவிடு கின்றனர். இந்த மும்முனைத் தாக்குதல்களில் இளையவர்கள் சிக்கித் தவிக்கும்போது பெரியவர்களோ, “பார்க்காதே, பேசாதே, பழகாதே” எனத் தடை போடுகிறார்கள்.

நம் வளரிளம் பருவத்தினர் மிகவும் பாவம். பாலியல் ஆசைகள் ஒரு பக்கம் இருக்க, பயமும் பதற்றமும் குற்ற உணர்வும் அவர்களை எப்போதும் குழப்பமான மனநிலையிலேயே வைத்திருக்கிறது.

பெரியவர்கள் சுலபமாக இதை ‘வயசுக் கோளாறு’ என்று சொல்லிவிடுகிறார்கள். கோளாறு என்ற கண்ணோட்டத்தில் பார்த்து விடுவதால் பெரியவர்கள் இதைக் குழந்தை களிடம் இருக்கும் குறையாகப் பார்க்கிறார்கள். திட்டித் திட்டி அவர்களைக் குற்ற உணர்விலும் ஆழ்த்துகிறார்கள்.

ஒருபுறம் இளமையின் வேகம், மறுபுறம் பாலியல் குறித்த சமூக மதிப்பீடுகளால் ஏற்படும் குற்றவுணர்வு. எழக்கூடிய சந்தேகங்களைப் பெரியவர்களிடம் கேட்க தயக்கம், பயம். அப்படியே மீறி கேட்டாலும் பெரியவர்களின் பதில்கள் திருப்தியாகவும் ஆதரவாகவும் இருப்ப தில்லை. பெரியவர்கள் எரிச்சல்படுகிறார்கள், கோபப்படுகிறார்கள். “உனக்குச் சின்ன வயசு. இதையெல்லாம் யோசிப்பதும் பேசுவதும் தவறு” என்கிறார்கள். வளரிளம் பருவத்தினரின் மொத்த நடத்தையையே சந்தேகப்படுகிறார்கள்.

பெரியவர்களும் இதையெல்லாம்

கடந்துவந்தவர்கள்தானே. நமக்கும் நம் 'டீன் ஏஜ்' பருவத்தில் இத்தகைய உணர்வுகள் வந்ததில்லையா?

எதிர்ப் பாலினர் மீதும் சில நேரம் தன் பாலினர் மேலும் ஈர்ப்பு ஏற்படுவது இயற்கை. இதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**மனம்விட்டுப் பேசுவோம்**

டீன் ஏஜ் குழந்தைகளின் இத்தகைய பாலியல் உணர்வுகள் இயற்கையானவை என்பதைப் புரிந்துகொண்டால், இந்தச் சிக்கலான தருணத்தில் பாதையைக் கடக்க அவர்களுக்கு உதவ முடியும். அவர்கள் கைப்பிடித்து நடப்போம்.

டீன் ஏஜ் வயதில் இரண்டுவிதமான பாலியல் அனுபவங்கள் கிடைக்கலாம். முதலாவது நமக்குள் தோன்றும் பாலியல் ரீதியான இச்சை. இரண்டாவது நம் ஆசை காரணமாக பிறர் மேல் நாம் செலுத்தும் வன்முறை.

வன்முறைக்குள்ளாக்கப்பட்டு, பரிதாபத்துக்குரியவராக ஆகும்பொழுது சமூகம் நம் மேல் இரக்கப்படும். கருணை காட்டும். ஆனால், இச்சையை வெளிப்படுத்தினால் தூற்றும். சுய கட்டுப்பாடு இல்லாதவர்கள் என்று ஏசும்.

பார்க்கத் தோன்றும் ஆனால், பார்க்கக் கூடாது. பேசத் தோன்றும் ஆனால், பேசக் கூடாது. நினைக்கத் தோன்றும் ஆனால், நினைக்கக் கூடாது. இவை எப்படிச் சாத்தியம்?

மனம் இருந்தால் மார்க்கமுண்டு. இது எதிர்பாராது வரும் விபத்தல்ல. நமக்குத் தெரிந்தே வரும் சவால். இந்தச் சவாலை எதிர்கொள்ள நாம் தயாராக வேண்டும்.

யார் என்ன செய்யலாம்?

**பெரியவர்களுக்கு:**

உங்கள் குழந்தைகளுக்கு உடற்கூறு குறித்து சொல்லிக் கொடுங்கள். உடலைச் சுத்தமாக வைக்கக் கற்றுத் தருவதோடு உடல் வளர்ச்சியில் வரக்கூடிய மன உணர்வுகளைப் பற்றியும் பேசுங்கள்.

'பாலியல்ரீதியான ஈர்ப்பு இயற்கை. ஆனால், அதற்கான வயது இதுவல்ல. அவர்களது திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான பருவமிது. காதல், பாலியல் நாட்டம் இவையெல்லாம் பரவசத்தைக் கொடுத்தாலும் இந்தப் பரவசம் தற்காலிகமானது. இதற்கு ஆட்பட்டுவிட்டால், படிக்கத் தோன்றாது. திறமைகளை வளர்த்துக்கொள்ளத் தோன்றாது. பாலியல் இச்சை என்பது முதன்மையாகும்போது நாம் நம் இச்சையை யார் மீதாவது, பாலியல்ரீதியான துன்புறுத்தலாகச் செலுத்தவும்கூடும். பாலியல் ரீதியாக மற்றவரைத் துன்புறுத்த நேரும் பொழுது, குற்ற உணர்வு வரலாம். கையும் களவுமாகப் பிடிபட்டு, தண்டனைக்குள்ளாக்கப் படலாம். இளமையே தொலைந்துபோகக் கூடும்' என்று அவர்களிடம் பொறுமையாகச் சொல்லுங்கள்.

**இளையவருக்கு:**

பார்க்கத் தோன்றுகிறதா, பார்த்துவிட்டு அழித்துவிடு. மண்டைக்குள் சுமக்காதே. பேசத் தோன்றுகிறதா? கனிவாக, கம்பீரமாக உரையாடு. அதை போதை ஆக்கிக் கொள்ளாதே. வாழ்வில் இதற்கான நேரம் வரும்.


பாலியல் இச்சையை நிறைவேற்றிக் கொள்வதற்கான வயதல்ல இது. இன்னும் பக்குவப்பட வேண்டும். உன்னை அறிந்து, உனக்குப் பிடித்தது பிடிக்காதது பற்றி எல்லாம் தெளிவு வந்த பிறகு, துணையைத் தேர்தெடுக்கலாம். அதுவரை சின்னதாக ஆசைப்பட்டு, அந்த உணர்வை உணர்ந்து, கடந்து போகக் கற்றுக்கொள்ள வேண்டும்.

பாலியல் இச்சையும் அதற்கு வயப்படுதலும் மட்டுமல்ல வாழ்க்கை. முன்னேற்றத்துக்கான இலக்கை நிர்ணயித்துக்கொண்டு, அதை அடைவதற்கான வழிமுறைகளைத் தீர்மானிக்க வேண்டும். தடைக் கற்களாக உள்ள நம் சிந்தனைப் பள்ளங்களில் போய் சிக்காமல், இலக்கை நோக்கியே பயணிக்க வேண்டும்.

சொல்வது எளிது, செய்து பார்த்தால் தானே தெரியும் எனத் தோன்றும். ஆனால், இன்றைக்கு இளம் வயதிலேயே அயராது பாடுபட்டு, தமக்கென ஓரிடத்தைப் பிடித்திருக்கும் பலரும் சவால்களை எதிர்கொண்டுதான் சாதித்திருப்பார்கள்.

வறுமை, ஏழ்மை, வாய்ப்பின்மை இவற்றை எல்லாம்விடப் பெரிய சவால் நம் உணர்வுகளை நம் கட்டுக்குள் வைத்திருப்பது. வண்ணமயமான வாழ்க்கை அமைய நம் உணர்வுகளையும் எண்ணங்களையும் கையாளத் தெரிய வேண்டும். இலக்கு ஒன்றே தீர்வு!

பத்மா - 'தமிழ் இந்து'வில் எழுதியது




*"பங்குச்சந்தையில் முதலீடு செய்து கொள்ளையடிக்க வந்த அந்நிய மூலதனம் எப்போதுமே நிலையாக இருப்பதில்லை. அவை எங்கு லாபம் கிடைக்குமோ அங்கு வெட்டுகிளி கூட்டத்தைப் போல ஓடிக்கொண்டே இருக்கும். இந்தியாவில் இருந்து வெளியேறிய அந்நிய முதலீடுகள் 2010 ஆம் ஆண்டு 30 சதவீதமாகவும் 2016-2017 ஆம் ஆண்டு 36 சதவீதமாகவும் 2017-2018(ஜனவரி வரை) 47 சதவீதமாகவும் உயர்ந்திருக்கின்றது."*

மோடியின் ஆட்சி இன்னும் சில மாதங்களில் முடியப்போகின்றது. நரகத்தின் எண்ணெய் சட்டியில் இருந்து எழுந்து ஓட இந்தியர்கள் தயாராக இருக்கின்றார்கள். ஆனால் இந்த முறையும் மோடி பழைய பொய்களுக்கு பதில் பதிய பொய்களைத் தூக்கிக் கொண்டு உங்களை சந்திக்க வருவார். இந்த முறை முன்பைவிட கவர்ச்சியான அதி பயங்கரமான பொய்களை அவர் கட்டவிழ்த்து விடுவார். இறந்து போனவர்களை உயிர்ப் பிப்பேன் என்றோ, உயிரோடு இருப்பவர்களுக்கு மரணமற்ற பெருவாழ்வை தருவேன் என்றோ அவர் வாக்குறுதி தரலாம். பொய்யையும், உண்மையையும் பிரித்தறிய திராணியற்ற பார்ப்பனியத்தால் மூளை மழுங்கடிக்கப்பட்ட கோடிக்கணக்கான மக்களை மீண்டும் நம்பவைக்க மோடி முயற்சி செய்யலாம். அதனால் மோடி என்ற ஊதி பெருக்கப்பட்ட பிம்பத்தை உடைக்க வேண்டிய கட்டாயம் நம் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. மோடி ஆட்சி இந்திய வரலாற்றில் இருண்டகாலம் என்பதை நாம் மக்களுக்கு உணர்த்த வேண்டும். மோடியின் இந்த நான்காண்டு ஆட்சி எப்படி இருந்தது என்பதை ஒரு மீள்பார்வையாக பார்ப்போம்.

நாட்டில் உள்ள உழைப்போர் எண்ணிக்கையில் 93 சதவீத தொழிலாளர்கள் அமைப்புசாரா முறையில் பணியாற்றி வரு கின்றனர். இவர்களுக்கு எந்தவித பணிப்பாது காப்போ, நிரந்தர தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் சலுகைகளோ கிடைப்பதில்லை. ஒவ்வொரு ஆண்டும் பல லட்சக்கணக்கான இளைஞர்கள் உழைப்புச் சந்தையில்

கொட்டப்படுகின்றார்கள். ஏற்கெனவே இருக்கும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தொழிற்துறையில் நிரந்தர வேலைவாய்ப்பை உருவாக்குவதும் புதிதாக உழைப்புச்சந்தைக்கு வருபவர்களுக்கு பணி பாதுகாப்புடன் கூடிய வேலையை உத்திரவாதம் செய்வதும் தொழிலாளர்களின் நலன்களுக்காக இயங்கும் அரசின் கடமையாகும். 240 நாட்களுக்கு மேலாக, சில துறைகளில் 480 நாட்களுக்கு மேலாக பணிபுரிந்தால் அவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்பது சட்டம். இதை சரியாக அமல்படுத்தினாலே இதைச் சாத்தியப்படுத்த முடியும். ஆனால் மோடி அரசு FTE (Fixed Term Employment) ஒப்பந்த கால வேலைவாய்ப்பு, NEEM (National Employment Enhancement Mission) பயிற்சியாளர் ஊக்குவிப்பு போன்ற திட்டங்களை கொண்டுவந்து ஒப்பந்த பணியாளர்களையும், பயிற்சி தொழிலாளர் களையும் கட்டுப்பாடுகளற்று சுரண்ட வழி ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றது.

இந்தத் திட்டங்கள் மூலம் இனி தொழிற் சாலைகள் தங்களிடம் பணிபுரியும் நிரந்தர தொழிலாளர்கள் எண்ணிகையை குறைத்து ஒப்பந்த தொழிலாளர்களை அதிகப்படுத்திக் கொள்ள முடியும். அவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டிய அவசிமில்லை. அதேபோல புதிதாக படித்து முடித்துவிட்டு பயிற்சியாளராக (Trainee) ஆக பணியில் சேரும் தொழிலாளர் களுக்கு எந்தவிதமான சட்டப்பலன்களையும் தர வேண்டியதில்லை. குறைந்தபட்ச ஊதியம் கொடுத்தாலே போதுமானது. உழைத்து சோறு தின்னுவதை அவமானமாகக் கருதும் சித்தாந்தத்தை தனது குறிக்கோளாக ஏற்றுக் கொண்ட ஒரு வர்க்கத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சி ஆட்சியில் இருந்தால் அது தொழிலாளர்களை எப்படி வஞ்சிக்குமோ அப்படித்தான் மோடி அரசு இந்திய தொழிலாளர்களை வஞ்சித்து வருகின்றது.

வேலைவாய்ப்பு என்று எடுத்துக் கொண்டால் மோடி கொடுத்த வாக்குறுதிக்கும் நடப்பு நிலைமைக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உள்ளது. பொருளாதார வளர்ச்சி 10 சதவீதம் இருந்தால் வேலைவாய்ப்பு 1 சதவீதம் என்ற அளவிலேயே இருக்கின்றது. இந்தியாவில் 35 வயதுக்கு குறைவாக உள்ளவர்கள் 65 சதவீதம் பேர். இவர்களில் 5 கோடி பேர் வேலை இன்றி உள்ளனர். இது தவிர ஆண்டு தோறும் லட்சக்கணக்கான இளைஞர்கள் கல்வியை முடித்துவிட்டு உழைப்புச் சந்தையில் குவிந்து வருகின்றார்கள். உலோகம், முதலீடு, கட்டுமானம், மின்சாரம், நுகர்வோர் பண்டங்கள், சில்லரை வணிகம் போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள 120 நிறுவனங்கள் வேலைக்கு ஆளெடுப்பது பெருமளவு குறைந்திருக்கின்றது என இந்தியன் எக்ஸ்பிரசிஸ் நாளிதழின் ஆய்வு கூறுகின்றது.

2009 -2010 ஆம் ஆண்டில் எட்டு லட்சத்து 70 ஆயிரம் புதிய வேலை வாய்ப்புகள் கிடைத்தது. ஆனால் 2016 ஆண்டு அந்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 35 ஆயிரமாக குறைந்துள்ளது. மோடி பதவியேற்ற மூன்று ஆண்டுகளில் அவரால் உருவாக்கப்பட்ட மொத்த வேலைவாய்ப்புகள் வெறும் 11 லட்சம்தான். அவர் கொடுத்த வாக்குறுதிபடி பார்த்தால் மூன்று கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்கி இருக்க வேண்டும். ஆனால் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற துப்பில்லாத மோடி அரசு மீண்டும் 2020க்குள் 5 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம் என ஆட்டத்தை முதலில் இருந்தே தொடங்குகிறது.

மோடியின் ஆட்சி புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியவில்லை என்பது ஒருபுறம் இருந்தாலும் மிகப் பெரிய அளவில் வேலை இழப்பை உருவாகி இருக்கின்றது. லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனம் மட்டும் 2016 ஆண்டில் 14000 ஊழியர்களை பணியில் இருந்து நீக்கி இருக்கின்றது. ஈ காமர்ஸ், புட்-டெக் மற்றும் லாஜிஸ்டிக்ஸ் துறையில் இருக்கும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களில் மட்டும் 2016 ஆம் ஆண்டு 9000 ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட் டுள்ளனர் என 'எக்ஸ்லெர் 8' (Exler8) ஆய்வு நிறுவனம் கூறுகின்றது.

உற்பத்தித் துறையில் கடந்த ஆண்டில் 40 சதவீத வேலை இழப்பு ஏற்பட்டிருக்கின்றது என்கின்றது புளூம்பெர்க் அறிக்கை.2014 ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக குறைந்து வந்த வேலைவாய்ப்புகள் பணமதிப்பு நீக்கம் மற்றும் ஜிஎஸ்டி போன்றவற்றால் மிகப் பெரிய

அளவில் குறையத் தொடங்கி இருக்கின்றது. பல சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் இழுத்து மூடப் பெற்றதே இதற்குக் காரண மாகும். வேலை செய்ய அனைத்துத் தகுதிகளும் இருந்தும் 27 சதவீத பேருக்கு வேலை இல்லை என்கின்றது குளோபல் ஹியுமன் கேபிடல் ஆய்வு.

ஒரு நாட்டில் வேலைவாய்ப்பு பெருக வேண்டும் என்றால் ஏற்றுமதி அதிகமாகவும் இறக்குமதி குறைவாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் பல புதிய தொழிற்நிறுவனங்கள் நிறுவப்பட்டு புதிய வேலைவாய்ப்புகளை வழங்க முடியும். ஆனால் மோடி அரசு பதவி யேற்றதில் இருந்து ஏற்றுமதி குறைந்து இறக்குமதி மிகப்பெரிய அளவில் அதிகரித்திருக் கின்றது. 2013 ஆம் ஆண்டு 314.4 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புக்கு ஏற்றுமதி இருந்தது இது 2017-2018 ஆண்டு 302.8 பில்லியன் டாலராக இருக்கும் என அதிகாரபூர்வமாக மதிப்பிடப்பட் டிருக்கின்றது. அதே சமயம் இறக்குமதி 450.2 பில்லியனில் இருந்து 459.7 பில்லியன்களாக அதிகரித்திருகின்றது. இதனால் வர்த்தக பற்றாக்குறை 135.8 பில்லியன் டாலர்களில் இருந்து 156.8 பில்லியன் டாலர்களாக உயர்ந்திருக்கின்றது. எண்ணெய் சம்பந்தமான பாகங்கள் அல்லாத பொருட்களின் ஏற்றுமதி கடந்த நான்காண்டுகளில் 5.1 சதவீதமாகவும் அதே சமயம் இறக்குமதி 22.8 சதவீதமாகவும் உள்ளது. இதனால் வர்த்தக பற்றாக்குறை கடந்த நான்காண்டுகளில் 34.2 பில்லியன் டாலர்களி லிருந்து 86.6 பில்லியன் டாலர்களாக அதாவது இரண்டரை மடங்குகளுக்கும் அதிகமாக அதிகரித்திருக்கின்றது.

இந்தியாவில் உற்பத்தி செய்வோம் என்ற மோடியின் முழக்கம் வெற்று முழக்கமாக மாறிப்போனதையே மேற்கண்ட புள்ளிவரங்கள் காட்டுகின்றன. குறைந்த பட்சம் உள்நாட்டு சந்தை சிறப்பாக இருந்தால் கூட இவ்வளவு மோசமான நெருக்கடி ஏற்பட்டிருக்காது. ஆனால் உள்நாட்டில் நிலவும் கடுமையான வேலையில்லாத் திண்டாட்டமும், ஏறக்குறைய 93 சதவீதம் பேர் அமைப்பு சாரா துறைகளில் அற்ப கூலிக்கு வேலை செய்பவர்களாகவும் இருப்பதால் உள்நாட்டு சந்தை மிகவும் குறுகிப்

**இந்தியாவில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பை தரும் விவசாயத் துறையில் 0.30 சதவீதம் மட்டுமே அந்நிய முதலீடு செய்யப்பட்டிருப்பதில் இருந்து மோடி அழைத்து வந்த அந்நிய முதலீட்டின் யோக்கியதையை நாம் தெரிந்து கொள்ளலாம்.**

போய் உள்ளது. இதனால் மோடியின் பைத்தியக் காரத்தனமான பொருளாதார சீர்திருந்த நடவடிக்கைகள் முட்டுச்சந்தில் போய் மாட்டிக் கொண்டு விழி பிதுங்கி நிற்கின்றது. ரூபாய் நோட்டுக்களை செல்லாது என்ற மோடியின் முட்டாள்தனமான நடவடிக்கை யால் மட்டும் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2 சதவீத அளவிற்கு பின்னடைவை சந்தித்து இருக்கின்றது.

ஆனால் இவ்வளவு பொருளாதார நெருக்கடி நிலவிய போதும் இந்திய பணக்காரர் களின் சொத்து மதிப்பு மட்டும் பல மடங்கு அதிகரித்து இருக்கின்றது. பிரான்ஸைச் சேர்ந்த கேப்ஜெமினி நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வின் படி இந்தியாவில் செல்வத்தின் பகிர்வு சமூக அளவில் சமமாக இல்லை. ஒரு சிலரிடத்தில் செல்வம் குவிந்து வருகிறது. கடந்த ஆண்டில் மட்டும் செல்வந்தர்களின் எண்ணிக்கை 20.4 சதவீதமாக அதிகரித்து 1 லட்சம் கோடி டாலராக உள்ளது. உலக அளவிலான வளர்ச்சியைவிட இது 12 சதவீதம் அதிகமாகும். ஏழைகளை பரம ஏழைகளாகவும் ,பரம ஏழைகளை பிச்சைக்காரர்களாகவும் மாற்றிய மோடியின் ஆட்சியில் எந்தவித தொழிற்வளர்ச்சியும் ஏற்படாமல் எப்படி பணக்காரர்களால் மட்டும் பெருமளவு சொத்து சேர்க்க முடிந்தது என நீங்கள் குழப்பமடைய லாம். இதில் குழப்பமடைவதற்கு எதுமில்லை. மோடியின் ஆட்சியில் வங்கிகளின் வாராக்கடன் மட்டும் 8.4 லட்சம் கோடியாக அதிகரித்திருக் கின்றது. மேலும் 2012-2013 இருந்து 2016-2017 வரை 2.5 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது. இந்தக் கடன்களின் பெரும்பகுதி தொழிற்துறை நிறுவனங்கள் பெற்ற கடனாகும். இதில் மோடி ஆட்சிக்கு வந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 1 லட்சத்து 88 ஆயிரத்து 286 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருகின்றது. இப்போது

உங்களுக்கு தெரிந்திருக்கும் எப்படி மோடி ஆட்சியில் பணக்காரர்கள் தங்கள் சொத்து மதிப்பை வளர்த்துக்கொண்டார்கள் என்று.

மோடி என்னதான் வெளிநாடுகளுக்கு பறந்து பறந்து அந்நிய முதலீட்டை ஈர்க்க முயற்சி செய்தாலும் அதனால் எந்த பலனும் ஏற்பட வில்லை. வேலை வாய்ப்பு பெருக வேண்டும் என்றால் அந்நிய முதலீடுகள் பெருமளவில் நேரடி உற்பத்தியில் ஈடுபட வேண்டும். ஆனால் அதற்கெல்லாம் உலக நிதி மூலதனத்திற்கு நேரமில்லை. அவை உடனடியான லாபத்தை எதிர்ப்பார்க்கின்றன. இந்தியாவிற்கு வந்த அந்நிய முதலீட்டில் 2016-2017 ஆம் ஆண்டு 62 சதவீதம் சேவைத் துறையிலும் 33 சதவீதம் உற்பத்தி துறையிலும் 5 சதவீதம் எரிசக்தி துறையிலும் வெறும் 0.30 சதவீதம் மட்டுமே விவசாயம், மீன்பிடி, சுரங்கம் போன்ற துறைகளில் முதலீடு செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பை தரும் விவசாயத்துறையில் 0.30 சதவீதம் மட்டுமே அந்நிய முதலீடு செய்யப்பட்டிருப்பதில் இருந்து மோடி அழைத்து வந்த அந்நிய முதலீட்டின் யோக்கியதையை நாம் தெரிந்துகொள்ளலாம்.

இப்படி "பங்குச்சந்தையில் முதலீடு செய்து கொள்ளையடிக்க வந்த அந்நிய மூலதனம் எப்போதுமே நிலையாக இருப்ப தில்லை. அவை எங்கு லாபம் கிடைக்குமோ அங்கு வெட்டுகிளி கூட்டத்தைப் போல ஓடிக்கொண்டே இருக்கும். இந்தியாவில் இருந்து வெளியேறிய அந்நிய முதலீடுகள் 2010 ஆம் ஆண்டு 30 சதவீதமாகவும் 2016-2017 ஆம் ஆண்டு 36 சதவீதமாகவும் 2017-2018(ஜனவரி வரை) 47 சதவீதமாகவும் உயர்ந்திருக்கின்றது."

அனைத்து வகையிலும் மோடியின் ஆட்சி படுதோல்வியடைந்து நிற்கின்றது. டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 74 ரூபாய்க்கு கீழ் சரிந்திருகின்றது. மோடி ஆட்சிக்கு வந்த சமயத்தில் ரூபாயின் மதிப்பு 59 ரூபாயாக இருந்தது என்பதைப் பார்த்தால் மோடி இந்த நான்கரை ஆண்டுகளில் இந்தியாவில் வாழும் சாமானிய மக்களை மட்டும் மதிப்பற்றவர்களாக செய்யவில்லை, இந்திய நாணயத்தையும் சேர்த்தே மதிப்பற்றதாக செய்துள்ளார். தினம் தினம் பங்குசந்தை புள்ளிகள் பெரிய அளவிற்கு சரிவதும் பங்குசந்தையில் முதலீடு செய்தவர்கள் ஒரே நாளில் தங்கள் மொத்த சொத்தையும் இழந்து தெருவுக்கு போவதும் நடந்து வருகின்றது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து அதிகரிக்கும் என்று தெரிவதால் நிலைமை இன்னும் மோசமாகவே வாய்புள்ளதாக பொருளாதார அறிஞர்கள் கணிக்கின்றார்கள்.

இந்திய மக்கள் வரும்காலங்களில் மிகப் பெரிய நெருக்கடியை சந்திக்க காத்துக்கொண்டு இருகின்றார்கள். அவர்களின் வாழ்க்கை அவர்களின் கண்முன்னாலேயே அழிந்து போவதை அவர்கள் பார்க்கப்போகிறார்கள். ஆனால் அவர்கள் எப்படி அழிந்து போனாலும் மோடிக்கு அதைப்பற்றி கவலை கிடையாது. அவர்களால் சாதியவாதத்தையும், மதவாதத்தை யும் தூண்டிவிட்டு எளிதில் உங்களை வசப்படுத்த முடியும். பொய்யான கவர்ச்சியான வாக்குறுதிகளைக் கொடுத்து மக்களை ஏமாற்றவும் முடியும். நீங்கள் இந்த முறை விழித்துக்கொள்ளவில்லை என்றால் இனி என்றுமே விழிக்க முடியாத நிரந்தர துயிலில் மோடி மக்களை ஆழ்த்திவிடுவார்.

**கட்டுரைக்கு உதவியவை**


1) இந்து வணிக வீதி
2) தீக்கதிர்
3) Bbc.com
4) Tnlabour.in
5) Goodsreturn.in
6) Patrikai.com


●



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.org

**ஆண்டுக் கட்டணம் ரூ.200**

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 9841489896 – periyarmuzhakkam@gmail.com

*பேஷ்வா பார்ப்பனர்களின் குடும்ப விழாவாக இருந்த விநாயக சதுர்த்தி அரசியல் வடிவம் எடுத்தது எப்படி?*

இந்தியாவின் வர்த்தகத் தலைநகரம் மும்பை. உலக கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் நவநாகரீக இந்தியப் பெருநகரம். அந்த நகரையே திக்குமுக்காட வைக்கும் நிகழ்வொன்று ஆண்டுக்கு ஒருமுறை வரும். அப்போது ஆர்ப்பரிக்கும் கூட்டம் மும்பை வீதிகளில் வழிந்து நிற்கும். தீபாவளிக்குப் பிறகு இந்தியா முழுக்க கொண்டாடப்படும் ஒரு விழா என்றால் அது விநாயாகர் சதுர்த்திதான். கடந்த அரை நூற்றாண்டுகளில் இந்து அமைப்புகளால் இந்தியா முழுக்க கொண்டு சேர்க்கப்பட்டுள்ள விநாயகர் ஊர்வலத்துக்கு ஆன்மீக ரீதியில் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் அதையும் தாண்டிய காரணம் ஒன்று உள்ளது. அது இந்துத்துவா அரசியல்.

நாடு முழுக்க இந்துத்துவா அரசியலை இந்துக்களிடம் கொண்டு சேர்க்கவும், அதன்பேரில் அவர்களை ஒன்று திரட்டவும் அறிவிக்கப்படாத ரத யாத்திரையாக விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் நடந்து வருகின்றன. உண்மையில் இதன் வரலாறு பால கங்காதர திலகருடனும், கடைசி இந்து அரசன் சிவாஜியுடனும் தொடங்குகிறது. விநாயகர் என்றால் மேலான தலைவர் என்று அர்த்தப்படுத்தப் படுகிறது. விநாயகர் அவதரித்த தினத்தை விநாயகர் சதுர்த்தி எனக் கொண்டாடப்படுவதாக புராணங்கள் கூறுகின்றன.

ஒருமுறை சிவன் வெளியே சென்றிருந்த நேரம் பார்வதி நீராடச் சென்றார். அப்போது தனக்குக் காவல் காக்க ஒருவரும் இல்லை என்பதால் தனது நீராட்டுக்காக வைக்கப்பட்டிருந்த சந்தனக் குழம்பை எடுத்து ஒரு உருவம் உருவாக்கி அனுக்கிரகத்தால் அதற்கு உயிர் ஊட்டினார். அவரால் உயிரூட்டப்பட்டதால் அவ்வுருவம் அவரது பிள்ளையாகிவிட்டது. எவரையும் உள்ளே நுழைவதற்கு அனுமதிக்கக் கூடாது என பிள்ளையாருக்கு அறிவுறுத்திவிட்டு பார்வதி நீராடச் சென்றுவிட்டார். அச்சமயம் அங்கு வந்த சிவனை உள்ளே செல்ல பிள்ளையார் அனுமதிக்கவில்லை. இதனால் கோபம்கொண்ட சிவன் பிள்ளையாரின் தலையை வெட்டிவிட்டு உள்ளே சென்றுவிட்டார்.

**“ தமிழகத்தில் பகுத்தறிவு அரசியலில் இருந்த விநாயகர் மற்ற இந்திய பகுதிகளைப் போலவே ஊர்வல அரசியலுக்கு வந்தது 1980களில்தான். ”**



# ‘விநாயகன்’ அரசியலுக்கு வந்த வரலாறு

நீராடி முடிந்ததும் பார்வதி வெளியே வந்து பிள்ளையார் தலை இல்லாமல் கிடந்த கோலத்தைக் கண்டு ஆவேசமும், கோபமும் கொண்டார். தான் உருவாக்கிய பிள்ளையாரை சிவனே சிதைத்து விட்டதை அறிந்த அவர் காளியாக உருமாறி தன் கண்ணில்பட்ட சகலவற்றையும் அழிக்கத் தொடங்கினார். காளியின் ஆவேச நர்த்தனத்தைக் கண்டு அஞ்சிய தேவர்கள் சிவனிடம் சென்று முறையிட்டனர். காளியை சாந்தப்படுத்துவதற்கு முடிவு செய்த சிவன் தனது கணங்களை (ஏவலாளிகளை) அழைத்து, வட திசையாகச் சென்று முதலில் தென்படுகின்ற ஜீவராசியின் தலையை வெட்டி வருமாறு பணித்தார். கணங்கள் வட திசையை நோக்கிச் சென்ற போது அவர்களுக்கு ஒரு யானையே முதலில் தென்பட்டது. அவர்கள் அதன் தலையை வெட்டி எடுத்துச்சென்று சிவனிடம் கொடுத்தனர். சிவன் அத்தலையை வெட்டுண்டு கிடந்த பிள்ளையாரின் உடலில் பொருத்தி உயிரூட்டிவிட்டார்.

இதைக் கண்டு சாந்தமடைந்த பார்வதி அகமகிழ்ந்து பிள்ளையாரைக் கட்டியணைத்துக் கொண்டார். சிவன் அந்தப் பிள்ளையாருக்கு கணேசன் என்று பெயர் சூட்டி, தனது கணங் களுக்குத் தலைவராக நியமித்தார் என நாரத புராணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சி நடந்தது சுக்கிலபட்ச சதுர்த்தி அன்றாகும். அன்றிலிருந்து இத்தினம் விநாயகர் சதுர்த்தி என்றாகிவிட்டது. இது பிள்ளையாரின் அவதாரக் கதையாகும். விநாயகரின் தோற்றத் துக்கு இதுபோல பல கதைகள் இருக்கின்றன.

அதேபோல விநாயகர் சதுர்த்தி அன்று நடத்தப்படும் ஊர்வலங்களுக்கும் சில தோற்றக் கதைகள் உள்ளன. 16ஆம் நூற்றாண்டில் மராட்டிய மன்னர் சிவாஜி, விநாயகர் சதுர்த்தியை பிரபலமாக்கினார். தங்களுடைய குலதெய்வமான கணபதிக்கு மக்கள் விழா எடுப்பதை மராட்டிய ஆட்சி அதிகாரத்திலிருந்த பேசுவாக்கள் (பார்ப்பனர்கள்) ஊக்கம் கொடுத்தனர். மராட்டிய ஆட்சி வீழ்ச்சியை சந்திக்கும்வரை விநாயகர் சதுர்த்தி விழாக்கள் அங்கு விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. இந்த நிலையில் பிரிட்டிசு ஆட்சிக்கு எதிராக பம்பாய் மாநகரில் விநாயகர் சதுர்த்தியை மீண்டும் பிரபலப்படுத்தத் தொடங்கினார் பலகங்காதர திலகர்.

இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் இந்து தேசியவாதத்தை முன்னிறுத்தி அன்னி பெசண்டுடன் ஹோம்ரூல் இயக்கத்தில் இணைந்து செயல்பட்டவரான பலகங்காதர திலகர் 1893ஆம் ஆண்டு முதல் பேசுவாக்களின் (பார்ப்பனர்) குடும்ப விழாவாக இருந்த விநாயகர் சதுர்த்தி விழாவை இந்துக்களின் விழாவாக் கினார். பிளேக் நோயைக் கட்டுப்படுத்த ஆங்கிலேயர்கள் நடவடிக்கை எடுத்தபோது பாலங்காதர திலகர் சொன்னவை மிக முக்கியமானது. பிளேக் நோய்க்குக் காரணமான எலிகளை கொல்பவர்களுக்கு சன்மானம் அறிவித்தது ஆங்கிலேய அரசு. ஆனால் பால கங்காதர திலகரோ எலிகள் விநாயகனின் வாகனம். அவற்றை அழிக்க ஆங்கிலேய அரசு முயற்சிப்பதாக் கூறி இந்துக்களைத் திரட்டினார். இந்துக்களும் திரண்டனர். ஆங்கிலேயரால் அந்தத் திட்டமும் கைவிடப்பட்டது. விநாயகனைப் பயன்படுத்திய முதல் அரசியலும், அதற்குக் கிடைத்த முதல் வெற்றியும் அது. அதன்பிறகு விநாயகர் சதுர்த்தி விழாக்கள் மீண்டும் மும்பை முழுக்கத் நடைபெறத் தொடங்கியது. இந்து மதத்தின் அடிப்படையில் சிவாஜியும், பேசுவாக்களும் கொண்டாடிய சதுர்த்தியை இந்துத்துவத்தின் கூறுகளோடு திலகர் மறு அறிமுகம் செய்து வைத்தார்.

இந்த விழாவின் அடிப்படையில் ஊர்வலத்தின் மூலம் இந்துக்களை ஒன்றுபடுத்தி, பிரிட்டிசாரை வீழ்த்தி இந்து ராசுட்டிராவை படைக்க விரும்பியிருந்தார் திலகர். அப்போ திருந்தே விநாயாகர் ஊர்வலம் அரசியலில் வலுவாகக் காலூன்றிவிட்டது. ஆகவே ஒருவகையில் விநாயகருக்கு முன்பே அவரது வாகனமான எலி விநாயகருக்கான அரசியலுக் குள் நுழைந்துவிட்டது. சுதந்திரத்துக்குப் பிறகு பம்பாய் மாநகரத்தில் இந்து மத உணர்வோடு மராட்டிய இன உணர்வையும் ஊட்டி வளர்க்க விநாயாகர் ஊர்வலங்கள் பயன்படுத்தப்பட்டன. 1960களின் மத்திய காலகட்டத்தில் மராட்டா மராட்டியர்களுக்கே என்ற முழக்கத்தோடு அரசியலில் அடியெடுத்த ஒரு இளைஞன் விநாயகர் ஊர்வலத்தை அடுத்த கட்டத்திற்கு

எடுத்துச் சென்றார். அந்த இளைஞர் உருவாக்கிய அமைப்பு மராட்டாவின் மூலை முடுக்கெல்லாம் விநாயகன் ஊர்வலத்தை எடுத்துச் சென்றது. மராட்டாவை நிர்மாணித்த சிவாஜியின் ஆட்சியை மீண்டும் அமைக்க விரும்பிய அந்த இளைஞன் அதற்காக மிகத் தீவிரமாய் விநாயகர் ஊர்வலத்தை முன்னெடுத்தான்.

கணபதி பாபா மோரியா, கணபதி பாபா மோரியா என்று மும்பையில் அவர் முழக்க மிட்டார். அது மராட்டா எங்கும் எதிரொலித்தது. அந்த இளைஞர் பால் தாக்கரே. அந்த இயக்கம் சிவசேனா. விநாயகர் ஊர்வலங்களின் போதெல்லாம் கொலைகள், கலவரங்கள் அல்லது இறப்புகள் சாதாரண மாகிப் போனது. இசுலாமியர்கள் மற்றும் பட்டியல் இனத்தவர்கள் குறிவைத்து தாக்கப் பட்டனர். தமிழர்கள் வாழும் தாராவியும் தப்பியிருக்கவில்லை. எல்லாமும் நடந்துவந்தது. விநாயகர் சதுர்த்தி, சிவாஜி விழா, தசரா போன்ற சிவசேனாவின் முன்னெடுப்புகள் அவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தைக் கொடுத்தன. விநாயகர் ஊர்வலம் நடத்தியவர்கள் மராட்டா கோட்டையைப் பிடித்தனர்.

1995ஆம் ஆண்டில் மகாராஷ்டிர சட்டப் பேரவைத் தேர்தலில் வென்று சிவசேனா ஆட்சி யமைத்தது. அதே காலகட்டத்தில் விநாயகர் ஊர்வலங்கள் நாடு முழுவதும் கொண்டாட ஆரம்பமாகியிருந்தன. அதற்கு முன்பும் அது ஒரு இந்து பண்டிகையாக கோவில் சார்ந்து இருந்தாலும், வீதிகள் தோறும் விநாயகன் கொண்டுவரப்பட்டது 1990களில்தான். நாடு முழுவதும் அதே காலகட்டத்தில்தான் பாஜகவும் வளர்ந்து வந்தது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்து சமயத்தில் ஆரம்பம் முதலே விநாயகர் இருந்திருக்கவில்லை. சங்ககால இலக்கியங்கள் எதிலும் விநாயகர் குறித்த குறிப்புகள் எதுவும் இல்லை. ஆனால் பக்தி இலக்கியங்களில் பல பெயர்களில் பிள்ளையார் பற்றிய குறிப்புகள் வருகிறது. ஆனால் சங்க இலக்கிய காலங்களில் பவுத்த, சமண மதங்களே கோலோச்சியிருந்தது. அவற்றின் அழிவின் மேல்தான் வைதீக மதங்களான சைவ, வைணவ மதங்கள் பக்தி

**பால கங்காதர திலகரோ எலிகள் விநாயகனின் வாகனம். அவற்றை அழிக்க ஆங்கிலேய அரசு முயற்சிப்பதாகக் கூறி இந்துக்களைத் திரட்டினார்**

இலக்கிய காலத்தில் தமிழகத்தில் பரவத் தொடங்கியிருந்ததையும் நாம் கவனிக்க வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில் அரச மரத்தடியில் ஞானம் பெற்ற புத்தரின் நினைவாகப் பவுத்தர்கள் கடைபிடித்து வந்த வழிபாட்டை பிள்ளையார் ஆக்கிரமித்திருக்கக்கூடும் என்ற கருத்தும் நிலவுகிறது. பவுத்தமும், தமிழும் என்ற நூலில் மயிலை சீனி வெங்கடசாமி அரச மர வழிபாட்டை வைதீக மதங்கள் சுவீகரித்துக் கொண்டதாகக் குறிப்பிடுகிறார். அதேபோல் கி.பி.7ஆம் நூற்றாண்டில் பல்லவ அரசனான நரசிம்ம வர்மன் இன்றைய மகாராஷ்டிராவில் உள்ள வாதாபி என்ற ஊரை வீழ்த்தியிருக்கிறார். நரசிம்ம வர்மனின் படைத்தளபதியாக இருந்தவரே சிறுதொண்டர். இவர்தான் வாதாபி வெற்றியின் நினைவாக அங்கிருந்து கணபதியைக் கொண்டுவந்து கணபதிச்சுரம் என்ற கோயில் எழுப்பியதாக திருஞானசம்பந்தர் பாடியிருப்பதாகக் கூறுகிறார் தெ.பொ.மீனாட்சி சுந்தரம். சோழர் காலத்தில் வந்தது; பல்லவர் காலத்தில் வந்தது; நாயக்கர் காலத்தில் வந்தது என்று பல பண்பாட்டு ஆய்வுகளை விநாயகர் குறித்து முன்வைக்கப்படுகிறது. ஆனால் விநாயகர் நிகழ்காலத்தில் இருக்கிறது.

பெரியார் காலத்திலிருந்தே பெரியார் முன்னெடுத்த இந்துமத எதிர்ப்பு பிரச்சாரங் களில் மற்ற கடவுள்களைக் காட்டிலும் பிள்ளை யாரை அதிகம் தாக்கினார். இராமன் தொடங்கி அனுமன் வரை பலர் குறித்தும் கட்டவிழ்ப்புகள் நிகழ பிள்ளையார் மட்டும்தான் உடைபட்டார். பெரியார் பிள்ளையாரை உடைக்க ஆரம்பித்ததற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே பிள்ளையார் குறித்து விமர்சிக்க ஆரம்பித் திருந்தார். எப்படி இந்துக்கள் எந்த விசயத்தைச் செய்யும் முன்பும் அல்லது மற்ற கடவுள்களை

பூஜிக்கும் முன்பும் முதற்கடவுளாக விநாயகரைத் தொழுகிறார்களோ அதேபோலத்தான் பெரியாரும் தனது கடவுள் மறுப்பு பிரச்சாரத் திற்கும், சுயமரியாதை பிரச்சாரத்திற்கும் முதன்முதலில் கையிலெடுத்த கடவுள் விநாயகர்.

“கடவுள்களின் சங்கதி தெரியவேண்டு மானால் முதலில் முதற்கடவுளைப் பற்றி தெரிந்து கொள்வதுதான் நன்மையானதாகும். முதற்கடவுளின் சங்கதி இன்னமாதிரி என்று தெரிந்தால், மற்ற கடவுள்களின் சங்கதி தானாகவே விளங்க ஏதுவாக இருக்கலாம். ஒரு காரியத்தை ஆரம்பித்தால் முதலில் பிள்ளையார் காரியத்தைக் கவனிக்க வேண்டியது முறை என்று சொல்லப்படுவதால், நாமும் கடவுள்களின் கதையைப் பற்றி விளக்கப்போவதில் முதற் கடவுளைப் பற்றி ஆரம்பிக்க வேண்டியது முறை யாகுமன்றோ! இல்லாவிட்டால் அக்கடவுளின் கோபத்திற்கு ஆளாக நேரிட்டு, எடுத்த இக்காரியத்துக்கு விக்கினம் ஏற்பட்டாலும் ஏற்படும். அன்றியும், சமீபத்தில் பிள்ளையார் சதுர்த்தி ஒன்றும் வரப்போவதால் இந்த சமயம் பொருத்தமானதாகவும் இருக்கலாம். ஆதலால் தொடங்குதும்” என்றுதான் பிள்ளையாரை தமிழகத்து அரசியலுக்கு அழைத்து வந்தார் பெரியார்.

மேலும் விநாயகரின் உருவாக்கத்தை, அதுதொடர்பான புராணக்கதைகளைப் பேசி பகுத்தறிவு இயக்கத்தை வளர்த்தார் பெரியார். இதுதவிர தனது குடிஅரசு பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் விநாயகர் உருவாக்கம் தொடர்பாக, விநாயகர் செயல்பாடு தொடர்பாக இருக்கும் புராணக் கதைகள் தொடர்பாக சிலவற்றை மேற்கோள்காட்டியிருப்பார். அப்படியான புராணக் கதைகளை பேசி, எழுதி பிரச்சாரம் செய்த பெரியார் ஒரு கட்டத்தில் பிள்ளையார் சிலைகளை உடைத்தும் விட்டார்.

இதற்கு இந்துத்துவா இயக்கங்களிட மிருந்து கடும் எதிர்ப்புகள் கிளம்பியது. ஆனால் பெரியார், “பிள்ளையார் உருவத்தை உடைப்பதில் ஒன்றும் அதிசயப்பட வேண்டிய தில்லை, தயக்கப்பட வேண்டியதில்லை. பிள்ளையார் சதுர்த்தி பண்டிகையின்போது நாடு முழுவதும் எத்தனை எத்தனை ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மண் பிள்ளையாரை மக்கள் மண்பாண்ட தயாரிப் பாளர்களிடம் வாங்கி பிள்ளையார் சதுர்த்தி முடிந்தவுடன் கடலில், ஆற்றில், ஓடையில், ஏரியில், குளத்தில், கிணற்றில், புனலில், வயலில் எறிந்துவிடுகிறார்கள். அதனுடன் கரைந்து பிள்ளையார் நீரோடு நீராக, மண்ணோடு மண்ணாக கறைந்துவிடுவது இல்லையா? இது தெரிந்தே மக்கள் நீரில் போடுவது இல்லையா? அதுபோன்ற செய்கைதான் இந்த உடைத்துத் தூளாக்கி மண்ணோடு மண்ணாக்குவதும். நாம் காசு போட்டு வாங்குகிறோமே ஒழிய, வேறு எந்த மனிதனுக்கும் உரிமை இருக்கிற வஸ்துவிடமும் நாம் செல்லவில்லை. தொடவில்லை. நாமாக வாங்கி உடைப்பதும் நமக்கு பிள்ளையார் கடவுள் அல்ல; வேத சாஸ்திர ஆதாரம் என்பதன்படியும் அது கடவுள் அல்ல; கடவுளுக்கு எந்த உருவமும் இல்லை” என்று 1953ஆம் ஆண்டு மே மாதத்தில் விடுதலை இதழில் எழுதினார் பெரியார்.

இப்படி தமிழகத்தில் பகுத்தறிவு அரசியலில் இருந்த விநாயகர் மற்ற இந்திய பகுதிகளைப் போலவே ஊர்வல அரசியலுக்கு வந்தது 1980களில்தான். தமிழகத்து மண்ணில் மதக் கலவரம் என்று ஒன்றைப் பேச வேண்டுமானால் மண்டைக்காடு கலவரத்தைத் தொடாமல் செல்ல முடியாது. கன்னியாகுமரி யில் இருந்த கணிசமான கிறித்துவ மதத்தைச் சார்ந்தவர்களுக்கும், அவர்களின் ஜாதியை ஒட்டிய இந்து மக்களுக்கும் இடையிலான தீவிர மதப்பற்று மதக் கலவரமாய் முடிந்திருந்தது.

1982ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் உலக செப வாரம் ஒருவாரம் அனைத்துக் கிறித்துவர் களாலும் ஒற்றுமையாகக் கொண்டாடப் பட்டது. அதன் இறுதி நாளன்று கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரான நாகர்கோவிலுக்கு திங்கள்நகர் வழியாக ஒரு ஊர்வலம் நடத்தினார்கள். அந்த ஊர்வலத்தை வரவேற்கும் விதமாகக் கிறித்துவ வணிகர் ஒருவர் ஒளிரும் சிலுவை ஒன்றை திங்கள் நகரின் மையப்பகுதியில் உள்ள போக்குவரத்துக் காவலர் நிழற்குடை அமைந்திருக்கும் திடலில் அமைத்திருந்தார். அந்த ஊர்வலம் முடிந்த பிறகு சிலுவை அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக இந்து ஒருவர் அவ்விடத்தில் விநாயகர் சதுர்த்திக்காக விநாயகர் சிலையை வைத்தார். வழிபாடு நடத்தவும் ஆரம்பித்தார். ஐந்து நாட்கள் கழித்து சிவராத்திரி அன்று காவல் துறையினர் சட்டம் ஒழுங்கைக் காரணம்காட்டி விநாயகர் சிலையை அகற்றினர். இந்துக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டது. இந்துக்கள் கடையடைப்பு மற்றும் ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர்.

அப்போது ஏற்பட்ட கலவரத்தில் காவலர்கள் 46 முறை துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 6 பேர் இறந்தனர். இந்தக் கலவரம் கல்லுக்கூட்டம், ஈத்தாமொழி, ராசாக்கமங்கலம், பிள்ளைத்தோப்பு, நாகர்கோவில் உள்ளிட்ட இடங்களுக்கும் தீவிரமாகப் பரவியது. இரண்டு வாரங்கள் கழித்து நடந்த துப்பாக்கிச் சூட்டில் மேலும் 2 பேர் கொல்லப்பட்டனர். கோவளத்தில் நடந்த கலவரத்தில் ஒருவர் கொல்லப் பட்டார். இந்தக் கலவரத்தில் தேவாலயங்கள், கோவில்கள், மருத்துவமனைகள் மற்றும் பொது சொத்துகள் அதிகமாக சேதமடைந்தன.

இக்கலவரத்தால் கடற்கரையோரம் இருந்த மீனவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். மீன்பிடி வலைகள் அழிக்கப்பட்டன. அவர்கள் பயன்படுத்திய குடிநீர் கிணறுகளில் டீசல் முதலான நஞ்சு கலக்கப்பட்டது. அவர்களுக்கான உணவுப் பொருட்கள் செல்லும் வழிகள் அடைக்கப்பட்டன. மீனவக் கிராமங்கள் சூறையாடப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்தில் தவிர்க்க முடியாத அரசியல் நிகழ்வாக இந்தக் கலவரம் அமைந்திருந்தது.

1990களுக்குப் பிறகு விநாயகர் சதுர்த்தி வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பாட்சா படத்திற்குப் பிறகு ரஜினி ரசிகர்களின் கொண்டாட்ட நிகழ்வாகிப்போனது விநாயகர் சதுர்த்தி. குறிப்பாக ஆட்டோ ஓட்டுநர்கள் உள்ளிட்ட சமூகத்தில் அமைப்பாய் திரண்ட எளிய மனிதர்களின் கூட்டு வழிபாடானது விநாயகர் சதுர்த்தி. இதன்பிறகு வீரா படத்தில் தொடங்கி, காலா படம் வரை ரஜினியின் படங்களில் விநாயகர் அவ்வப்போது தலை காட்டி வந்தார். இதுதவிர அஜித்தின் படங்களிலும் அதிகம் முக்கியத்துவம் பெறும்

**அரச மரத்தடியில் ஞானம் பெற்ற புத்தரின் நினைவாகப் பவுத்தர்கள் கடைபிடித்து வந்த வழிபாட்டை பிள்ளையார் ஆக்கிரமித்திருக்கக்கூடும் என்ற கருத்தும் நிலவுகிறது.**

பண்டிகையாக விநாயகர் சதுர்த்தி முன்னிறுத்தப்பட்டது. இது இளைஞர்கள் மனதுக்கு இவ்விழாவை நெருக்கமாக்கியது. இதுமட்டுமில்லாமல் விநாயகரின் இருப்பு தமிழ் சினிமா எங்கும் பரவிக் கிடக்கிறது.

1990களுக்கு முன்பாகவே விநாயகர் பெருமைகள் குறித்த தனி பக்திப் படங்கள் வந்தபோதும் ஜனரஞ்சக படங்களில் அவ்வப்போது விநாயகர் வருவது தமிழர்களின் ஆழ்மனதில் அவருக்கான இடத்தை உறுதி செய்தது. இராமாயணம், மகாபாரதம் எப்படி எழுத, படிக்கத் தெரியாத மக்களிடம் கூட நாடகங்கள் வழியாகக் கொண்டுபோய் சேர்க்கப்பட்டதோ அதேபோல விநாயகரும் நாடகங்கள் வழியாகக் கொண்டுபோய் சேர்க்கப்பட்டது.1990களுக்குப் பிறகு வெளிவரத் தொடங்கிய விநாயகர் நாடகங்கள் இன்று வரையில் வார இறுதி நாட்களில் முக்கிய நேர (Prime Time) நாடகங்களாக இருக்கின்றன. இந்த நாடகங்கள் விநாயகர் மீதான புனித பிம்பத்தைக் கட்டமைத்தது.

வட நாட்டில் சித்தி, புத்தி என இரண்டு மனைவிகளுடன் வலம்வந்த விநாயகர் சிலைகள் தமிழகத்தில் மட்டும் பிரம்மச்சாரியாக வலம் வந்தது. பிறகு சித்தி விநாயகர் கோவில்களும், புத்தி விநாயகர் கோவில்களும் தனித்தனியாக தமிழ்நாட்டுக்குள் நிறுவப்பட்டன. ஆனால் அது தமிழகக் கலாச்சாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. மாறாகத் தமிழகத்தில் நிறுவப்பட்ட விநாயகரின் பிரம்மச்சாரிய பிம்பம் வட நாட்டுக்குப் பயணித்து வருவதைக் காணமுடிகிறது. தமிழகத்தில் ராமரைக் கொண்டுபோய் சேர்ப்பதே இன்னும் கடினமாக இருக்கும்போது விநாயகர் எளிதாக சென்று சேர்ந்ததற்கு மிக முக்கியக் காரணம் விநாயகர் குறும்புக் கடவுளாகவும், குழந்தைக்

கடவுளாகவும் முன்வைக்கப்பட்டதே.

குழந்தைகளுக்கான கேலிச்சித்திரங்களாக (Cartoon) விநாயகர் மாறிய பிறகு இந்துக் குடும்பங்களில் அசைக்க முடியாத உறுப்பினராகிவிட்டது. விநாயகரைச் சுற்றி வியாபார வளையம் பெருகியது மூலை முடுக்கெல்லாம் விநாயகர் கொண்டுபோய் சேர்க்கப்பட்டதற்கு மற்றொரு காரணம். மற்ற கடவுள்களைப் போல ஒரு கட்டுக்குள் அடங்குவதாக இல்லாத பிள்ளையார், அனுமனைப்போல கலைஞர்களின் கற்பனைக்கேற்ப பல்வேறு வகைகளில் வடிவமைக்கப்படுகிறது. மட்டைப்பந்து விளையாடும் பிள்ளையார் முதல் கணினி பிள்ளையார் வரை இன்றைய சூழலுக்குப் பொருந்தும் வகையில் தயாரிக்கப்படுவதால் அனைவரும் கொண்டாடத் தொடங்கி யுள்ளனர்.

சாவிக் கொத்துகளில், சிறிய எண்முறைப் படங்களில் (Emoji) சிறு பொம்மைகளாக வலம் வரத்தொடங்கியிருக்கிறது. குறிப்பாக விநாயகர் சதுர்த்தி சமயங்களில் சிலை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கு மிகப்பெரிய பொருளாதார மூலமாகவும் இருக்கிறது. இந்த இடத்தில் நாம் மற்றொன்றையும் கூர்ந்து கவனிக்க வேண்டும். 1990களுக்குப் பிறகு நாடு முழுவதும் சங் பரிவாரங்கள் விநாயகர் சதுர்த்தியை மக்களிடம் கொண்டு சேர்த்தன. அதில் தமிழகத்தில் பெரும்பங்கு வகித்தவர்கள் இந்து முன்னணியினர். மாநிலம் முழுக்க அநேக இடங்களில் விநாயகர் சிலைகளை நிறுவி, விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தை முன்னின்று நடத்தினர்.

குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளுக்கும் விநாயகர் சிலைகளைக் கொண்டு சேர்த்தனர். பெரும்பாலும் பட்டியலின இளைஞர்கள்தான் விநாயகர் சிலை ஊர்வலங்களை, சிலை கரைப்பை செய்கின்ற சூழல் உருவாகியிருக்கிறது. அதேநேரம் ஜாதி கடந்து மத மோதல் அல்லது பிரச்சினையாகவும் வளர்ந்து நிற்கிறது விநாயகர் சிலை ஊர்வலங்கள். இசுலாமிய பகுதிகளை விநாயகர் சிலை ஊர்வலங்கள் கடக்கும்போது காவல் துறையின் நிலைமை கவலைக்குரியதாக மாறுகிறது. புகைந்து கொண்டிருக்கும் புதர் போல எப்போது வேண்டுமானாலும் பற்றி எரியும் பிரச்சினையாகவே இது இருக்கிறது.

**சித்தி, புத்தி என இரண்டு மனைவிகளுடன் வலம்வந்த விநாயகர் சிலைகள் தமிழகத்தில் மட்டும் பிரம்மச்சாரியாக வலம் வந்தது.**

இவை எல்லாவற்றையும் தாண்டி சுற்றுச் சூழல் பிரச்சினையும் இதில் முக்கியமானதாக எழுந்துள்ளது. மும்பை மாநகரில் மட்டும் 1 லட்சத்துக்கும் அதிகமான சிலைகள் வைக்கப் பட்டு கடலில் கரைக்கப்படுகின்றன. கடல் வளம் பாதிக்கப்படுதலும், கரைந்தும் கரையாமலும் இருக்கும் சிலைகளை அப்புறப்படுத்துவதும் மும்பை மாநகராட்சிக்குப் பெரும் தலைவலியாகவே இருந்து வருகிறது. அதை சரிசெய்ய மராட்டிய அரசும், அம்மாநில உயர் நீதிமன்றமும் கட்டுப்பாடுகளை விதிக்க முனைந்தபோது சிவசேனா கடுமையான எதிர்ப்பு தெரிவித்தது. கடந்த மாதம்கூட சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே இந்த விவகாரம் குறித்து நீதிமன்றமும், அரசும் தலையிட வேண்டாம் என்று எச்சரித்திருந்தார்.

பாஜக அரசுதான் என்றோ நீதிமன்றம் என்றோ சிவசேனா கட்டுப்படவிரும்பவில்லை. ஏறத்தாழ அனைத்து இந்துத்துவ அமைப்புகளின் நிலைப்பாடும் இந்த விவகாரத்தில் இதுதான். விநாயகர் சிலை வைக்கப்படுவதும், அதன் ஊர்வலமும் இந்துத்துவ அரசியலைப் பரப்புவதற்கும், இந்து மயமாக்குவதற்கும், இது இந்துக்களின் நாடு என்று முழங்குவதற்கும் பயன்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இன்னொருபுறம் விநாயகர் சதுர்த்தி நடுத்தர வர்க்கத்தின் கலாச்சார விழாக்களில் ஒன்றாகி விட்டது. சுண்டலும், கொழுக்கட்டையும் விநாயகர் சதுர்த்தியின் பிரதானமான அடையாளமாகவும் இருக்கிறது. ஆனால் சுண்டலும், கொழுக்கட்டையும் மட்டுமே அதன் அடையாளமாக இருக்கப் போவதில்லை.

நன்றி: நியூசு 7 தொலைக்காட்சி ஒளிபரப்பிய
'கதைகளின் கதை'யிலிருந்து
இணையம் வழியாக தொகுப்பு : ர. பிரகாசு



# ‘பிரம்மத்தை’ப் பார்த்த “பிராமணன்” உண்டா?



## புத்தரின் பார்ப்பனிய எதிர்ப்பை முன் வைக்கும் சில வரலாற்றுக் குறிப்புகள்

விடுதலை இராசேந்திரன்

*“யாகத்துக்காக நீங்கள் நெருப்பைமூட்டி அதில் யாகத்துக் காகவே பொருள்களைக் கொட்டி ஜாதியை சுத்தம்செய்துவிடலாம். தீங்குகளை ஒழித்து விடலாம் என்று கூறுகிறீர்கள். ஒருவனை ஜாதியி லிருந்தும் தீங்கிலிருந்தும் விடுவிக்கும் சக்தி நீங்கள் வளர்க்கும் யாக நெருப்புக்கு உள்ளே இல்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள். அது அந்த யாக நெருப்புக்கு வெளியே இருக்கிறது. அந்த நெருப்பு மக்களின் சிந்தனைகளில் மூட்ட வேண்டிய நெருப்பு. நான் அந்த நெருப்பைத்தான் மூட்டுகிறேன்; நீங்கள் மூட்டிய யாக நெருப்பு அணைந்துவிடும்; நான் மக்களின் சிந்தனையில் மூட்டும் நெருப்பு அணையாது” என்று பதிலடி தந்தார் புத்தர்.*

பெரியார் 1953ஆம் ஆண்டு நடத்திய விநாயகன் சிலை உடைப்புப் போராட்டம் வர்ணாஸ்ரம எதிர்ப்புக்கான போராட்டம்தான். 1952இல் தமிழ்நாட்டில் தேர்தலில் போட்டி யிட்டு மக்களை சந்திக்காமல் கொல்லைப்புற வழியாக பார்ப்பனர் இராஜகோபாலாச்சாரி முதல்வரானார். பார்ப்பன மேலாதிக்கத்தை நிறுவி வர்ணாஸ்ரமத்தை காப்பாற்ற வும் ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி வாய்ப்புகளைப் பறிப்பதிலும் தீவிரம் காட்டினார். இன்று மோடி ஆட்சி அமுல்படுத்திவரும் ‘வர்ணாஸ்ரம’ கொள்கைகள்தான் அன்றைக்கு இராஜ கோபலாச்சாரியின் திட்டங்களாகவும் இருந்தன என்று கூறலாம்.

பெரியார் வெகுண்டெழுந்து போராடினார். அந்த வரலாற்றுப் பின்னணியில் பெரியார் நடத்திய போராட்டங்களில் ஒன்றுதான் விநாயகன் சிலை உடைப்பு கிளர்ச்சி. “வர்ணாஸ்ரம முறையை ஜனநாயகத்தின் பெயரால் நிலைநாட்ட முனைகிறார் ஆச்சாரியார். இதோ, கடைசிச் சிகிச்சையாக கணபதி உருவ பொம்மையை 27.5.1953 அன்று மாலை 6.30 மணிக்கு தூள் தூளாக்கி மண்ணோடு மண்ணாய் கலக்கி விடுங்கள்” என்று அறிவித்தார் பெரியார். விநாயகன் எதிர்ப்புக்கு

**குழந்தைகளுக்கு பெரியார் சூட்டிய பெயர்களைப் பார்த்தாலே தெரியும், சித்தார்த்தன், புத்தன், கவுதமன், அசோகன், கவுதமி இப்படிப்பட்ட பெயர்களைத் தான் ஏராளமாக சூட்டியிருக்கிறார்.**

குறியீடாக பெரியார் புத்தரை முன் வைத்தார். "புத்தர் விழாவைக் கொண்டாடி பிள்ளையாரை விழாவில் உடையுங்கள்" என்றார். கோயில்களில் இருக்கும் விநாயகர் சிலைகளை தூக்கி வந்து பெரியார் உடைக்கச் சொல்லவில்லை; "கடைகளில் விநாயகன் பொம்மைகளை காசு கொடுத்து வாங்கி உடையுங்கள்" என்றார். "அரசு தடை போட்டால் தடையை மீற வேண்டாம். வீடுகளில், கடைகளில்,சொந்த இடங்களில் உடைத்து மண்ணில் கலந்து விடுங்கள்" என்றார். இப்போது இந்து முன்னணியினர் இரசாயன விநாயகன் சிலைகளை கடலில் கரைக்கச் சொல் கிறார்கள். நீர் நிலைகளை மாசுபடுத்துகிறார்கள். ஆனால் விநாயகன் சிலையை உடைக்கச் சொன்ன பெரியார், மண் பொம்மைகளை உடைத்து தூளாக்கி மண்ணோடு மண்ணாகக் கலக்கி விடுங்கள் என்று கூறியிருக்கிறார். திருச்சியில் பெரியாரே சிலையை உடைத்தார். பார்ப்பனர்களும், பார்ப்பனியத்துக்கு பலியான 'சூத்திரர்களும்' இதற்கு எதிர்ப்பாக பெரியார் உருவப்படத்தை எரிக்கிறார்கள் என்று செய்திகள் வந்தன. அப்போது பெரியார், "எரிப்பதற்கு என்னுடைய படத்தையும் அதற்கான செலவுத் தொகையையும் நானே தருகிறேன்" என்று 'விடுதலை' நாளேட்டில் அறிவித்தார். எதிரிகளின் எதிர்ப்பு வழியாகவே தனது கொள்கைகளை மக்களிடம் கொண்டு சென்றவர் பெரியார்.

1971ஆம் ஆண்டு சேலத்தில் பெரியார் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில் இராமன், விநாயகன், கிருஷ்ணன் ஆபாச பிறப்புகளை ஓவியங்களாக எடுத்துச் சென்றபோது சிலர் ஊர்வலத்தினர் மீது செருப்பு வீச, அதே செருப்பை பெரியார் தொண்டர்கள் எடுத்து, இராமன், விநாயகன், கிருஷ்ணன் மீது அடித்தார்கள். அதற்காக பெரியார் படத்தை சில ஊர்களில் எதிர்ப்பாளர்கள் எரித்தார்கள். செருப்பால் அடித்து போராட்டம் நடத்தினார்கள். அப்போதும் பெரியார், "நானே எனது படத்தையும் செருப்பையும் பாதி விலைக்கு தருகிறேன். நன்றாக அடியுங்கள். உங்கள் எதிர்ப்பு வழியாகவே எனதுகொள்கைகள் பரவும்" என்று அறிக்கை விடுத்தார்.

விநாயகன் சிலை உடைப்புப் போராட்டத்தை புத்தர் விழாவோடு பெரியார் ஏன் இணைத்தார் என்பதை நாம் கருதிப் பார்க்கவேண்டும். புத்த மார்க்கத்தில் மிகவும் போற்றப்படுவது அரச மரம். அந்த மரத்தின் கீழ் தான் புத்தருக்கு அறிவு ஒளி கிடைத்தது என்று ஒரு கதையும் உண்டு. எனவே அரசமரத்தடிகளில் புத்தர் சிலைகள் வைக்கப்பட் டிருந்தன. புத்தமதத்தை வன்முறை ஊடுருவல் சூழ்ச்சி முறைகளில் ஒழித்த பார்ப்பனர்கள், மரத்தின் கீழே அப்போது வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலைகளை அழித்து, அங்கே விநாயகன் சிலை களை வைத்தார்கள் என்றும் ஆய்வுகள் உண்டு.

பெரியார், புத்தரை மிகவும் மதித்த தலைவர், புத்தரின் விழாக்களில் பங்கேற்றுப் பேசியிருக்கிறார். வரலாற்றில் வர்ணாஸ்ர மத்துக்கு எதிராக மக்கள் இயக்கத்தைத் தொடங்கி வைத்தவர் புத்தர்தான்.

புத்தர் இயக்கம் முன் வைத்த மூன்று முழக்கங்களை பெரியார் விரும்பி ஏற்று, அதையே தனதுஇயக்கத்துக்கான முழக்கமாக வும் ஆதரித்துப் பேசினார். 'புத்தம் சரணம் கச்சாமி; தம்மம் சரணம் கச்சாமி; சங்கம் சரணம் கச்சாமி' - இதுதான் புத்தர் முன் வைத்த முழக்கம்.

"அறிவைப் (புத்தம்) போற்றுவோம்;
சமநீதி தத்துவத்தைப் (தம்மம்)
போற்றுவோம்;
இயக்கத்தைப் (சங்கம்) போற்றுவோம்"

- என்பதே இந்த முழக்கங்கள் முன் வைத்த கருத்து.

"பிராமணனைப் போற்று; அவன் கூறும் கடவுளுக்கு பயந்து அதற்கான கடமைகளை மேல் உலகம் போவதற்கான வேத சடங்கு முறைகளை பின்பற்று" என்று வேதகாலப் பார்ப்பனியம் மக்களை சுரண்டிய காலத்தில் புத்தர் இந்த புரட்சி முழக்கங்களை முன்

வைத்ததை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அந்தக் காலத்தில் இது புரட்சியின் குரல்தான்!

புத்தர் செய்த ஒரே தவறு - பார்ப் பனர்களை அவர்களும் 'தம்மத்தை' ஏற்பதாகக் கூறியதை ஏற்று மனித நேயத்தோடு தனது இயக்கத்தில் சேர்த்ததுதான். பார்ப்பன ஊடுருவலே புத்த மார்க்கத்தின் கொள்கைகளை சிதைத்தது. எந்த மண்ணில் புத்த மார்க்கம் வேர் விட்டதோ, அந்த மண்ணிலே துடைத் தெறிந்து அழித்தது. இந்த வரலாற்றுப் படிப்பினை தான் பெரியாரை விழிக்கச் செய்தது. திராவிடர் கழகத்தில் பார்ப்பனர்களுக்கு இடமில்லை; கொள்கையை ஏற்பவர்கள் இருந்தால் வெளியி லிருந்து தாராளமாக ஆதரிக்கலாம் என்பதில் பெரியார் உறுதியாக இருந்தார். அத்தகைய ஊடுருவல் புத்த மார்க்கத்தில் நிகழ்ந்ததுபோல் நடந்து விடக் கூடாது என்பதற்குத்தான், 'திராவிடர்' என்ற குறியீட்டுச் சொல்லை இயக்கத்தின் அடையாள மாக்கினார். "கடவுள் இல்லை இல்லவே இல்லை; கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்; பரப்பியவன் அயோக்கியன்; வணங்குகிறவன் காட்டு மிராண்டி" என்ற சமரசமற்ற முழக்கங்களை தனது சிலைகளுக்கு கீழேயும் கல்வெட்டு களாகவும் பெரியார் பதிக்கச் சொன்னார் என்பதைப் பார்க்கும்போது, புத்த மார்க்கத்துக்கு நேர்ந்த விபத்து, திரிபுவாதங்கள் எதிர்காலங் களில் தனது கொள்கைகளுக்கும் நேர்ந்துவிடக் கூடாது என்ற கருதிதான் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

குழந்தைகளுக்கு பெரியார் சூட்டிய பெயர்களைப் பார்த்தாலே தெரியும். சித்தார்த்தன், புத்தன், கவுதமன், அசோகன், கவுதமி இப்படிப்பட்ட பெயர்களைத் தான் ஏராளமாக சூட்டியிருக்கிறார். புத்த மார்க்கம் பெரியாரை எப்படி ஈர்த்திருந்தது என்பதற்கு இவையெல்லாம் சான்றுகளாக நாம் கருதலாம்.

கி.மு.563இல் கபிலவஸ்துவில் பிறந்த சித்தார்த்தரின் தந்தை சுத்தோதனர், அப்பகுதி யின் அரசர் என்றாலும் மனுதர்ம விதிப்படி ஆட்சி செய்யும் சத்திரியர் குலம் அல்ல என்றும், அவர் ஆட்சி செய்த பகுதி முடியரசாகவோ அல்லது குடியரசாகவோ நடக்கவில்லை என்றும் சுழற்சி முறையில் ஆட்சி அதிகாரம் நடந்தது என்றும் அம்பேத்கரும் தேவி பிரசாத் சட்டோபாத்யா போன்ற இந்திய தத்துவ ஆய்வாளர்களும் கூறுகிறார்கள். புத்தர் பிறந்த இனக்குழுவான சாக்கியர் குலம் சத்திரியர் வம்சம் அல்ல என்கிறார்கள்.

அப்போது இந்தியா என்ற நாடு இல்லை. இப்போதுள்ள வடநாடு தென்னாட்டுப் பகுதி களில் வாழ்ந்தவர்கள் நாகர்கள். அவர்கள்தான் திராவிடர்கள். இந்தியா முழுதும் பேசப்பட்ட மொழி தமிழ் என்கிறார் புரட்சியாளர் அம்பேத்கர். தென் பகுதியில் நாகர்கள் சமஸ்கிருதத்தை ஏற்க மறுத்ததால் திராவிடர்கள் என்ற அடையாளத்தைத் தக்க வைத்துக் கொண்டனர் என்றும் அம்பேத்கர் கூறுகிறார். புத்தர் பிறந்த சாக்கியர் குலம், நாகர்கள் மரபு வழிப்பட்டவர்கள். அவர்கள் பேசிய பாலி மொழி, திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். சாக்கியர்கள், "பிராமணர்களை வணங்குவதோ, மதிப்பதோ இல்லை. தானம் கொடுப்பதும் இல்லை" என்று கடும் சினத்துடன் அம்பக்தன் என்ற 'பிராமணன்' புத்தரிடம் கேட்டதாகவும் புத்தரின் சாக்கியர் குலம் இழிவானது என்று கூறியதாகவும் பவுத்த கருத்துகளின் தொகுப்பான 'திரிபிடகம்' கூறுகிறது. புத்தரின் சாக்கிய குலம் வர்ணாஸ்ரம தர்மப்படி பார்ப்பன மேலாதிக்கத்தை எதிர்த்து வந்திருக்கிறது என்ற முடிவுக்கு வர முடிகிறது. திராவிட சாக்கிய மரபில் பிறந்த புத்தர், ஒரு 'சூத்திரர்' என்று வரலாற்றாளர்கள் கூறுகிறார்கள்.

புத்தர் அறிவைத் தேடி புறப்பட்டபோது அவருக்கு வயது 29. அவர் துறவுக்குக் காரணமாக சொல்லப்படும் கதையை அம்பேத்கர் மறுக்கிறார். ஒரு நோயாளி, ஒரு முதியவர், ஒரு பிணம். இதைப் பார்த்து கவலைப்பட்ட புத்தர் துன்பங்களிலிருந்து விடுதலை பெற அறிவைத் தேடும் முயற்சியாக துறவியாக முடிவு செய்தார் என்ற கதை அறிவுக்குப் பொருந்தக் கூடியதாக இல்லை. 29 வயது வரை இத்தகைய துன்பத்துக்கு உள்ளாகும் மனிதர்களை புத்தர் சந்திக்கா மலேயே இருத்திருப்பாரா? அப்படி இருந்திருக்க முடியாது. புத்தரின் துறவுக்கு வரலாற்று ரீதியான காரணத்தை அம்பேத்கர் விளக்குகிறார்.

புத்தரின் சாக்கிய குலத்துக்கும் மற்றொரு குலமான கோலியர் என்ற குலத்துக்கும் இடையே எல்லையாக ரோகினி என்ற ஆறு இருந்தது. இந்த ஆற்றின் நீரைப் பயன்படுத்தும் முதல் உரிமை யாருக்கு என்பதில் இரண்டு இனக் குழுக்களுக்கிடையே சண்டை. சாக்கியர்கள் ஒன்று கூடி கோலியர்கள் மீது தாக்குதல் நடத்த முடிவு எடுத்த போது - சித்தார்த்த புத்தர் போர் என்ற முடிவை எதிர்க்கிறார். சாக்கியர் சங்கம் புத்தரை புறந்தள்ளுகிறது. புத்தரும் கபிலவஸ்துவை விட்டு வெளியேறினார். ஆனால், இந்த மேலோட்டமான நிகழ்வுகளை யும் கடந்து நிற்கிறது புத்தரின் துறவு. இனக் குழுக்கள் தங்களுக்குள் சண்டையிட்டு அழிவதற்கும் இந்த அழிவுகளுக்கு அரசுகளின் ஆதரவும் அடக்குமுறைகளும் காரணமாக இருந்ததை உணர்ந்த புத்தர், வேதகால சமூகக் கட்டமைப்பை உறுதிப்படுத்திக் கொண் டிருந்த ‘வர்ணாஸ்ரமத்தை’ ஒழித்து மக்களுக்குள் சமநீதி உருவாக வேண்டிய தேவையை உணர்ந்ததால் உருவானதே பவுத்தம் என்பதே பல ஆய்வாளர்கள் கருத்தாக இருக்கிறது. “ஜாதியக் கொடுமைகளையும் புரோகிதர்களின் ஏமாற்று மோசடிகளையும், சடங்குகளையும் ஒழிக்க வந்ததுதான் பவுத்தம்” என்று நேரு தனது மகள் இந்திராவுக்கு சிறையிலிருந்து எழுதிய கடிதத்தில் கூறுகிறார்.

பார்ப்பனிய வேதகால கட்டமைப்பை பவுத்தம் தகர்த்தது என்பதற்கு சான்றாக பவுத்த மார்க்கம் ‘சூத்திரர்’களை பெண்களை பிட்சுகளாக ஏற்றதைக் குறிப்பிடலாம். “பிறப்பினால் ஒருவன் சண்டாளன் ஆவதும் இல்லை; பிறப்பினால் ஒருவன் பிராமணன் ஆவதுமில்லை” என்றார் புத்தர். “பிராமணனே பிறப்பில் உயர்ந்தவன்; ஏனையோர் தாழ்வானவர்கள்” என்று அஸ்ஸலாயனா என்ற பார்ப்பனர் புத்தரிடம் சொன்னபோது, புத்தர் அந்தப் பார்ப்பனருக்கு தந்த பதில் மிகவும் அற்புதமானது.

“அண்டை நாடுகளில் எஜமானன், அடிமை என்ற இரு பிரிவினர்தான் இருக் கிறார்கள். அடிமைகூட எஜமானாக மாற முடியும். ஆனால் உங்கள் வர்ணாஸ்ரம அமைப்பு - ஏன் மாற்றங்களுக்கு இடம் தருவது இல்லை? உலகத்தில் எங்கும் இல்லாத ஒரு சமூக அமைப்பை வைத்திருக்கிறதே!” என்று கேட்ட புத்தர் தொடர்ந்து பேசுகிறார்.

“யாகத்துக்காக நீங்கள் நெருப்பைமூட்டி அதில் யாகத்துக்காகவே பொருள்களைக் கொட்டி ஜாதியை சுத்தம் செய்துவிடலாம், தீங்குகளை ஒழித்து விடலாம் என்று கூறுகிறீர்கள். ஒருவனை ஜாதியிலிருந்தும் தீங்கிலிருந்தும் விடுவிக்கும் சக்தி நீங்கள் வளர்க்கும் யாக நெருப்புக்கு உள்ளே இல்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள். அது அந்த யாக நெருப்புக்கு வெளியே இருக்கிறது. அந்த நெருப்பு மக்களின் சிந்தனைகளில் மூட்ட வேண்டிய நெருப்பு. நான் அந்த நெருப்பைத் தான் மூட்டுகிறேன்; நீங்கள் மூட்டிய யாக நெருப்பு அணைந்துவிடும்; நான் மக்களின் சிந்தனையில் மீட்டும் நெருப்பு அணையாது” என்று பதிலடி தந்தார் புத்தர்.

“உடலுக்குள் ஆன்மா இருக்கிறதா? உடலும், ஆன்மாவும் வெவ்வேறானதா என்று கேட்ட சீடர்களிடம் அந்த அனுமான ஆராய்ச்சிகளில் நான் ஈடுபடுவது இல்லை. காரணம் இதனால் மனித இனத்துக்கு எந்த நன்மையும் கிடையாது” என்பதே புத்தரின் பதிலாக இருந்தது.

தனது சீடர்களிடம் புத்தர் கூறுகிறார், “பிட்சுக்களே; உடல் - ஒரு பொருள் தான்; அதற்குள் ‘ஆத்மா’ இருக்கிறது என்றால், அந்த ‘ஆத்மா’ நோய் உள்ளிட்ட இன்னல்களை உடலுக்கு தந்திருக்குமா? உடலுக்குள் ஆத்மா இல்லை என்கிறார். இதுவே புத்தரின் ‘அனாத்மா’ (ஆத்மா அற்றது) கோட் பாட்டின் கருத்து. ‘கந்த சம்யுத்தம்’, ‘மகாவக்கம்’ ஆகிய நூல்களில் புத்தரின் இந்த கருத்துகள் பதிவாகி யிருப்பதை ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டு கிறார்கள். பெரியார் கடவுள் மறுப்போடு, “ஆன்மா, மோட்சம், நரகம், பிதிர்லோகம்’ மறுப்பையும் புத்தரைப் போலவே முன் வைத்தார்.

**புத்தர் கூறிய கதை**

“உலகம் நிலையானதா? நிலையில்லாததா? என்ற கேள்விக்கு விளக்கம் வேண்டும் என்றும்,

**“ஜாதியக் கொடுமைகளையும் புரோகிதர்களின் ஏமாற்று மோசடிகளையும், சடங்குகளையும் ஒழிக்க வந்ததுதான் பவுத்தம்”**

அப்போது தான் பவுத்தத்தில் இணைவேன்” என்று புத்தரிடம் கேட்டிருக்கிறார் ஒருவர். அவரது பெயர் மாலுங்கிய புத்தர். அதற்கு புத்தர் அளித்த பதில் மிகவும் ஆழமானது. புத்தர் ஒரு கதையை கூறுகிறார். “ஒருவர் மீது நஞ்சு கலந்த அம்பு பாய்ந்து விடுகிறது. உடனே மருத்துவரிடம் சிகிச்சைக்கு அழைத்துப் போகிறார்கள். அப்போது, அந்த நோயாளி மருத்துவரிடம், “மருத்துவரே, என் மீது இந்த அம்பை வீசியவன் பிராமணனா? க்ஷத்திரியனா? வைசியனா? சூத்திரனா? கருப்பனா? சிவப்பனா? அந்த வில் எத்தகையது? வில்லின் நாண் எந்தப் பொருளால் ஆகியது? இவற்றுக்கெல்லாம் விளக்கம் வேண்டும். இல்லாவிட்டால் நான் சிகிச்சைக்கு ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று கூறுவானேயானால், அவன் இந்த வினாக் களுக்கு விடை தெரிந்து கொள்வதற்கு முன்பே செத்துப்போய் விடுவான். அதுபோலவே உலகம் நிலையானதா? நிலையற்றதா என்பதைப் புரிந்து தெளிவு பெற்ற பிறகே புத்த மார்க்கத்துக்கு வருவேன் என்றால், விளக்கம் - விடை கிடைப்பதற்கு முன்பே மரணம் வந்து விடும். உலகம் நிலையற்றது என்று மோட்சம் போக நம்புகிறவர்களுக்கும், மூப்பு, நோய், இறப்பு உண்டு. உலகம் தான் நிலையானது என்று நம்புகிறவர்களுக்கும் இதே பிரச்னைகள் உண்டு. எனவே இந்தப் பிரச்னைக்குள் நுழைந்து நான் அலசி ஆராய்ச்சி செய்வதெல்லாம் கிடையாது” என்று பதில் கூறினார் புத்தர்.

“மனிதர்களை கடவுள் படைத்தாரா?” என்ற கேள்விக்கும் புத்தரின் பதில் இது போலவே இருந்தது. “மனிதன் அனுபவிக்கும் இன்பம், துன்பம், கடவுள் படைத்தது என்றால், அந்தக் கடவுள் இந்த துயரங்களையும் மனிதர் களோடு சேர்த்து படைத்தாரா? கொலையாளி களையும், திருடர்களையும் கடவுள் தான் படைத்தாரா என்ற கேள்வியை எழுப்பிய புத்தர், இப்படித்தான் கடவுள் படைப்பு என்றால் ஒரு மனிதனுக்கு நற்செய்கையில் எப்படி ஊக்கமும் உற்சாகமும் கிடைக்கும்” என்ற அறிவார்ந்த கேள்வியை எழுப்பினார்.

வேதங்கள் கடவுளை ‘பிரம்மம்’ என்று கூறுகிறது. அந்தக் கடவுளைஅடைவதற்கு தங்களுடைய ‘வேதம்’ வழிகாட்டுவதாக ‘பிராமணர்கள்’ கூறினார்கள். வாசேத்தர் என்ற இளம் பார்ப்பனர் ஒருவர் இது குறித்து புத்தரிடம் நடத்திய உரையாடல் ‘தீவிக்க சுத்தம்’ என்ற பவுத்த நூலில் இடம் பெற்றுள்ளது. வெவ்வேறு பாதைகளை ‘பிரம்மத்தை’ அடைவதற்கு பார்ப்பனர்கள் வழி காட்டுகிறார்கள் என்பது உண்மையா என்று வாசேத்தர் கேட்ட கேள்விக்கு புத்தர் சில எதிர் கேள்விகளை முன் வைத்தார். வேதங்களில் சொல்லப்படும் ‘பிரம்மத்தை’ கடவுளை - எந்த ஒரு ‘பிராமணராவது’ நேரில் பார்த்திருக் கிறாரா? அல்லது இந்த ‘பிராமணர்களின்’ குருநாதர்கள் பார்த்திருக்கிறார்களா? இந்த குருநாதர்களில் யாரேனும் ஒரு மாணவராவது பார்த்திருக்கிறாரா? புத்தரின் இந்தக் கேள்விகளுக்கு அப்படி பார்த்ததாக எந்த ‘பிராமணரும்’ கூறவில்லை என்று வாசேத்தரிட மிருந்து பதில் வருகிறது. “தாங்களே அறியாததை பார்க்காததை பிறருக்கு - அதை அடைவதற்கான பாதை காட்டுவதாகக் கூறுவது முட்டாள்தனம் அல்லவா” என்றுகேட்கிறார் புத்தர்.

“வேத பார்ப்பனியம் ஒதுக்கி இழிவு செய்த சூத்திரர்களை பிட்சுகளாக அங்கீகரித்தது புத்த மார்க்கம். வேதத்தை சூத்திரன் படிக்க தடை போட்டது பார்ப்பனியம். ஆனால் முடிதிருத்தும் நாவிதர் சமூகத்தில் பிறந்த உபாலி பவுத்த சங்கத்தில் புத்தருக்கு அடுத்த இடத்தில் உயர்த்தப்பட்டதோடு பவுத்த நூலான திரிபிடகத்தைப் படித்து மற்றவர்களுக்கு விளக்கக் கூடிய உரிமையையும் பவுத்த சங்கம் வழங்கியிருந்தது” என்ற தகவலை அம்பேத்கர் எடுத்துக் காட்டுகிறார். பெண்களை இயக்கத்தில் சேர்க்க முதலில் தயங்கினார் புத்தர். பவுத்தத்தின் நெறி பிறழ்ந்து விடுமோ என்ற அச்சம் இருந்தது. பிறகு நிபந்தனைகளோடு இணைத்துக் கொண்டார். அன்றைய சமூக நிலையோடு பொருத்தி புத்தர் முன்னெடுத்த செயல்பாடாக இதைப் பார்க்க வேண்டும். வீதிகளை சுத்தப்படுத்தும் வேலைசெய்து வந்த சுனிதாவை

**“தாங்களே அறியாததை பார்க்காததை பிறருக்கு – அதை அடைவதற்கான பாதை காட்டுவதாகக் கூறுவது முட்டாள்தனம் அல்லவா” என்று கேட்டார் புத்தர்.**

சங்கத்தில் சேர்த்து துறவியாக்கினார் என்ற தகவலும், அந்தப்பெண் பல பாடல்களை இயற்றக்கூடிய ஆற்றல் பெற்றார் என்பதையும், ‘தேரிகதா’ என்ற பவுத்த நூல் விவரிப்பதை ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். “புத்தர் ஒரு நாத்திகராக இருந்தாலும் அவரைப் போல் மக்களால் கடவுளாக மதிக்கப் பட்டவர்கள் வேறு எங்கும் பார்க்க முடியாது” என்று கூறுகிறார் அம்பேத்கர். “தன்னிடம் தெய்வீகத் தன்மை இருக்கிறது என்று பெருமைப்படும் ஆணவமற்ற எளிய மனிதர்” என்று படம் பிடிக்கிறார் அம்பேத்கர்.

பெரியாரும் இப்படித்தான் வாழ்ந்தார். “என்னை மகாத்மாவாக்கி விடாதீர்கள்” என்று கேட்டுக் கொண்டார், பெரியார். “அப்படி மதிக்கப்படாமல் எனது வார்த்தைகள், அபிப்பிராயங்கள் அதற்குண்டான சரியான மதிப்புப் பெற வேண்டுமானால், நான் அயோக்கி யனாகவும் மாறாக பணம் சம்பாதிப்பவனாகவும் திருடனாகவும் கருதும்படியாக பிரச்சாரம் செய்பவர்கள் உதவி செய்தவர்களே ஆவார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் மனிதத் தன்மைக்கு மீறிய எந்த குணத்தையும் என் மீது சுமத்தி விடாதீர்கள்” என்று சொன்னவர், பெரியார்.

பெரியாரும் புத்தரும் இங்கே ஒரே புள்ளியில் இணைவதைப் பார்க்கிறோம்.

புத்தரும் புத்தரின் சீடர்களும் நாடு முழுதும் சுற்றி மக்களை சந்தித்தார்கள்; விவாதித்தார்கள்; உரையாடினார்கள். பெரியாரும் பெரியார் இயக்கமும் அதைத்தான் செய்தது. பெரியார் சுற்றுப்பயணம் செய்யாத நாட்களே இல்லை. ஒவ்வொரு நாளும் மக்களை சந்தித்துப் பேசுவதே பெரியாருக்கு உற்சாகத்தை யும் உடல்நலப் பாதுகாப்பையும் தந்தது.

புத்தர் 29 வயதில் வீட்டைவிட்டு வெளியேறி 7 ஆண்டுகள் மக்கள் வாழ்வியலில் சந்திக்கும் பிரச்னைகள் அனுபவங்களின் வழியாக உணர்ந்தார். அதே அனுபவங்கள் இளமைக் காலம் முதல் பெரியாருக்கும் இருந்தது. தந்தையின் கடையில் சிறுவனாக வியாபாரத்திற்கு உதவியபோதும் வீட்டைவிட்டு வெளியேறி வடமாநிலங்களில் துறவியாக சுற்றித்திரிந்த போதும், கொள்கைக்காக கதர் மூட்டைகளை சுமந்து சென்று மக்களிடம் விற்பனை செய்தபோதும், காங்கிரஸ் கட்சியின் பொறுப்புகளை ஏற்று கடமையாற்றிய போதும் அவருக்குக் கிடைத்த அனுபவங்கள் அதன் வழியாக உருவாகிய எண்ண ஓட்டங்கள், சுயமரியாதை என்ற ‘தம்மம்’ நோக்கி பெரியாரை உந்தித் தள்ளியது.

புத்தர், 43 ஆண்டுகள் பார்ப்பனியத்துக்கு எதிராக மக்களை அணி திரட்டி, 80ஆவது வயதில் முடிவெய்தினார். புத்தரின் பேச்சுகளும் உரைகளும், விவாதங்களும் அவரது காலத்தில் தொகுக்கப்பட வில்லை. புத்தர் மறைந்து சுமார் 400 ஆண்டுகளுக்குப் பிறகுதான் ‘திரிபிடகம்’ என்ற பெயரில் நூல்களாக எழுதப்பட்டன. ஆனால் பெரியார் வாழ்நாள் முழுதும் ஆற்றிய உரைகள், எழுத்துகள், அவர் நடத்திய ‘குடிஅரசு’, ‘புரட்சி’ பகுத்தறிவு இதழ்கள் வழியாக அச்சு வடிவம் பெற்றிருந்தாலும், அவைகள் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லப்படாமல் பெரியார் உருவாக்கிய நிறுவனம், இயக்கத்தோடு முடங்கிக் கிடந்த நிலையில் தான், பெரியார் திராவிடர் கழகம் ‘குடிஅரசு’ தொகுப்புகளை தேடிப் பிடித்து தொகுத்து வெளியிட முன் வந்தது. இதற்காக சட்டப் போராட்டங்களை சந்திக்க வேண்டியிருந்தது. பெரியார் கருத்துகளை முடக்கிவிடக் கூடாது என்று நீதிமன்றத்தின் வழியாக போராடி பெற்ற உரிமைதான், இன்று பல்வேறு பதிப்பகங்கள் வழியாக தொகுதி தொகுதியாக வெளி வந்து கொண்டிருக்கின்றன. சமூக மன்றத்துக்காக களமிறங்கி நிற்கும் இளைஞர்களிடமும் ஜாதி ஒழிப்புப் பெண்ணுரிமைக் களங்களில் பயணிக்கும் தோழர்களிடமும் பெரியாரின் சிந்தனைகள் அறிவாயுதமாக பயன்படுகிறது.

(தொடரும்)



*கருநாடக இசை 'இந்து'க் கடவுள்களுக்கே உரித்தானது என்று பார்ப்பனர்கள் வெளிப் படையாகப் பேசுவதோடு பிற மதக் கடவுள்களை கருநாடக இசையில் பாடுவோரையும் மிரட்டுகிறார்கள். இசைக்கு மதம் உண்டா என்ற கேள்வியை எழுப்புகிறார், கட்டுரையாளர்.*

# கருநாடக இசை பார்ப்பனர்களின் தனிச் சொத்தா?

● ராமச்சந்திர வைத்தியநாத்

கர்நாடக சங்கீதம் எனும் மரபு சார்ந்த இசை வடிவம் காலங்காலமாய் இருந்த கட்டுத் தளைகளிலிருந்து அறுபட்டு ஜனநாயகப் படுத்தும் முயற்சிகளுக்கு உட்படுகையில், அதை சாதி வடிவத்திற்குள் அடைக்கும் சமீபத்திய முயற்சி விபரீதமானது. இந்து இசைக் கலைஞர்கள் இந்து அல்லாத மற்ற மதங்களுக் குரிய தெய்வங்களைப் பற்றியோ,நம்பிக்கைகள் குறித்தோ பாடலாகாது என்று எச்சரிக்கை விடப்படுகிறது. எச்சரிக்கை விடுக்கும் ராமநாதன் எனும் அந்நபர் ராஷ்ட்ரீய சனாதன் சேவா சங் எனும் அமைப்பின் நிர்வாகி என்ற முறையில் பல்வேறு இசைக் கலைஞர்களை தொடர்பு கொண்டு அச்சுறுத்தியும் வருகிறார். பார்ப்பனர்களுக்கான பிரத்யேக அரசியல் அமைப்புதான் ராஷ்ட்ரீய சனாதன் சேவா சங் என்று அவரும், சென்னை செல்வகுமார் சாஸ்திரிகளும் கூறி வருவதால் இந்த எச்சரிக்கை பார்ப்பன இசைக் கலைஞர்களுக்கே விடப் பட்டதாக கூற முடியும். அதிலும் தூய தமிழ்ப் பெயரை அவ்வமைப்பு கொண்டுள்ளதால் இவ் வமைப்பு தமிழ்நாட்டைச் சார்ந்த பிராமணர் களை பாதுகாத்திடும் நோக்கத்தை கொண்டது என்பதை சொல்லாமலேயே அறியலாம்.

செல்வகுமார் சாஸ்திரிகள் நேர்காணல் யு டியுப்பில் உள்ளது. பின்னணியில் காஞ்சிபுரம் சங்கராச்சாரி சந்திரசேகரரின் படங்கள் சற்று அதிகமாகவே அடுக்கி வைக்கப்பட்டுள்ளதை காண முடிகிறது. 1927ல்காந்தியடிகள் காங்கிரஸ் மாநாட்டையொட்டி சென்னைக்கு வந்தபோது ஆலய பிரவேசம், ஹரிஜன் எனும் வார்த்தைப் பிரயோகம் போன்றவற்றுக்கு எதிராக சனாதன தர்மம்,வேதம், சாஸ்திரம், சம்பிரதாயம் ஆகியவற்றை பாதுகாக்கும் வகையில் இதே சந்திரசேகரர் அளித்த ஊக்கத்தின் பேரில் சனாதன சங்கமும், ஆர்ய தர்மம் எனும் பத்திரிக்கையும் சோமதேவ சர்மா என்பவரால் துவக்கப்பட்டது என்பதும், “காந்தியே நீர் போம்'' என்று காஞ்சிபுரம் ஆசாமி எழுதிய கானாப்பாட்டு ஒன்றும் அத்தருணத்தில் பிறந்தது என்பதும் நினைவிற் கொள்ளத்தக்கது.

இசைக்கான புதிய இலக்கணத்தை உருவாக்க முயலும் ராமநாதன் கடந்த காலங்களில் இசையை மக்களிடம் கொண்டு செல்வதில், மாற்றங்களை உருவாக்குவதில், ஆய்வுகளை மேற்கொள்வதில், வாய்ப்பாட்டில், இசைக் கருவிகளை பயன்படுத்துவதில் அல்லது அவரே தன்னைப் பிரகடனம் செய்து கொள்வது போல் “கடையனுக்கும் கடைத்தேற்றம்” என்ற அடிப்படையில் சவுண்டிப் பார்ப்பனர் போன்ற அடித்தட்டு பார்ப்பனர்களின் உயர்வுக்கு ஏதாவது பங்கு பணியாற்றியுள்ளாரா என்ற கேள்வி இயல்பாகவே எழக்கூடும். அச்சுறுத்து வது, மாற்றர் மீது வன்மத்தைப் பொழிவது என்பது மட்டுமே இவரது செயல்பாடாக இருந்து வருவதை அறிய முடிகிறது. மத நல்லிணக்கத்திற்கு எதிராக மட்டுமல்ல சாதிக்குள்ளுளேயே ஒரு பகைமை உணர்வை உருவாக்கி அசுர விருட்சமாக்கும் இத்தகைய அயோக்கியத்தனமான முயற்சிகளை கலைஞர்கள் மட்டுமல்ல இசை ரசிகர்களும் ஜனநாயக சக்திகளும் எதிர்க்க வேண்டும். ராமநாதன் போன்ற ஹிட்லரின் பரம்பரையை வளரவிடுவது இசைக் கலைக்கும், பண்பாட்டி

யலுக்கும் மட்டுமின்றி அனைத்துப் பிரிவின ருக்கும் பேராபத்தாகவே அமைந்துவிடும்.

மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்னைகள் பார்ப்பனர், செட்டியார், முதலியார், நாயுடு என்பதால் உருவானதல்ல. ஒட்டுமொத்த மக்கள் சமூகமும் எதிர்கொள்ளும் பிரச்னைகளைத்தான் அந்தந்த ஜாதி, மதம், மொழி சார்ந்த மக்கள்அனைவருமே எதிர் கொள்கிறார்கள். இதைக்கடந்து வெவ்வேறு பகுதிகளில் சாதி, மொழி, மதம்அடிப்படையில் அடக்கு முறைக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஒரு பகுதியினர் ஆளாகி வருவதுஇன்றும் தொடர்ந்து வருகிறது. சிறுபான்மையினரின் அடக்கு முறைக்கு, பெரும்பான்மையினர் ஆளாவது நிகழ்ந்து வருவது என்பது வரலாற்று வக்கிரங்களில் ஒன்றாகும். மயானப் பாதை, ஊரின் பொதுப்பகுதிக்கு செல்லமுடியாத தனிச் சுவர், ஊருக்கு வெளியே தனித்த வாழ்விடம் இன்னும் நகரங்களில் வாடகை வீடு போன்ற சமூகப் பிரச்னைகளையும், பார்ப்பனர்கள் சாதாரணமாக எதிர்கொள்ளும் பிரச்னைகளை யும் ஒப்பிடமுடியாது. அவர்களின் அடை யாளங்கள் ஆபத்துக்குள்ளாவதில்லை. இன்னும் சொல்லப் போனால் பார்ப்பனர்களின் அடை யாளங்களை, இறை வழிபாடு உள்ளிட்ட பண் பாட்டியலை சுவீகரித்துக் கொள்ளும் விபரீத மானமான போக்கு நகரம் கிராமம் என்ற வேறு பாடின்றி மற்ற சாதியினரிடம் பரவி வருகிறது.

இப்பின்னணியில் ராஷ்ட்ரீய சனாதன் சேவாசங்கின் அச்சுறுத்தல் முளையிலேயே முறியடிக்கப்படவில்லையென்றால், அடுத்த கட்டத்தில் பார்ப்பனரல்லாத மற்ற இந்து இசைக் கலைஞர்கள், பிறமதங்களைச் சார்ந்த தெய்வங்களைப் பற்றிய பாடல்களை பாடலாகாது என்றும், மற்ற மதக் கடவுளர் பற்றி பாடல்களை எழுதலாகாது என்றும் கட்டளை பிறப்பிக்கப்படும். இது ஏதோ ராமநாதன் எனும் ஒரு சாதி வெறியனின் குரலாக கருதலாகாது. ஒற்றை பண்பாட்டியல் என்று பூனேயில் உருவான கோட்பாட்டை, டில்லியில் மதவாத சக்திகள் வேர்கொண்ட பின்னர் தேசமெங்கும் கொண்டு செல்ல நடைபெற்று வரும் பல்வேறு முயற்சிகளின் ஒன்றுதான் கோயம்பத்தூர் அச்சுறுத்தல்.

பிரபுத்துவ பண்பாட்டியலுக்கே உரிய அளவில் கர்நாடக இசை இருந்து வந்திருந்தா லும், ஜனநாயக சக்திகளின் தலையீட்டின் காரணமாய் திரைப்படங்களிலும், இசை நிகழ்வுகளிலும் ஓரளவு மதவெறியற்று, சாதிக்கு அப்பாற்பட்டுதான் வெளிப்பட்டு வந்திருக்கிறது. அதை மேலும் வெகு மக்களின் பண்பாட்டியல் கூறாக மாற்றும் முயற்சி சமீப காலங்களில் வேகம் பெற்று வருகிறது. இன்றைய தினம் கர்நாடக இசையையும் அது சார்ந்த இதர வடிவங்களையும் மக்களிடம் கொண்டு செல்வதில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சாதியை, மதத்தை, மொழியை சார்ந்த மக்களுக் கும் பங்கு இருக்கிறது. சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் இதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு விட்டது.கீர்த்தன ரஞ்சிதம் வழங்கிய முகமது அப்துல்லா லெப்பை ஆலிம், தஞ்சை ஆபிரஹாம் பண்டிதர், மாயூரம் வே தநாயகம் பிள்ளை போன்ற இந்து அல்லாதவர் களும் முன்னோடிகளாக பங்களிப்பை கொண்டிருக்கின்றனர். பின்னாளில் இசை வேளாளர்களும், தேவதாசி பாரம்பரியத்தைச் சார்ந்தவர்களும், திருவிதாங்கூர் மன்னரும், இதர ஜமீன்தார்களும் கர்நாடக இசையையும் பின்னாளில் பரதம் என்று அழைக்கப்பட்ட சின்ன மேளத்தையும் ஊக்குவித்தார்கள்.

மதுரை சண்முகவடிவு, வீணை தனம்மாள், மதராஸ் லலிதாங்கி, எம்.எஸ்.சுப்புலட்சுமி, எம்.எல்.வசந்தகுமாரி, என்.சி.வசந்தகோகிலம், பிருந்தா, முக்தா, பாலசரஸ்வதி, சொர்ணமுகி, அலர்மேல் வள்ளி, மதுரை சோமு, சௌடய்யா, சீர்காழி கோவிந்தராஜன், சிதம்பரம் ஜெயராமன், டி.வி.கோபாலகிருஷ்ணன், த்வரம் வெங்கடசாமி நாயுடு, சிட்டிபாபு, காஞ்சிபுரம் நைனாப் பிள்ளை, சித்தூர் சுப்ரமண்யப் பிள்ளை, திருவாடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, காருகுறிச்சி அருணாசலம், மதுரை சேதுராமன் சகோதரர்கள், ஏ.கே.சி நடராஜன், பழனி சுப்ரமண்ய பிள்ளை, மாவேலிக்கரா வேலுக் குட்டி நாயர், நூகல சின்ன சத்ய நாராயணா போன்ற பார்ப்பனரல்லாதோரும் ஏசுதாஸ், ஷேக் சின்ன மௌலானா சாஹிப், ஷேக் மகபூப் சுபானி தம்பதியினர் போன்ற இந்துக்கள் அல்லாதவரும் ஏன் ஜான் ஹிக்கின்ஸ் பாகவதர் போன்ற அந்நியரும்கூட கர்நாடக இசையை மேம்படுத்தியதில் மக்களிடத்தில் கொண்டு செல்வதில் மகத்தான பங்காற்றியவர்கள் என்பதை தமிழ் மக்கள் நன்கறிவர்.

இசை நிகழ்ச்சிகளில் பிற மதக் கடவுளர் பற்றிய பாடல்களை பாடுவது ஒரு ஆரோக்கியமான துவக்கமாகவே அமையும். டி.எம்.கிருஷ்ணா போன்றோரின் இத்தகைய

முயற்சி வரவேற்கப்பட வேண்டும். இசையை அனைத்து தரப்பினரிடமும் கொண்டு செல்லும் நடவடிக்கையாகவே இதைக் கொள்ள வேண்டும். அதே தருணத்தில் சமரச உணர்வை, நல்லிணக்கத்தை, மக்கள் ஒற்றுமையை வலி யுறுத்தி கர்நாடக இசை வடிவங்களில் ஏராள மான திரைப்பாடல்களும் தனிப்பாடல்களும் இன்றும் தமிழகத்தில் எங்கும் ஒலித்துக் கொண்டு தான் இருக்கிறது. இவை மக்களிடையே நம்பிக்கையை, அன்பை விதைத்து வந்திருக்கிறது என்றும் சொல்ல முடியும்.

நூறு வகை பறவை வரும்
கோடி வகை பூ மலரும்......
ஆடையின்றி பிறந்தோம்
ஆசையின்றி பிறந்தோமா......
கடலுக்கு பிரிவுமில்லை
கடவுளில் பேதமில்லை.....
மண்ணிலே விண்ணைக் கண்டு....
எல்லோரும் கொண்டாடுவோம்
அல்லாவின் பேரைச் சொல்லி......

திரைப் பாடல்களை அறியாதோர் இதை ஏதோ ஒரு சித்தரோ, சூஃபி கவிஞரோ எழுதிய பாடலாகத்தான் சொல்லுவர். கண்ணதாசன் அவர்களால் எழுதப்பட்ட இப்பாடலுக்கு இசை வடிவம் கொடுத்ததும், காட்சிப்படுத்தியதும் இஸ்லாமியர் அல்லாதவர்களே. இதே போன்று வாலி அவர்கள் எழுதிய "நீ இல்லாத இடமே இல்லை நீ தானே உலகின் எல்லை" என்ற பாடல் இஸ்லாமியர்களல் மட்டுமல்ல, இசை வடிவில் நாட்டம் கொண்ட மற்றவராலும் விரும்பக் கூடியது.

தமிழ்த் திரைப்படங்களில் அவ்வப்போது இந்து அல்லாத பிற மதக் கடவுள்களைப் போற்றக்கூடிய பாடல்கள் வெளிவந்து கொண் டிருப்பதோடு அவை மக்களிடையே பெருத்த வரவேற்பினையும் பெற்றுள்ளது. இதற்கு ஏராளமான எடுத்துக் காட்டுகளை முன்வைக்க முடியும். எனை ஆளும் மேரி மாதா, சத்திய முத்திரை கட்டளை இட்டது, கருணை மழையே மேரி மாதா, அல்லாவின் கருணையாலே, தேவன் கோயில் மணியோசை, நீலக்கடலின் ஓரத்திலே இப்படி பல பாடல்கள் கர்நாடக இசை வடிவில் அதன் தாக்கத்தில் திரைப்படங்களில் வெளியாகி யுள்ளது. அந்த பாடலின் உருவாக்கம், இசை, காட்சிப்படுத்துவது போன்றவற்றில் அம்மதம் சாராதவர்களே பங்களிப்பை கொண்டிருந்தனர் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது. இத்தகைய முயற்சிகள் திரைப்படம், தனிப் பாடல், இசை நிகழ்வுகள் போன்ற பல்வேறு களங்களிலும் தொடருகையில் மக்கள் உணர்வில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. மதவெறிக்கு எதிராக மனிதனை பக்குவப்படுத்துகிறது என்றும் கூற முடியும். எனவேதான் ஆர்.எஸ்.எஸ். பையிலிருந்து வெளிவந்த நரிக்குட்டியான ஆர்.எஸ்.எஸ்., இசைக் கலைஞர்ககளை மதத்துக்கு வெளியே செல்லாதீர்கள் என்று கட்டளையிடுகிறது.

"செல்லாத்தா செல்ல மாரியாத்தா, எங்கள் சிந்தையில் வந்து அருளோடு நில்லாத்தா" என்ற பாடலை தமிழ்நாட்டில் கேளாமல் ஒருவர் இருக்க முடியாது. இன்றைய தினம் தமிழக மெங்கிலும் ஆடி மாதம் என்றில்லாமல், பெண் தெய்வங்களைப் போற்றக்கூடிய வழி பாட்டு இடங்களிலெல்லாம் அன்றாடம் ஒலிக்கும் தமிழ்ப்பாடல் இது. "தென்னமரத் தோப்பினிலே தேங்காயைப் பறிச்சுக்கிட்டு" என்று பக்தி பூர்வமாக பாடுகையில் நமக்கே தென்னந் தோப் பிற்குள் சென்ற உணர்வை ஏற்படுத்தக்கூடிய ஒப்பற்ற குரல்வளம். இப் பாடலை பாடியவர் பாரம்பரிய ரோமன் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்த எல்.ஆர்.ஈஸ்வரி எனும் லூர்து மேரி ராஜேஸ்வரி ஆவார். இவரது அம்மன் பாடல் களை கேட்டு உத்வேகம் பெற்றவர்களின் பட்டி யலில் நாம் மட்டுமல்ல செல்லாத்தாவும், கற்பூர நாயகியும்கூட இருக்கக் கூடும். தமிழ்நாட்டில் மத நம்பிக்கையில் காழ்ப் புணர்ச்சிக்கு இடமே இல்லை என்பதன் வெளிப்பாடுதான் எல்.ஆர்.ஈஸ்வரியின் உருவமும் குரலும்.

ராமநாதன், செல்வகுமார் சாஸ்திரிகள் இன்னும் இத்யாதிகள் போன்ற ஹிட்லரின் சீடர்கள் பரம்பரையில் ஞானம் பெற்ற மூடர்கள் இந்துக் கடவுள்களைப் போற்றி, மாற்று மதத்தவர் பாடிய பாடல்களை என்ன செய்யப் போகிறார்கள் என்ற கேள்வி எழுகிறது. வெகுஜன நியதிகளுக்கு, கோட்பாடுகளுக்கு, மக்களின் கருத்தோட்டத்திற்கு எதிராக நின்றவர்கள் குப்பைத் தொட்டியில் வீசி எறியப் பட்டுள்ளதோடு, பதுங்கு குழிகளில் தற்கொலை செய்து கொண்டதுதான் வரலாறு. அதற்காக நாம் நகராமல் இருந்து விடலாகாது. எந்தவொரு ஜனநாயக பண்பாட்டியலையும் வெகு மக்களிடம் கொண்டு செல்லும் முயற்சிகளுக்கு நாம் ஆதரவளிப்பதோடு அச்சக்திகளுக்கு துணையாக நிற்பதை நமது ஜனநாயகக் கடமைகளில் ஒன்றாக கருதவேண்டும்.

●



# “நான் மகிழ்ச்சியான பெண்ணியவாதி”

இன்று ஆங்கிலத்தில் எழுதும் மிக முக்கியமான கறுப்பின எழுத்தாளர்களில் சிமாமாண்டா எங்கோஸி அடீச்சியும் ஒருவர். நைஜீரியாவைச் சேர்ந்த இவர், இதுவரை ஆறு புத்தகங்களை எழுதியிருக்கிறார். பெண்ணியம் குறித்த சரியான புரிதலை உண்டாக்கும் வகையில் அமைந்துள்ளது இவரது எழுத்து.

இவருக்குக் கடந்த 2018 ஜூன் 12இல் ‘பென்’ (PEN) பரிசு அறிவிக்கப்பட்டது. நோபல் பரிசு பெற்ற நாடக ஆசிரியர் ஹரால்ட் பிண்ட்டரின் நினைவாக இந்தப் பரிசு ஒவ்வோர் ஆண்டும் பிரிட்டன், காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர் ஒருவருக்கு வழங்கப்படுகிறது. இந்த உலகத்தின் மீது துணிச்சலான, தடுமாற்றம் இல்லாத பார்வையைக் கொண்டிருக்கும் எழுத்தாளர்களைக் கவுரவிக்கும் விதமாக இந்தப் பரிசு ஒன்பது ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு அக்டோபர் 9–ம் தேதி அடீச்சிக்கு இந்தப் பரிசு வழங்கப்பட உள்ளது.

பாலினம், நிறம், உலக அளவிலான சமத்துவமின்மை ஆகியவற்றின் மீது இவர் கொண்டிருக்கும் நவீன அணுகுமுறையே இந்தப் பரிசுக்காக இவர் தேர்வு செய்யப்பட்டதற்குக் காரணம் என்று தேர்வு செய்த நடுவர்கள் கூறியிருக்கிறார்கள்.

முக்கியமாக, பாலினம் குறித்து இவர் கொண்டிருக்கும் பார்வை, நாம் கவனத்தில் கொள்ளவும் பின்பற்றவும் வேண்டியது. ‘அப்படி என்னவிதமான பார்வையைக் கொண்டிருக்கிறார்?’ என்று கேட்பவர்கள், அவர் எழுதிய ‘வீ ஷுட் ஆல் பி ஃபெமினிஸ்ட்ஸ்’ எனும் புத்தகத்தை வாசித்தால் போதும்.

ஆப்பிரிக்காவை மையப்படுத்தி லண்டனில் ‘டெட்எக்ஸ் யூஸ்டன்’ எனும் அமைப்பு, 2012இல் சொற்பொழிவு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. அதில் பெண்ணியம் குறித்துப் பேசினார் சிமாமாண்டா. அந்த உரையின் சற்றே விரிவுபடுத்தப்பட்ட வடிவம்தான் இந்தப் புத்தகம். 2014இல் வெளியானது.

‘நாம் அனைவரும் ஏன் பெண்ணியவாதிகளாக இருக்க வேண்டும்?’ என்ற கேள்விதான், இந்தப் புத்தகத்தின் அடிநாதமாக ஒலிக்கிறது. ‘நாம் அனைவரும் வேறொரு உலகைக் கனவு காண வேண்டும். அந்த உலகத்தில் ஆண்களும் பெண்களும் தங்களுக்குத் தாங்களே உண்மையாக நடந்துகொள்பவர்களாக இருக்க வேண்டும். அப்படி நடந்து கொள்வதில் மகிழ வேண்டும். அப்படியொரு உலகைப் படைக்க, நம் மகள்களை வித்தியாசமாக வளர்க்க வேண்டும். மகன்களையும் வித்தியாசமாக வளர்க்க வேண்டும்’ என்று அந்தப் புத்தகத்தில் அவரே பதிலும் தருகிறார்.

யாரெல்லாம் பெண்ணியவாதி?

பெண்ணியத்தை மக்கள் எப்படியெல்லாம் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட, தன் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை இப்படி நகைச்சுவையாகச் சொல்கிறார் அடீச்சி:

“நான் ‘பெண்ணியவாதி’ என்று சொன்னபோது, ஆண் பத்திரிகையாளர் ஒருவர், ‘பெண்ணியவாதிகள் எல்லாம் கவலையுடன் இருப்பவர்கள்’ என்றார். அன்றிலிருந்து நான் ‘மகிழ்ச்சியான பெண்ணியவாதி’ என்று என்னை அழைத்துக் கொண்டேன். பிறகு, ‘பெண்ணியம் என்பது ஆப்பிரிக்கர்களுக்கு ஒத்து வராது’ என்றார்கள். அதனால் என்னை ‘மகிழ்ச்சியான ஆப்பிரிக்கப் பெண்ணியவாதி’ என்று அழைத்துக்கொண்டேன்.

பிறகு, ‘பெண்ணியவாதி என்றால் ஆண்களை வெறுப்பவர்கள்’ என்றார்கள். எனவே, நான் என்னை ‘ஆண்களை வெறுக்காத மகிழ்ச்சியான ஆப்பிரிக்கப் பெண்ணியவாதி’ என்று கருதிக்கொண்டேன்.

இப்படியே செல்லச் செல்ல ஒரு கட்டத்தில் நான் ‘ஆண்களுக்காக இல்லாமல் தனக்காக ஹை ஹீல்ஸ் அணிந்து கொள்கிற ஆனால் ஆண்களை வெறுக்காத மகிழ்ச்சியான ஆப்பிரிக்கப் பெண்ணியவாதி’ என்னும் அளவுக்கு வளர்ந்துவிட்டேன்.


ஆம். ‘பெண்ணியவாதி’ என்ற சொல் எவ்வளவு எதிர்மறையான அடையாளங்களுடன் வருகிறது? ஆண்களை வெறுப்பவராக, பிரா அணிய விரும்பாதவராக, பெண்கள் மட்டுமே எப்போதும் மேலோங்கி இருக்க வேண்டும் என்று நினைப்பவராக, மேக்அப் போட்டுக்கொள்ள விரும்பாதவராக, எப்போதும் கோபம் கொண்டவராக, நகைச்சுவை உணர்வு இல்லாதவராக, வாசனை தைலம் பயன்படுத்தாதவராக ”

ஏன் மாற வேண்டும்?

புத்தகத்தின் ஓரிடத்தில் ‘ஓட்டலுக்குச் சென்றால், ஆண்கள்தாம் பணம் கொடுக்க வேண்டும் என்ற வழக்கம் எப்படி வந்தது? அப்படிப் பணம் கொடுப்பதை ஏன் ஆண்மைக்குரிய விஷயமாகப் பார்க்க வேண்டும்? ஒரு பெண், சர்வருக்கு ‘டிப்ஸ்’ கொடுத்தால், அந்தப் பெண்ணுடன் இருக்கும் ஆணுக்கு ஏன் சர்வர் நன்றி சொல்கிறார்? அதாவது, பெண்ணிடம் பணமே இருக்கக் கூடாது. அப்படி இருந்தால், அவள் கீழ்த்தரமானவள் என்ற சிந்தனை எங்கிருந்து வந்தது? ஒரு பெண் ஏன் மற்றவர்களின் மனதுக்குப் பிடித்தவளாக நடந்துகொள்ள வேண்டும்?’ என்று பல கேள்விகளை அவர் எழுப்புகிறார்.

அந்தக் கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் விவாதம் பிறக்கும். தீர்வுகள் கிடைக்க வழி ஏற்படும். வழி கிடைத்தால் கலாச்சாரமும் மாறும். ஏன் கலாச்சாரம் மாற வேண்டும்? அடீச்சியின் சொற்களிலேயே சொல்ல வேண்டுமென்றால், ‘கலாச்சாரம் மனிதர்களை உருவாக்குவதில்லை. மனிதர்கள்தாம் கலாச்சாரங்களை உருவாக்குகிறார்கள்!’ ●

# மதயானை வருகிறது!



“அப்பா! மதம் பிடித்த யானை வருகிறதாமே! வாங்களேன் போவோம், வேடிக்கைப் பார்க்க! நான் பார்த்ததே இல்லையே, மதம்பிடித்த யானையை! வாங்க! வாங்க! சீக்கிரம் வாங்க!”

இப்படி ஒரு சிறு பிள்ளைகூடக் கூப்பிட மாட்டான்.

யானை பார்த்திராதவர்கள் பலர் இருக்கலாம். அவர்கள் யானை வந்தால் கட்டாயம் பார்த்தே தீருவார்கள். முன்பு பார்த்தவர்களேகூட மீண்டும் பார்க்கத்தான் ஆசைப்படுவார்கள்!

யானையிலேயே வெள்ளை யானை வருகிறது என்றால், நீங்களும் நானும்கூடத்தான் பார்க்க ஆசைப்படுவோம்! காரணமென்ன? யானை பூனையைப்போல நாள்தோறும் வீட்டில் பார்க்கப்படும் விலங்கல்ல. அதன் அமைப்பே ஒரு அலாதி! ஆகையால்தான் பார்க்க ஆசைப்படுகிறோம். யானையின் நிறம் சாதாரணமாகக் கறுப்பு. ஆதலால் வெள்ளை யானையென்றால் இன்னும் ஆச்சரியமல்லவா? இந்திரனிடத்தில் மட்டும் (இதுமேல் உலக விஷயம்! என்னைப் போல அடிக்கடி பார்க்கிறவர்கள் மட்டுந்தான் நம்புவார்கள்!) ஒரே ஒரு வெள்ளை யானை இருப்பதாகக் கதை! போன வருஷத்தில் பர்மா காட்டிலிருந்து ஒரு வெள்ளை யானையைப் பிடித்து வந்ததாகப் பத்திரிகையில் படித்தேன். நீங்களும் படித்திருக்கலாமே! ஒருக்கால் இந்திரனின் யானையையே தான் பர்மாவைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று கருதி வந்ததோ என்னவோ? யார் கண்டது? நாரதர் அடிக்கடி வந்து போனதாக (போவதாக அல்ல) படிக்கிறோமே! (போஸ்ட்மென் தபால் கொண்டு வருவதுபோல!) ஏன் ஐராவதம் மட்டும் ஒரு ‘விசிட்’ ஜாலியாக வந்துவிட்டுப் போகக் கூடாது?

வெள்ளையானை யென்றாலே ஆச்சரியப்படும்போது சிவப்பு யானை வந்திருக்கிறது என்றால் எத்தனைப் பேர் ஓடுவோம்? அபூர்வப் பிறவிகளைப் பார்க்க வேண்டும் என்பதில் மனிதனுக்கு ஆசையிருப்பது இயற்கை தானே!

ஆனால் ஒரு மதம் பிடித்த யானை வருகிறது என்று கேள்விப்பட்டால் என்ன செய்வீர்கள்? கதவைத் தாளிட்டுக் கொள்வார்கள், வீட்டிலுள்ளவர்கள். ஓட்டமாக ஓடி ஒளிந்து கொள்வார்கள், தெருவில் போகிறவர்கள். சுட்டுவிட முயற்சிப்பார்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளவர்கள்.

மனிதர்களிலும் கறுப்பு யானை, வெள்ளை யானை, மதயானை என்ற பல பிரிவுகள் உண்டு. யானையை மதம் பிடிக்காமல் வைத்திருப்பதுதான் கஷ்டமேயொழிய மதமேறும்படி செய்வது சர்வசாதாரணம் என்பார்கள், யானைப் பாகர்களைக் கேட்டால்! செல்வமாக வளர்க்கும் யானைக்கு மதம் பிடித்து விடுமேயானால் அதன் பாகன் அதைத் தட்டியா கொடுப்பான்? இல்லவேயில்லை. தப்பித்துக் கொள்ளத்தான் பார்ப்பான்! ஆனால் முதலில் அந்த மதயானை தனக்குத் தீனி கொடுத்து குளிப்பாட்டி வளர்த்து வந்த பாகனைத்தான் கொல்லும்! அப்படித்தான் மத மனிதனும்!

மனிதனுக்கு மதம் பிடிப்பதும் இயற்கை (யானையைப் போலவே) மதம் பிடிக்காமல் வைத்திருப்பதுதான் கஷ்டம். ஒரு குழந்தையை ‘பீடி’ குடிக்கப் பழகாமல் வளர்ப்பதுதான் கஷ்டமே தவிர, பீடி குடிக்கக் கற்றுக் கொடுப்பது கஷ்டமே அல்ல. அது அவசியமுமல்ல; தானாகவே வந்துவிடும், மற்றவர்களைப் பார்ப்பதனால்.

“தம்பீ! அவன் கிருஸ்தவன்! இவன் முஸ்லிம்! அவன் கீழ் ஜாதி! இவன் மேல் ஜாதி!” என்று சிறுபிள்ளைகளுக்கு ஊட்டுவது இருக்கிறதே, அது மிக மிகச் சுலுவானது. இதற்கு ரொம்ப புத்தி வேண்டியதில்லை. படிக்காதப் பெண்களைப் பேய் பிடித்து ஆடும்படி செய்கிறான் பூசாரி. அவன் என்ன ரொம்ப திறமைசாலியா என்ன? ‘பேயாவது பிசாசாவது, எல்லாம் பொய்’ என்கிறானே, அவன்தான் திறமைசாலியாய் இருக்க வேண்டும்.

சில பத்திரிகாசிரியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பூசாரிப் பிறவிகள். கையில் உடுக்கை இருப்பதற்குப் பதிலாக தவறிப் போய் பேனா வைத்திருக்கிறார்கள்! இவர்கள் மதப் பேயை வரவழைப்பதில் பலே கைகாரப் பேர்வழிகள்! ஜாக்கிரதை! அந்தப் பக்கம் போகாதீர்கள்! மற்றவர்களையும் போக விடாதீர்கள்!


இதோ மதயானை ஓடி வருகிறது! நாதுராம் வினாயக் கோட்ஸே வருகிறது! அதை அவிழ்த்துவிட்ட கூட்டம் கோவில் கோபுரத்தில் நின்றுகொண்டு கைகொட்டிச் சிரிக்கிறது! உஷார் உஷார்! கதவுகளை மூடுங்கள்! மதயானை சந்திலோ பொந்திலோ மறையுமேயானால் போலீசாரிடம் காட்டிக் கொடுங்கள்! அவர்களிடம் துப்பாக்கி இருக்கிறது! எப்படியாவது அதைச் சுட்டு வீழ்த்தி விடுவார்கள்! ஆனால் நீங்கள் மட்டும் ஜாக்கிரதை! அதோ வருகிறது! எதிரே வந்த 7 வயதுக் குழந்தையை (தன்னை வளர்த்த பாகனின் செல்வத்தை) மிதித்துக் கொன்றுவிட்டு ஓடி வருகிறது! உஷார்! உஷார்!!

**– குத்தூசி குருசாமி எழுதிய ‘அம்பே சிவம்’ நூலிலிருந்து**

# ஜாதி அமைப்பின் கொடூர வடிவம் கிராமங்கள்



மனுஷ புத்திரன்



***என் மதத்தைச் சார்ந்தவன் என்ற காரணத்துக்காக அவனுக் குத் தகுதியில்லாவிட்டாலும் நான் அவனை மேலே கொண்டு வருவேன் என்பதை விட பெரிய ஊழல் இந்த நாட்டில் எதுவுமே இருக்க முடியாது.***

கடந்த பல ஆண்டுகளாக தமிழகத் தினுடைய வரலாறாக தமிழகத்தினுடைய அடையாளமாக படுகொலைகளும், சாதிப் படுகொலைகளும், வன்முறைகளும் தான் ஒவ்வொரு ஊரினுடைய அடையாளமாக மாறிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

இப்படியே போனால் தமிழகத்தினுடைய வரலாறு சில ஆண்டுகளுக்குப் பிறகு ஜாதிப் படுகொலைகளுடைய வரலாறாக இருக்கப் போகிறது என்ற அச்சம் எழுகிறது. முக்கியமாக இந்துத்துவாவை வேரறுக்க வேண்டும். பிராமணியத்தை வேரறுக்க வேண்டும் என்று நண்பர்கள் சொன்னார்கள். நானும் அந்த கருத்துக்களை தீவிரமாக முன் வைக்கக்க கூடியவன் தான். ஆனால் இந்துத்துவா என்பது இந்துத்துவா என்கின்ற இந்த சமூகத்தில் இல்லை . அது பல்வேறு வடிவங்களில் பல்வேறு முகமூடிகளில் இருக்கிறது. அதேபோல் பார்ப்பனியம் என்பது பெயரில் இல்லை அது பல்வேறு வடிவங்களில் பல்வேறு முகமூடிகளில் இருக்கிறது. அது திடீரென ஊழல் எதிர்ப்பு என்ற போர்வையை போர்த்திக் கொண்டு வரும். மக்கள் நீதி என்ற போர்வையை போட்டு கொண்டும் வரும். அல்லது வேறுஏதாவது சமூகக் காரணத்தை கொண்டு வரும். ஏனென்று கேட்டால் சாதி தான் இந்த சமூகத்தினுடைய உண்மையான அதிகாரமாக இருக்கிறது. சாதியின் மூலமாகத் தான் இந்த சமூகத்தினுடைய பெரும்பாலான அனைத்து கட்டுமானங்களும் உருவாக்கப்பட் டிருக்கின்றன. ஆகவே சாதியைப் பற்றிப் பேசும்போது கூட சாதியை ஒழிப்போம் என்று பேசுவார்களே தவிர, சாதி எப்படி அணி சேர்க்கிறது என்று பேச மாட்டார்கள். ஜாதிய உறவுகள் நம் சமூகத்தில் எப்படி நிலவுகிறது என்று பேசமாட்டார்கள். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது, ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு கிராமமும் அது ஜாதிய அதிகாரத்தினுடைய மையமாக இருக்கிறது.இந்த நாட்டில் தனியாக நீதிமன்றம்,சட்டம், அரசியல் சாசனமிருக்கலாம். ஆனால் ஒவ்வொரு ஊருக்கென்று ஜாதி ரீதியான அரசியல் சாசனமிருக்கிறது. ஜாதி ரீதியான அரசாங்கமிருக்கிறது . ஜாதி ரீதியான ஒரு போலீஸ் இருக்கிறது. இவர்கள் தான் அந்த ஊரினுடைய அனைத்து அதிகாரத்தையும் கையில் வைத்திருக்கிறார்கள். அப்படி பார்க்கிற போது ஒரு ஜாதி கிராமம் என்பது ஒரு விதத்தில்

ஒரு தனி நாடாக இருக்கிறது. நாம் இந்த உண்மையை ஒத்துக் கொண்டு தான் ஆக வேண்டும். அது தான் ஒரு அரசாங்கமாக இருந்து கொண்டிருக்கிறது.

அரசாங்கத்தை நாம் எப்படி உடைக்கப் போகிறோம் என்பது மிக முக்கியமான ஒரு கேள்வி. ஒரு சாதியப் படுகொலையை கண்டிப் பதற்காக இல்லை இந்த கூட்டம். மாறாக இந்த ஒட்டு மொத்த அமைப்பைப் பற்றியும் விழிப் புணர்வு எவ்வளவு தூரம் ஆழமாக இருக்கப் போகிறது என்பதற்கான கூட்டமாக இதை நினைக்கிறேன். சாதிய அமைப்பைப் புரிந்து கொள்வதற்கும் அதை எதிர்ப்பதற்கும் உண்மை யான ஒரு விரிந்த செயல்திட்டமென்பது யாரிட மிருக்கிறது என்ற கேள்வியை நாம் கேட்டுக் கொள்கிற போது நம்மை விட பல நேரங்களில், சாதிய படுகொலையை செய்யக் கூடியவர்கள் நுட்பமான செயல்திட்டத்துடன் செயல்படு கிறார்கள் விரிவான திட்டத்தோடு செயல்படு கிறார்கள் எப்படி ஒவ்வொரு விசயத்தையும் திசை திரும்புவது என்று அவர்களுக்கு தெரியும்.

முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால், இந்த நாட்டில் பல விதமான குற்றங்கள் நடக்கின்றன. உதாரணமாக இரயில் நிலையத்தில் ஒரு பெண்ணை வெட்டிக் கொலை செய்துவிடுகிறார்கள். அது மிக கொடூரமான செயல் அல்லது பெண்ணின் முகத்தில் ஆசிட் அடிக்கிறார்கள். அதெல்லாம் ஒட்டுமொத்த சமூகத்திலும் பதட்டத்தை உருவாக்குகிறது. எல்லோரும் அதற்காக கவலைப்படுகிறோம். ஒரு பாதுகாப்பின்மையை உணர்கிறோம். ஆனால், தமிழ்நாட்டில் எந்த சாதியப் படுகொலை நடந்தாலும் தமது சமூகத்தினுடைய மன சாட்சியை உலுக்குவதேயில்லை. அந்த புகைப் படங்கள் யாருக்கும் பதட்டத்தை உருவாக்குவ தில்லை. அது மிகவும் மவுனமாக கடந்து செல்லப்படுகிறது. இளவரசனின் புகைப்படம் கூட எந்த பதட்டத்தையும் பெரும்பாலோருக்கு ஏற்படுத்தவில்லை. இந்த மனோபாவம் தான் கொலை செய்கிறவனின் மனோபாவத்தை விட ஆபத்தானது என்று நினைக்கிறேன் ஏனென்றால், நம் ஒட்டுமொத்த மனோ பாவமும் இந்த படுகொலைக்கு உடந்தையாக இருக்கிறது என்கிற மிகப் பெரிய அச்சத்தை ஏற்படுத்துகிறது. எப்போது இது போன்ற சாதி, மத வன்முறைக்கோ ஒரு சாதாரண மனிதன், பொது

**ஒரு ஜாதி கிராமம் என்பது ஒரு விதத்தில் ஒரு தனி நாடாக இருக்கிறது. நாம் இந்த உண்மையை ஒத்துக்கொண்டு தான் ஆக வேண்டும். அது தான் ஒரு அரசாங்கமாக இருந்து கொண்டிருக்கிறது.**

மனிதர்கள், பிற சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்று நினைக்கக் கூடியவர்கள் மவுனமாக கடந்து செல்கிறவர்கள் என்றால் அங்கு பாசிச சமூகம் உருவாவதற்கான ஒரு அடித்தளம் உருவாகிறது. ஒவ்வொரு குற்றத்தின் மீதும் இந்தச் சமூகம் எப்படி எதிர்வினையாற்று கிறது என்பதை நாம் கவனிப்பது என்பது நம்முடைய சமூகம் எப்படி உருமாறி கொண் டிருப்பதை கவனிப்பதாகும். இவ்வளவு பெரிய கொலை நடக்கிறது; இயல்பாக வரவேண்டிய பதட்டம் பெரும்பாலானோருக்கு வருவதில்லை அவர்கள் அந்தக் கொலையை நியாயப்படுத்தக் கூடிய ஒரு உளவியல் அவர்களுக்குள் வேலை செய்து கொண்டிருக்கிறது. இதை நான் என்னுடைய பல வருட அனுபவங்களில் நான் அதிர்ச்சி அடைந்த பல விசயங்கள் இருக்கின்றன.

யாரையெல்லாம் நான் சிந்தனையாளன் என்று நினைத்துக் கொண்டிருந்தேனோ, சமூக மாற்றத்திற்காக வேலை செய்து கொண்டிருந்த பலர் அவர்களுக்குள் உறைந்து போயிருந்த சாதிய உணர்வு என்பது அவர்களை நெருங்கிச் சென்று தொடுகிறபோது என்னை அதிரச் செய்திருக்கிறது. எவன் ஒருவன் சுயசாதி மறுப்பாளனாக இல்லையோ, எவன் ஒருவன் சுயமத மறுப்பாளனாக இல்லையோ அவன் பேசுகிற அனைத்து அறங்களும், அறிவியலும் போலித்தனமானது என்று நம்புகிறேன். அந்த சுயசாதி மறுப்பை இங்கு செய்யாமல் நீங்கள் பொதுவாக தலித்துகளை சமமாக நடத்த வேண்டும், தாழ்த்தப்பட்டவனை மனிதாபி மானமாக நடத்த வேண்டும் என்று சொன்னால், அவன் பொய் சொல்லுகிறான் என்று அர்த்தம். அவன் ஏமாற்றுகிறான் என்று அர்த்தம். நீங்க யாரையும் மனிதாபிமானமாக நடத்த வேண்டியதில்லை. நீங்கள் யார் சமத்துவமாக நடத்துவதற்கு, நீங்கள் மனிதர்களாக நடந்து கொள்கிறீர்களா என்பது தான் தான் முக்கியமானது. நீங்கள் விழிப்புணர்ச்சி பெற்ற மனிதர்களாக நடந்து கொள்கிறீர்களா என்பது தான் முக்கியமானது.

**எவன் ஒருவன் சுயசாதி மறுப்பாளனாக இல்லையோ, எவன் ஒருவன் சுயமத மறுப்பாளனாக இல்லையோ அவன் பேசுகிற அனைத்து அறங்களும், அறிவியலும் போலித்தனமானது.**

எனக்கென்று சாதி, மத உணர்வு இருக்கிறது என்று சொன்னால் அது எனக்கென்று ஒரு அவமானத்தை ஏற்படுத்த வேண்டாமா? அது என்னைப் பற்றி எனக்குக் கீழ்மையான ஒரு எண்ணத்தை ஏற்படுத்த வேண்டாமா? பலருக்கு ஏற்படுத்தவில்லை. நாம் ஒரு விசயத்தை எடுத்துப் பார்த்தால் பொதுவாக சாதிக் கொடுமைகளைப் பற்றி யார் எழுது கிறார்கள். எந்த சாதி கொடுமையினால் பாதிக்கப்பட்ட அல்லது அதுபோன்ற அரசியல் இயக்கங்களினால் விழிப்புணர்வு பெற்ற தலித் எழுத்தாளர்கள் என்று முத்திரை குத்தப்பட்ட குறிப்பிட்ட சில எழுத்தாளர்களே, கலைஞர்களே தான் இதைப் பற்றி எழுது கிறார்கள். சமூக வரலாறு என்று எழுது கிறவர்களே தங்களுடைய பாரம்பரிய பெருமையை எழுதுகிறார்கள்.

அது என்ன சாதிக் கொடுமையை எழுது வதற்கு மட்டும் தனிப்பட்ட எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் இருக்க வேண்டும். ஏன் மற்றவர்களுடைய பிரச்சனை இல்லையா இது? இன்னும் சொல்லப் போனால் சாதி சமூகத் தினுடைய இழிவுகள் தலித்துகளை மட்டுமல்ல எல்லா மனிதர்களையுமே விடுதலையற்ற மனிதர்களாக வைத்திருக்கிறது. அதைத் தான் அண்ணல் அம்பேத்கர், பெரியார் திரும்ப திரும்பப் பேசினார்கள். இடைநிலைச் சாதிக் காரனாகவோ, உயர்நிலைச் சாதிக்காரனாகவோ இருப்பதினால் நீ மனிதனாக இருக்கக் கூடிய பல சுதந்திரங்கள் உனக்கு இல்லாமல் தான் போகும். சாதி உன்னையும் தன் இழிவில் ஒடுக்கிக் கொண்டிருக்கிறது. உங்களுடைய பெண்களை ஒடுக்குகிறது. உங்களுடைய அடிப்படையான சிந்தனையை ஒடுக்குகிறது. நீங்கள் குறிப்பிட்ட சாதியினரை மட்டும் ஒடுக்கவில்லை. தன்னைத் தானே ஒடுக்குகிறவன் எவனோ அவன் தான் சாதி வெறியனாக இருக்கிறான்.

அவர்கள் தன்னுடைய விடுதலையையும், மற்றவர்களுடைய விடுதலையையும் மறுக் கிறார்கள். நம்முடைய கலைஞர்கள், எழுத்தாளர்கள், திரைப்படக் கலைஞர்கள் திரைப்படத்தில் எடுக்கப்படுகிற சாதிய வன்முறைகளைப் பற்றியெல்லாம் இங்கு பேசினார்கள். இதையெல்லாம் மிக எளிதாக சினிமா வர்த்தகத்திற்காக செய்கிறார்கள் என்று புரிந்து விடக் கூடாது. சினிமாவில் முதலீடு செய்பவர்கள் யார்? அங்கு பணத்திற்கு, குறிப்பிட்ட சாதியினுடைய அதிகாரமிருக்கிறது. அவர்கள் சாதிகளை உயர்த்துவதற்கான ஒரு காலத்தை இங்கே உருவாக்குகிறார்கள். அதே போல், இலக்கிய அமைப்புகள், கலை இயக்கங்கள் என்று எடுத்து கொண்டால் சாதிரீதியான ஏராளமான கொடுக்கல், வாங்கல் இருக்கின்றன. நம் நாட்டில் இலஞ்சம், ஊழல் என்று பேசுவார்கள். இந்த நாட்டில் இருக்கக் கூடிய மிகப் பெரிய ஊழல் சாதி தான். இந்த ஊழலுக்கு நிகராக எதுவுமே இல்லை. என் சாதிக்காரன் என்பதால் ஒருவரை ஆதரிப்பேன், உதவிகள் செய்வேன். என் மதத்தைச் சார்ந்தவன் காரணத்துக்காக அவனுக்குத் தகுதியில்லா விட்டாலும் நான் அவனை மேலே கொண்டு வருவேன் என்பதை விட பெரிய ஊழல் இந்த நாட்டில் எதுவுமே இருக்க முடியாது. இந்த நாட்டில் ஊழலைப் பேசுகிற, பேச விரும்புகிற ஒரு முதன்மையான ஊழல் சாதி தான். இவ்வளவு சாதிக் கொடுமைகள் நடக்கிறது. காவல்துறை என்ன செய்கிறார்கள், ஏன் செயல்படவில்லை யென்றால் சாதி என்பது நிலத்தோடு சம்பந்தப் பட்டது. அது மூலதனத்தோடு சம்பந்தப்பட்டது. அது காவல்துறையோடு சம்பந்தப்பட்டுத் தான் இருக்கும். நீதித்துறையோடு சம்பந்தப்பட்டுத் தான் இருக்கும்.

நிலமும், மூலதனமும் தொடர்பில்லாத அமைப்போ, நீதித்துறை அமைப்போ, அராசங்க அமைப்போ செயல்பட முடியுமா? பணம், நிலம் தான் அதற்கு பின்னால் நிற்கக் கூடிய மிகப் பெரிய அதிகாரம். நிலம் வைத்திருக்கக் கூடிய அல்லது மூலதனம் வைத்திருக்கக் கூடிய ஒரு சாதியினுடைய அதிகாரத்தை நிலமற்ற அதிகாரமற்ற ஒரு சாதியினாரல் எதிர்கொள்ள முடியாது. இது தான் யதார்த்தம். அவர்கள் எந்த நீதி அமைப்பையும் விலைக்கு வாங்க முடியும். காவல்துறையில் இருக்கக் கூடிய உயர்சாதி செல்வாக்கு, இடைநிலை சாதியினுடைய செல்வாக்கு பற்றி நாம் வெளிப்படையாக புள்ளி விவரங்களோடு பேச வேண்டும். எந்த காலத்தில் இதையெல்லாம் அதிகம் கொண்டு வந்தார்கள்.

அதற்குப் பிறகு தமிழ்நாட்டில் நடந்த சாதி கலவரத்துக்கும், தமிழ்நாடு காவல்துறையும் சில குறிப்பிட்ட சாதிகள் அதிகமாக உள்ளே வந்ததற்கு உள்ள தொடர்புகளையெல்லாம் விரிவாகப் பேச வேண்டும். ஏராளமான, நுட்பமான விசயங்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டிருக்கின்றன. சாதி ஒழிய வேண்டும் என்பது சுலபமான ஒரு வார்த்தை. ஆனால் அவ்வளவு எளிதான ஒன்றல்ல. ஏனென்றால், சாதிதான் குடும்பமாக, அறமாக, நீதியாக, வாழ்க்கைப் பண்பாடாக இருக்கிறது. சாதியை முதலில் சனநாயகப்படுத்த முடியுமா என்று தான் நாம் யோசிக்கிறோம். சனநாயக முறையாக நடந்து கொள் என்று கேட்கும் இடத்தில் தான் இருக்கிறோம். சாதியை எப்படி ஒழிப்பது எங்கிருந்து ஒழிப்பது அதற்காக எத்தனை நூற்றாண்டுப் போராட்டம் தேவைப்படும் என்று தெரியவில்லை.

பெயருக்குப் பின்னால் சாதிப் பெயரை போட்டுக் கொள்ளக் கூடிய பழக்கம் என்பது பல மாநிலங்களில் பரவலாக இருக்கிறது. மிகப் பெரிய முற்போக்குத் தலைவர்கள் கூட சாதிப் பெயரைத் தன் பெயருக்குப் பின்னால் போட்டுக் கொள்வார்கள். ஆனால், நாம் தொடர்ச்சியாக நடத்திய சாதி ஒழிப்பு இயக்கங்கள் வழியாக அது போன்ற சில விசயங்களை நாம் கடந்து வந்திருக்கிறோம். ஆனால், கடக்க முடியாத ஏராளமான பிரச்சனைகள் இருக்கின்றன. ஒரு சாதிப் பெயரோடு கடையிருப்பது மட்டும் பிரச்சனையல்ல. அந்த கடையில் வேலை செய்பவர்கள் எல்லாம் குறிப்பிட்ட சாதி சார்ந்தவர்களாகத் தான் இருப்பார்கள். அவர்களுக்குத் தான் அந்தப் பணியைக் கொடுப்பார்கள். அவர்கள் அங்கே ஒரு யூனியனை உருவாக்குவார்கள். இப்படி எந்த சாதி பெயரில் எந்த கடையிருக்கிறதோ, அந்த சாதிக்காரர்களை தமிழ்நாடு முழுவதிலுமிருந்து வரவழைத்து அவர்களுக்கு அந்த வாழ்வாதாரத்தை உருவாக்குவார்கள்.

ஒருமுறை சமூகவியல் அறிஞர் காஞ்சா அய்லையா முக்கிய கட்டுரை எழுதி யிருந்தார். அதில் வால்மார்ட் போன்ற நிறுவனங்கள் இங்கு உள்ளே வருகிறபோது, கடும் எதிர்ப்பு நிலவும் போது அதையொட்டி எழுதியிருக்கிறார். நிச்சயமாக அவர்கள் இங்கிருக்கக் கூடிய சிறு வணிகத்தை பாதிக்கிறார்கள். இங்கு இருக்கக் கூடிய சிறிய வர்த்தகத்தை பாதிக்கிறார்கள் எல்லாம் உண்மை தான். ஆனால், இச் சிறு வர்த்தகம், சிறு வணிகம் என்பது சனநாயக பூர்வமாக செயல்படுகிறதா? என்ற கேள்வியை எழுப்புகிறார். அங்கு தலித்துகள் கடைநிலை வர்த்தகத்திற்கு மட்டும் தான் பயன்படுத்தப் படுகிறார்கள். அவர்கள் அதைத் தாண்டி எந்தப் பொறுப்புகளும் கொடுப்பதில்லை. ஆனால் பெரிய நிறுவனம் வருகிற போது அதை சாதி சார்ந்து எந்த விசயமும் பார்க்கப்படுவதில்லை. யூனிபார்ம் கொடுத்துவிட்டால் அங்கு எல்லோரும் ஒரே மாதிரி. இந்த கருத்து என்னை சிந்திக்க வைத்தது. நானும் வால்மார்ட் நிறுவனங்களுக்கு எதிரானவன் தான். ஒரு காலத்தில் இங்கு சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் செயல்பட்டிருக்கும்போது இங்கு நவீனமய மாக்கல் நடந்தது. இங்குப் பேருந்து, இரயில், திரைப்பட அரங்குகள் வந்தபோது அதுவரை சாதியக் குறியீடுகளை கட்டிக் காத்தவர்கள் அதை விட்டுவிட்டு எல்லோருடனும் வந்து உட்கார வேண்டிய நிலை வந்தது. இதை சகித்துக் கொள்ள முடியாமல் தான் இவன் என்னை மாதிரியே எனக்கு சமமாக இருக்கிறான், எனக்கு சமமாக நடந்து வருகிறான். இவை எல்லாம் உயர் சாதியினரை, இடைநிலை சாதியினரை ஆத்திர மடைய வைக்கிறது. இது தான் எங்கேயாவது ஒரு படுகொலையாக மாறுகிறது. நம்முடைய கிராமங்களை துரிதப்படுத்துவது, கடந்த காலத்தை துரிதப்படுத்துவது, நம்முடைய கிராமங்கள் எல்லாம் எளிமையுடைய வடிவமாக இருப்பதாக ஒரு தோற்றத்தை உருவாக்குவது இதுபோன்ற போலித்தனங்களைவிட வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், சாதி அமைப் பினுடைய கொடூர வடிவங்கள் நம்முடைய கிராமங்கள் தான் என்று நினைக் கிறேன். கிராமத்திலிருந்து தப்பி ஓடி வந்தவரில் நானும் ஒருவன். சாதிரீதியாக, மதரீதியாக ஏராளமான இளைஞர்கள் ஏன் நகரங்களை நோக்கி ஓடி வரு கிறார்கள் என்றால், அது வெறும் பிழைப்புக்காக மட்டுமல்ல, சுய மரியாதையையும், சாதிய கொடுமையிலிருந்து விடுபடுவதற்காகவும் தான் அவர்கள் வருகிறார்கள்.

(சிவகங்கை மாவட்டம் கச்சநத்தம் ஜாதிவெறிப் படுகொலையைக் கண்டித்து, தமிழ்நாடு கலை இலக்கிய ஊடக செயற் பாட்டாளர்கள் - சென்னையில் 2018, ஜூன் 3 அன்று நடத்திய கருத்தரங்கம் நிகழ்த்திய உரைச் சுருக்கம். தொகுப்பு : மா. தேன்ராஜ்)

# அய்.நா. ஆய்வே அம்பலப்படுத்துகிறது: உலகமயமாக்கலின் படுதோல்வி

- முனைவர் ஜெ.ஜெயரஞ்சன்

***உலகமயமாக்கள் – தனியார் மயமாக்கல் – தாராளமயமாக்கல் கொள்கை – ஏற்றத் தாழ்வுகளை ஆதரித்து பெரும் நிறுவனங்களின் சுரண்டல்களை அதிகரித்திருக்கிறது என்ற உண்மையை அய்.நா.வின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பே அம்பலப்படுத்தியிருக்கிறது.***

உலக மயமாக்கல், தனியார் மயமாக்கல், தாராள மயமாக்கல் (LIBERALISATION PRIVALISATION, GLOBALISATION) இவை மூன்றும்தான் உலகப் பொருளாதாரத்தை புதிய வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும், வளர்ச்சி அதிகரிக்கும், செல்வம் பெருகும், மக்களின் வாழ்வு சிறக்கும் என்ற தாரக மந்திரம், 1980களிலிருந்து ஒலிக்கத்துவங்கி 1990களில் வலுப்பெற்றது. இக்கருத்தாக்கத்தின் அரசியல் வலிமை என்பது அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளின் ஆதரவினால் கூடுதலானது. உலக வங்கியும், பன்னாட்டு நிதியமும் இதனை அனைத்து நாடுகளுக்குமான சர்வ ரோக நிவாரணியாக பரிந்துரைக்கத் துவங்கின. பரிந்துரைத்தன என்பதைவிட அவைகளின் கட்டளைகளாவே இவை மாறின. இதன்விளைவாக வளர்ந்த நாடுகள் மட்டுமின்றி பல வளரும் நாடுகளும் இக்கொள்கைகளை ஏற்று செயல்படுத்த வேண்டிய கட்டாய நிலை எற்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, உலகளவில் தடையற்ற வர்த்தகம் தழைக்கும் வகையில் பொதுவான சட்டதிட்டங்களை உருவாக்கி செயல்படுத்துமுகமாக உலக வர்த்தக அமைப்பு (WTO) தோற்றுவிக்கப்பட்டது. நாடுகள் பலவும் கடந்த முப்பது ஆண்டுகளாக இப்பாதையில் பயணித்து வருகின்றன. இப்பாதை உலகத்தை எங்கு கொண்டு சேர்த்துள்ளது? என்பதை தற்போது வெளிவந்துள்ள ஓர் அறிக்கை படம்பிடிக்கிறது.ஐக்கிய நாட்டு வர்த்தகம் மற்றும் வளர்ச்சி அமைப்பு (UNITED NATIONS CONFERENCE ON TRADE AND DEVELOPMENT - UNCTAD) வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான இந்த ஆண்டு அறிக்கையை (TRADE AND DEVELOPMENT REPORT) வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை உலக மயமாக்கல், தடையற்ற வர்த்தகம் ஆகியவற்றால் தேனாறும் பாலாறும் ஓடும் என்ற மாயத்தை சுக்குநூறாக உடைத்தெறிகிறது.

வர்த்தகம்தான் மூன்றாம் உலக நாடுகளை முன்னேற்றும் என்பதும் அதன் வாயிலாக உலக மயமாக்கல்தான் வறுமையில் உழலும் மக்கள் உய்வு பெறுவர் என்பதும் ஒரு மாயை என நிறுவுகிறது இந்த அறிக்கை. உலக மயமாக்கலின் பொற்காலமாகக் கருதப்படும் கடந்த 40 ஆண்டுகளை இந்த அறிக்கை ஒரு மோசமான காலமாக சித்தரிக்கிறது. என்ன நடந்து இக்காலத்தில்?

இந்த அறிக்கையின்படி, இந்த நாற்ப தாண்டுகளில் நிதித்துறை பித்தலாட்டங்கள் தலைவிரித்து ஆடின. பெருநிறுவனங்கள் கட்டற்ற அதிகாரம் பெற்றன. அரசுகளின் பொருளாதார சிக்கனம் தலைதூக்கியது. அனைத்துமட்ட மக்களும் உலகமயமாக்கலினாலும் தடையற்ற வர்த்தகத்தினாலும் பயனுறுவர் என்பது தவறான பசப்புரையே. முதல் உலகப் போருக்கு முன் உலகில் பல வியத்தகு தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஏற்பட்டன. உலகம், தந்திக் கம்பங்களால் இணைக்கப்பட்டது. தண்டவாளங்களும் நீராவிக் கப்பல்களும் உலகப் பரப்பை இணைத்தன. இதே சமயத்தில்தான் கட்டற்ற முற்றுரிமைகள் தழைத்தோங்கின. நிதிச் சூது விளையாட்டு பல்கிப் பெருகியது. இவை அனைத்தின் விளைவாக மக்களிடையே சமமற்ற நிலை உச்சம் பெற்றது. நாடுகளின் பொருளா

தாரங்களில் செழுமையும் தேக்கமும் அடிக்கடி நிகழ்ந்தன.

சுதந்திர வர்த்தகத்தை ஆதரிப்போர் மதவெறி கொண்டவர்கள் போல் நடக்கிறார்கள். அவர்களுக்கு சமுதாயத்தின் பரந்துபட்ட நலனில் அக்கறை இல்லை. மாறாக, முதலாளியத்தின் நலனையும் மூலதனத்தின் நலனையும் முன்னிறுத்துகின்றனர். இதனை வெளிக்காட்டாமல் சமுதாய நலனைப் பேணுவது போன்று சான்றுகளையும், தத்துவங் களையும் உருவாக்குவதெல்லாம் முதலாளி களின் நலன்களை பேணுவதற்கு மட்டுமே. தற்போது உலகில் நாடுகளுக்கிடையே நடைபெறும் வர்த்தகப் போர்கள் அனைத்தும் சமமற்ற உலக மயமாக்கலின் வெளிப்பாடே.

உச்சம்பெற்ற உலக மயமாக்கல் எவ்வாறு செயல்படுகிறது? அது செயல்பட ஆதாரமாக இருப்பது லாபமும், நிலையில்லாத முதலீடும் ஆகும். இவையிரண்டையும் ஆள்பவை பெரு நிறுவனங்கள், இப்பெரு நிறுவனங்கள் தங்கள் சந்தை ஆதிக்கத்தைக் கூடுதலாக்கி வருகின்றன. மேலும் இவை கட்டற்று செயல்பட ஏதுவாகத் திகழ்வது நாடுகளுக்கிடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் ஆகும். இத்தகைய ஒப்பந்தங்கள் ஏற்பட வேண்டி இப்பெரு நிறுவனங்கள் நாடுகளின் அரசுகளை வலியுறுத்துவதும், அழுத்தம் கொடுப்பதும் வாடிக்கையாகி வருகிறது. இத்தகைய ஒப்பந்தங்கள் அந்ததந்த நாடுகளின் பொது வெளியில் வைக்கப்பட்டு விவாதிக்கப்படுவதே இல்லை. இவ்வாறு உருவாகும் அமைப்பு ஒரு தனி உலகம். அந்த உலகத்தில் பணமும் அதிகாரமும் பின்னிப்பிணைந்து செயல்படு கின்றன. இதனால் பணம் மற்றும் முதல் ஆகியவை கட்டுப்பாட்டு அமைப்புகளின் கழுகுப் பார்வையிலிருந்து தப்புகின்றன. கட்டுப்பாட்டு அமைப்புகளும் மிக அரிதாகவே இம்முதலின் செயல்பாட்டில் தலையிடுகின்றன.

UNCTAD அறிக்கையின்படி, உலகப் பொருளாதாரம் மேற்கூறியவாறுதான் இயங்கு கிறதே தவிர, பொருளாதாரப் பாடப்புத்தகங் களில் காணப்படுவது போல் பொருளாதாரம் இயங்குவதில்லை. புத்தகத்தில் படிப்பதெல்லாம் ஒரு மகிழ்ச்சியளிக்கும் கற்பனைக் கதையாக விளங்குகிறது. உலகமயமாக்கலினால் சீனா பெரும் பயன்பெறவில்லையா? சீனாவைப் போன்று பல நாடுகளும் பயன் பெறவில்லையா? சீனாவும், சில கிழக்கு ஆசிய நாடுகளும் பயன் பெற்றுள்ளது உண்மைதான். ஆனால், அவை விதிவிலக்குகள். இந்நாடுகளின் வெற்றி மகிழ்ச்சிக்குரியவையே. ஆனால், உலகமயமாக்க லினால் பெரும்பாலான நாடுகள் துயரைச் சந்தித்துள்ளன. மேலும், சீனத்தின் வெற்றியை உலகமயமாக்கலினால் மட்டுமே நிகழ்ந்தது என சுருக்கிவிட முடியாது. தேர்ந்தெடுத்த சில தொழில்துறைகளை நவீனப்படுத்தியது சீனா. மதிப்பு குறைந்த பொருள்களை உற்பத்தி செய்யத் துவங்கி விரைவில் மதிப்பு கூடிய பொருள்களை உற்பத்தி செய்யும் வல்லமையை அது வளர்த்துக் கொண்டது. உற்பத்தி செலவு குறைவாக இருந்ததை நன்கு பயன்படுத்திக் கொண்டு வளர்ந்தது. அதனுடைய மிகப் பெரிய உள்நாட்டு சந்தையும் குறைந்த உற்பத்திச் செலவையும் கணக்கில் கொண்டு வெளிநாட்டு நிறுவனங்கள் அந்நாட்டில் தொழில் தொடங்க வந்தபோது அந்நிறுவனங்களின் தொழில்நுட்பங்களை எளிதாகவும் இலகுவாகவும் சீனா பெற்றுக் கொண்டது. மேலை நாடுகளின் பன்னாட்டு நிறுவனங்களை ஒத்த பெரு நிறுவனங்களை முனைப்புடன் வளர்த்தெடுக்க சீனா தயங்க வில்லை. இதில் என்ன வேடிக்கையென்றால், மேலை நாடுகள் தாங்கள் வளரும்போது என்ன தந்திரங்களைக் கையாண்டனவோ அதே தந்திரங்களைத்தான் சீனம் தற்போது கையாள்கிறது. ஆனால், சீனம் இவற்றை கைக்கொள்ளும் போது மேலை நாடுகள் எரிச்சலடைகின்றன, கூக்குரலிடுகின்றன.

நாடுகள் முன்னேற அவை உலகம் தழுவிய உற்பத்திச் சங்கிலியில் (தொடர் இணைப்பு களில்) இடம்பெறுவது அவசியம். ஆனால், இந்த உற்பத்திச் சங்கிலிகளின் தன்மை எத்தகையதாக உள்ளது இப்போது? அய்.நா.வின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சி அமைப்பின்அறிக்கை கூறுவது யாதெனில், இந்த சங்கிலிகளின் பலனை வலுவான சில பெரு நிறுவனங்களே பெறு கின்றன என்பதாகும். இச்சங்கிலியில் பெரு இலாபம் ஈட்டும் கண்ணிகள் அந்நிறுவனங் களின் வசம் உள்ளன. மதிப்பு கூட்டும் கண்ணிகளை, ஆக்கிரமித்துள்ளன. இது

மட்டுமல்லாது அவை உரிமை கொண்டாடும் அறிவுசார் சொத்துரிமையை அதீத இலாபத்திற் குத்தான் அளிக்கின்றன. இப்பொருள்களை உற்பத்தி செய்யும் வளரும் நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் பெறும் இலாபம் சொற்பமே. பன்னாட்டு நிறுவனங்கள் பெரிய அளவிலான இலாபத்தை தொடர்ந்து குவித்து வருகின்றன. இதன் விளைவாக உலகளவில் செல்வப் பகிர்வு பெரும் ஏற்றத் தாழ்வை சந்திப்பதால் சமமின்மை அதிவேகமாக வளர்ந்து வருகிறது. உற்பத்தி சங்கிலியை ஆளும் நிறுவனங்களின் இலாபப் பங்கு தொடர்ந்து அதிகரித்து வரும் அதே வேளை யில் உற்பத்தியில் ஈடுபடும் கண்ணிகளின் இலாபப் பங்கு குறைவாகவும், குறைந்தும் வருகின்றன.

இச்சூழலை மாற்றியமைக்க வளரும் நாடுகள் ஒன்றிணைந்து முயற்சிக்க வேண்டும் என அய்.நா.வின் UNCTAD அறிக்கை அறிவுறுத்துகிறது. உலகமயமாக்கலின் நெகிழ்வுத் தன்மை, உற்பத்தித் திறன், போட்டிச் சந்தை குறித்தெல்லாம் அதன் ஆதரவாளர்கள் பெருமை பேசி வருவது வெறும் வார்த்தை ஜாலம் மட்டுமே. உண்மையில் உலக மயமாக்கலினால் நாடுகள் வலுவிழந்து மந்தமாகவும், பிளவு பட்டும் நிற்கின்றன. ஒருபுறம் ஏற்றத்தாழ்வு பல்கிப் பெருகுகிறது. மறுபுறம் கடன்சுமை அதிகரிக்கிறது. நிதி மோசடிகள் மீண்டும் தலைவிரித்து ஆடுகின்றன. பொருளாதார அமைப்புகளின் மீதான நம்பகத்தன்மை குன்றி வருகின்றன. இதைவிட சீரழிவுப் பயணத்திற்கு வேறு என்ன வேண்டும்? என வெதும்பி நிற்கிறது அந்த அறிக்கை.

இந்தியத் திருநாடும் இப்போக்கிற்கு விதிவிலக்கல்ல, தாராளமயக் கொள்கை, உலகமயமாக்கல் என்ற மாயத்தில் மீண்டும் மீண்டும் நிதி மோசடிகளை அனுமதிக்கின்றன இந்தியாவின் கொள்கைகள். ஒரு மோசடியி லிருந்து நாம் பாடம் கற்பதில்லை. மாறாக, நிதி மோசடிகளை என்ன ஏது என்று தெரியாமலயே கொண்டாடியும் பேசியும் வரும் நமது ஊடகங்களும், அறிவாளிகளும் யாருக்காக செயல்படுகிறார்கள்? இவை குறித்த கேள்விகளை எழுப்பினால், நீர்த்துபோன தத்துவங்களை கொண்டவர்கள் நீங்கள் என நம்மைச் சுட்டும் "அறிவுஜீவிகள்" நிறைந்த நாடு நம் நாடு. இதைவிட அபாயம் என்பது இதனையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டிய அரசு இந்த இயக்கத்தின் ஒரு அடிமையாகவும், பயனாளியாகவும், பாதுகாவலனாகவும் மாறிப்போனதுதான். இதற்குத் தீர்வு மக்கள் பெறும் விழிப்பில்தான் இருக்கிறது; அதற்கு பிறகாவது பாடம் பெறுவார்களா?


(மின்னம்பலம்)

# இரட்டை வேடம்



"சபரிமலை பற்றிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பை இயற்கை யாகவே ஏற்றுக் கொள்ள முடியாது; கோடிக் கணக்கான பக்தர்களின் உணர்வை நீதிமன்றம் தனது தீர்ப்பில் கவனத்தில் கொள்ளவில்லை; பாரம்பரியத்தை கடைபிடிக்கும் ஏராளமான பெண்களின் கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை; இந்து சமுதாயத்தின் மீது மட்டும் ஏன் இதுபோன்ற தாக்குதல்கள் நடத்தப்படுகிறது என்று தெரியவில்லை; உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு நாட்டில் அமைதி யின்மையை ஏற்படுத்தி உள்ளது; சமுதாயத் தில் பிரிவினையை ஏற்படுத்தி இருக்கிறது."

**– ஆர்.எஸ்.எஸ். தலைவர்**
**மோகன் பகவத்**



"கோயில்களில் பெண்களைத் தடை செய்தது போன்ற அநீதியான மரபுகள் மாற்றப்பட வேண்டும்; இது போன்ற முக்கியப் பிரச்சனைகள் அரசியல் மயமாக்கப்படக் கூடாது; ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரும் எந்த விதமான பாகுபாடுமின்றி கோயில்களில் நுழைய ஆர்எஸ்எஸ் அனுமதிக்கிறது; தற்போதைய காலங்களில் பெண்களே வேதங்களைப் படிப்பதோடு, கோயில்களில் பூஜையும் செய்கிறார்கள்."

**ஆர்.எஸ்.எஸ். பொதுச்செயலாளர்**
**பையாஜி ஜோஷி**

## வாசகர்களிடமிருந்து...




'கருப்பும் காவியும் இணைந்தபுள்ளி' கட்டுரை பல அரிய தகவல்களைத்தந்தது. பார்ப்பனியத்தை முதன்மையான எதிரியாக தமிழினத்துக்கு அடையாளம் காட்டிய பெரியார், அதற்குக் கருத்தியலை வழங்கும் பார்ப்பனர்களைக்கூட அவர்கள் மேலாதிக்கத்தை எதிர்த்தாரே தவிர, தனிப்பட்ட பார்ப்பனர்களிடம் பகைமை பாராட்டியதில்லை. அனல் வீசும் கருத்துக் களங்களும் அதன் வழியாக நடந்த உரையாடல்களுமே தமிழ் நாட்டைப் பண்படுத்தி உயர்ந்தன. பெரியாரின் அத்தகைய அணுகுமுறைக்கு சான்றாக பெரியார்–அடிகளார் உறவு நிலவியது.

1971ஆம் ஆண்டு சேலத்தில் "இராமனை செருப்பாலடித்த" திராவிடர் கழக ஊர்வலத்தைத் தொடர்ந்து பார்ப்பனர் –பார்ப்பனரல்லாதார் எழுச்சியைத் தமிழகம் பார்த்தது. அப்போது பெரியார் உருவப் படத்தை பார்ப்பன சக்திகள் பல பகுதிகளில் செருப்பாலடித்தபோது பெரியார் ஆத்திரப்படவில்லை. குறைந்த விலையில் எனது செருப்பையும் படத்தையும் அனுப்புகிறேன்; நன்றாக அடியுங்கள்; அதன் வழியாக எனது கொள்கைதான் பரவும் என்றார். அக்காலகட்டத்தில் காவி உடை தரித்த குன்றக்குடி அடிகளார் கூறியதுதான் மிகவும் முக்கியமானது. "இன்று ஆத்திகம் என்பது உயர்சாதி நலன் காப்பது; நாத்திகம் என்பது ஒடுக்கப்பட்டோர் நலன் காப்பது" என்று அடிகளார் கூறினார். பெரியார் பேசிய நாத்திகத்தின் உள்ளடக்கத்தை அப்படியே எதிரொலித்தார் அடிகளார்.

பெரியார்–அடிகளார் உறவு அடிகளாரை பெரியார் பக்கமே இழுத்து வந்தது என்பதற்காக இதைக் குறிப்பிடுகிறேன். இன்று 'காவிப்படை' தரம் தாழ்ந்த, வன்முறையைத் தூண்டும் பேச்சுகளைப் பேசுகின்றன. பெரியார் சிலை மீது செருப்பு வீசுகிறார்கள். ஆனால் பெரியார் கட்டமைத்த சமூகப் பண்பாடு இமயமாய் உயர்ந்து நிற்கிறது. இளைய தலைமுறைக்குத் தேவையான வரலாற்றுச் செய்திகளை வழங்கி வரும் 'நிமிர்வோம்' இதழைப் பாராட்ட வேண்டும்.

**– பெரியார் தொண்டன், பெருஞ்சேரி**

'பெண் விடுதலைக்கு வலிமை சேர்க்கும் தீர்ப்புகள்' தலையங்கம் மிகவும் சிறப்பு. தண்டனைச் சட்டத்தின் 377 மற்றும் 497ஆவது பிரிவுகளை நீக்கி உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை பெரியாரியல் பார்வையில் சிறப்பாக தலையங்கம் படம்பிடித்துக் காட்டியது. இந்தத் தீர்ப்புகள் குறித்து தமிழ்நாட்டின் கட்சிகளோ, இயக்கங்களோ, கருத்து தெரிவிக்கக்கூட முன் வராமல் தயங்கி நிற்கும்போது 'நிமிர்வோம்' பெரியாரியக் கண்ணோட்டத்தில் அதைப் பொருத்திக் காட்டி வரவேற்று எழுதியதைப் பாராட்ட வேண்டும்.

**– மகேசு, மயிலாடுதுறை**

பெல்காமில் பெரியார்–காந்திஜி–ராஜாஜி உரையாடலில் பார்ப்பனர் குறித்து காந்தி எழுப்பிய கேள்விக்கு பெரியார் தந்த பதில் அருமையிலும் அருமை! அவர் தான் பெரியார்.

**– இனியவன், இளையாங்குடி**

'பரியேறும் பெருமாள்' திரைப்பட விமர்சனம் சிறப்பாக இருந்தது. "ஆணவக் கொலைக்கு பதில் மற்றொரு கொலை என்று பழிவாங்கும் உணர்வுகளை நோக்கி நகராமல் சமூகத்தில் ஜாதி வெறிக்கு எதிரான உரையாடலையும் அந்த உரையாடலைக் கூர்மைப் படுத்தும் இயக்கங்களுக்கான தேவைகளையும் படத்தில் தீர்வாக முன் வைப்பதே இப்படத்தின் மிகச் சிறப்பு" – என்ற வரிகள் படத்தின் நோக்கத்தைத் துல்லியமாக படம் பிடித்துக் காட்டிவிட்டன.

**– மணிகண்டன் கோவை**



# அய்யப்ப ஆச்சாரம்?

கோவணம் கட்டாமல் சென்றவன்
ஜட்டிபோட்டு சென்றபோது
மாறிய ஆச்சாரம்?

வீடுமுதல் வீடுவரை
அய்யப்பன்கோவில்
நடைபயணம்
ஊர்திகளில்
பயணித்த போது
மாறிய ஆச்சாரம்?

நாற்பத்தெட்டு
நாள் விரதம் மாறி
இன்று மாலைபோட்டு
நாளை சபரிமலை
சென்றபோது
மாறிய ஆச்சாரம்?

வெறும் காலில் மலையேறி
ஒருமுடியில் இருந்த
உணவுதின்றது மாறி
உணவக வியாபாரம்
உச்சி சென்றபோது
மாறிய ஆச்சாரம்??

நெய் எரிந்த வெளிச்சம்
மின்விளக்காய்
பரிணமித்தபோது
மாறிய ஆச்சாரம்???

மலைமேல் மாலை அவிழ்த்து,
மலையிறங்கி கோவணம்
அவிழ்த்து குடி,கும்மாளம்
போட்ட சாமிகளின்
கொண்டாட்டத்தால்
மாறிய ஆச்சாரம்???

பெண்ணின் பிறப்புறுப்பில் ???
தீட்டோடு பிரவித்த
அய்யப்ப(னும்)
பக்த(னும்) பெண்களை
தீட்டென ஒதுக்குவது
தங்களின் ஆச்சார
பலகீனம் பல்லிளித்து
உலகம் சிரிக்குது,

பெண்கள் வருகை
கண்டு பீதியில் பேதியாவது
அய்யப்பனா??
அய்யப்ப பக்தனா??
ஆச்சார போர்வைக்குள்.

**- முல்லைவேந்தன் பெரியார்**

Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at
BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29,
New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN